Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
ஒக். 22-28, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 379

## கூட்டணியின் குழிபறிப்பு
## திருமலைப் பிரதிநிதித்துவம் இழப்பு

தேர்தல் பெறுபேறுகள் பற்றிய ஓர் ஆய்வு



## இன்னொரு டயானா?

## ஒரு க்ளுக்.... ஒரு குலுக்.... ரேட் 20 இலட்சம்

# முரசம்

## கூட்டணியின் பிடிவாதம்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

முரசு தேர்தல் பெறுபேறுகள்
தொடர்பாகத் தெரிவித்திருந்த
எதிர்வுகூறல்
அப்படியே நடந்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியே
மீண்டும் அதிகாரத்துக்கு வருமெனவும்,
எனினும் அதற்கு
அறுதிப் பெரும்பான்மை
கிடைப்பது ஐயமெனவும்,
சிறுபான்மைக் கட்சிகளுடன்
கூட்டரசாங்கம் அமைக்க
நேரிடுமெனவும்,
எனவே சிறுபான்மைக் கட்சிகளுக்கு
மவுசு ஏற்பட இடமுண்டு எனவும்
கூறியிருந்தது.

அவ்வாறான நிலைமைதான்
பின்னர் ஏற்பட்டது.
அதேபோல்,
யாழ்ப்பாணத்தில்
ஈ.பி.டி.பி. முன்னிலையிலும்
கூட்டணி அடுத்தும்
நிற்குமெனவும்
வன்னியில்
டெலோ வெற்றியீட்டுமெனவும்
கூறியபடியே நடந்தது.

மட்டக்களப்பில்
கூட்டணி முன்னிலையில்
இருக்குமெனவும்,
ஆனால் கடந்த முறை
அங்கு 3 ஆசனங்களைப்
பெற்ற நிலையிலிருந்து
குறையுமெனவும்
நாம் எதிர்வுகூறியபடியே
நிகழ்ந்துள்ளது.

அம்பாறையில் தமிழ்த் தரப்பில்
ஈ.பி.டி.பி. உறுப்பினர்
தெரிவாவாரெனக் கூறியதும்
பலித்தது.
இவையாவற்றையும் விட
திருகோணமலையில்
தமிழ்த் தரப்புக்கு
எந்தப் பிரதிநிதித்துவமும்
இல்லாது போகலாமெனக்
கூறியது உண்மையாகிவிட்டது.

இந்த மோசமான நிலைமை
உருவாவதற்கு
தமிழர் விடுதலைக் கூட்டணியே
காரணகர்த்தா.
திருகோணமலையில்
தமிழ் வாக்குகள் பிரிந்தால்
பிரதிநிதிகளை இழக்க நேரிடுமென
எல்லாத் தரப்பும்
படித்துப் படித்துக் கூறியும்
கூட்டணி இறுமாப்புடன்
மறுத்து விட்டதால்
வந்த வினை இது.
அங்கு கூட்டணியை
கூட்டாகச் சேர்ந்து கேட்கும்படி
நலன் விரும்பிகள்
உண்ணாவிரதம் கூட
நடத்திப் பார்த்தனர்.

ஆனாலும் கூட்டணி
மசியவில்லை.
இறுதியில்
திருமலைத் தமிழ் மக்களுக்கு
மட்டுமல்ல,
தனது தலையிலும் தானே
மண்ணள்ளிப் போட்டதாக
திருமலைப் பிரதிநிதித்துவத்தை
இழக்கவைத்துவிட்டு நிற்கின்றது.

உண்மையில்,
கூட்டணியின் இப்
பிடிவாதமான முடிவுக்குக் காரணம்
அதன் பொதுச்செயலாளரான
சம்பந்தன்
தேசியப் பட்டியலில்
தெரிவாவதற்குத் திட்டமிட்டதே.
பொதுச் சின்னத்தில் போட்டியிட்டால்
தான் தேசியப் பட்டியலில்
தெரிவாவதற்கான
கூட்டுமொத்தமான கட்சி வாக்குகளுக்கு
குந்தகம் நேர்ந்துவிடுமெனக்
கருதியே அவர்
திருமலையின் பிரதிநிதித்துவம்
இல்லாது போவதையும்
பொருட்படுத்தவில்லை.

ஆனால் ஈற்றில்
அவர் கனவுகண்ட
தேசியப் பட்டியலும்
கூட்டணிக்குக் கிடைக்கவில்லை,
அவரும் தெரிவாகவில்லை,
வேறு எவரும் திருமலையில்
தெரிவாவதற்கு விடவும் இல்லை.

இதேவேளை அம்பாறையில்
கூட்டணி போலன்றி
விவேகமாச் சிந்தித்து
கூட்டாகக் கேட்டதன் பலனாக
ஈ.பி.டி.பி. வெற்றியீட்டிக் கொண்டது.

இனிமேலும் கூட்டணி
தான் மட்டுமே தமிழ் மக்களுக்கான
ஒரேயொரு அரசியல் கட்சியென்ற
மமதையிலிருந்து இறங்கி
கூட்டாக இயங்கக்கூடிய
பக்குவத்தைப் பெறவேண்டும்
என்பதைத்தான் அவர்களுக்கு
இத்தேர்தல் முடிவுகள்
பாடம் போதிக்கின்றன.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்



## ஆன்மீக வாழ்க்கை எது?

ஒரு கடுமையான கோடையின் நடுப்பகலில் ஒரு வயதான விறகு வெட்டி மரங்களை வெட்டி முட்டை கட்டி, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தரையில் இழுத்துக் கொண்டு போனான். 'இந்தக் கஷ்டம் எல்லாம் எதற்கு? யமதர்மன் வரக்கூடாதா?' என்று முனகினான்.

அவன் பிரார்த்தனையைக் கேட்டு யமதர்மராஜனே நேரில் வந்து விட்டான். 'யமன் வந்து விட்டேன்! யமலோகம் புறப்படத் தயாராக இரு!' என்றான் யமன். உடனே விறகுவெட்டி, 'அட கஷ்டமே! அதுக்காக உன்னை அழைக்கவில்லை அப்பா! என்னால் இதைத் தூக்க முடியவில்லை. இதை உன் தலையில் வைத்துச் சுமக்க வைக்கத்தான் அழைத்தேன்! வா! எனக்கு உதவி பண்ணு! கட்டைத் தூக்கி உன் தலையில் வைக்கிறேன்!' என்றான்.

இதுபோலத்தான் நிறையப் பேர் வாழ்வில் விரக்தியாகப் பேசுவார்கள். ஆனால் வாழ்க்கையில் அவர்கள் கொண்டிருக்கும் பற்று அபரிதமாக இருக்கும். உண்மையான ஆன்மீக வாழ்க்கைக்கு இன்னும் அவர்கள் வரவில்லை.

ரீ.குணவர்த்தன–களுவாஞ்சிகுடி.

## தானாகத் தேடிவருவதே பதவி

தலைமை என்பது நம்பிக்கையும், கடமையும், கட்டுப்பாடும், பொறுப்பும் வாய்ந்த ஒரு பதவியாகும். ஆனால், இன்றோ நிலை வேறு.

நாயகத்தோழர் ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் "நாயகமே! அல்லாஹ் தங்களுக்களித்த ஊர்களில் ஏதாவது ஒன்றில் என்னை அதிகாரியாக நியமித்து விடுங்கள்!" என்று வேண்டினார். அதற்கு நபியவர்கள் "அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயமாக நாம் இந்த வேளையில் அதை வேண்டுபவரையும், அதில் பேராசை கொண்டவரையும் நியமிக்க மாட்டோம். அது தானே வரவேண்டியது. அதிகாரம், பதவி என்பவை கேட்டுப் போகக் கூடாதவை. விரும்புபவர்களுக்கு அவை கொடுக்கப்பட்க்கூடாதவை. தகுதி, திறமை உள்ளவர்களுக்கே வழங்கப்படக் கூடியவை!" எனக் கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் அபூசர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நாயகமே! தாங்கள் என்னை எதற்கும் நியமிப்பதில்லையே" என்று நபி(ஸல்) அவர்களிடம் வினவினேன் அதற்கு நபியவர்கள் "அபூசர்ரே! நிச்சயமாக நீர் ஒரு பலஹீனமானவர். இஃது ஒரு நம்பிக்கையான வேலையாகும். அன்றி மறுமை நாளில் இதனால் இழிவையும், துன்பத்தையுமே அடைய நேரிடும். ஆனால், அதன் கடமைகளை, பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றி வருபவர்களைத் தவிர". "(ஆதாரம்-திர்மிதி)

நன்றி-இஸ்லாமிய சமூகமைப்பும் முஸ்லிம்களும். வை.எம்.தாஹிர்கரீம்–கல்முனை–06.

## காவலாளி

நாளுக்கு நாள் அழிவுகளும், அனர்த்தங்களும், கொடுமைகளும், பெருகிக் கொண்டு போகின்ற போது, யார் மாண்டால் நமக்கென்ன. என்ற மனவுணர்வோடு வாழ்கின்ற பலரை நாம் சந்திக்கின்றோம். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்த போது, கடவுள் தேடி வந்து, உரிமையோடு பெயர் சொல்லி "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே....? என்ன செய்தாய்....? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது," என்று; காயீனை கடவுள் விசாரிக்கின்றார். "நான் அறியேன் என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்று காயீன் கேட்கிறான்.

இவ்விதமாகவே இன்றும், அனேகர் ஏன் நமக்கு வீண் தொல்லை, அவன் எனக்கு யார்? அவன் எனக்கு என்ன செய்தான்? சொந்தமா பந்தமா? என்று தன் பாட்டிலே. இருந்து விடுகின்றார்கள். ஆனால் கடவுள் நம் ஒவ்வொருவரையும் மற்றவர்களுக்கு காவலாளிகள் என்று கூறுகின்றார். "மனுபுத்திரரே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவற்காரனாக வைத்தேன், ஆகையால் நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக (எசே 33:7) எனவே, இனமதமொழி வெறுபாடின்றி அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் உபத்திரவங்களுக்கும் உயிர் அழிவுகளுக்கும், எதிராக குரல் எழுப்பவும், தட்டிக் கேட்கவும், எச்சரிக்கவும், நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா? எஸ்.யேசுநாதன்–துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.379




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 28.10.2000

கவிதைப் போட்டி இல.379
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.376

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### பரிசுக்குரிய கவிதை

### தடுக்க முடியுமா?

இயற்கையை அழிக்கத்
துடிக்கும் மானிடனே!
உன் இனத்தின் அழிவை
தடுக்க உன்னால் முடியவில்லையே!

சி.சசிதரன்–கொழும்பு–13.

### கொடை

செத்தும் கொடைக்கு
சீதக்காதியாம்,
முல்லைக்கு தேர்
பாரி வள்ளலாம்,
இந்த ஏழை விறகு வெட்டிக்கு
யார் தானோ?
ஏன்தானோ என் பெயரும்
சரித்திரத்தில் இல்லை,
நான் காய்ந்தால் என்ன,
நிச்சயம் என்கொடைக்கு,
உன் வயிறு மட்டும் காயாது!

ஜே.எம்.நஸீர்–உக்குவெல.

### விறகு வெட்டி

நாடு மட்டுமல்ல;
யுத்தத்தால் காடும்
பாதிப்பென்றால்....
ஏது பிழைப்பு.....
விறகு வெட்டிக்கு?

கே.அன்ரனி–உவர்மலை.

### பட்டமரம்

மனிதன் மாண்டிடில்
பயனில்லை எவர்க்கும்.
மரமோ மாண்டிடினும்
பட்டமரமாகிடினும்
பற்பல பயன்களுண்டு,
அதனால் மானிடர்க்கு!

ரீ.ஜே.ஏ.ஜான்–மூதூர் 02.

### துணிவு

போரிற்குப் பின்
இடியையும் பிடிப்போம்!
எரிமலை பக்கத்திலும் குடியிருப்போம்
விறகு வெட்டுவது சிம்ம சொப்பனம்!

எஸ்.கண்ணாளன்–மன்னார்.

### புதுமை

நிலம் பார்த்து இருப்பது பழுது
போர்கண்டு பொலிவு கொண்டது மனது
யாரோடும் சொல்லி அழ முடியாத பொழுது
வேரோடு மரம் வீழ்த்தப்புறப்பட்டாள் நிலவு

என்.தக்ஷாயினி–மன்னார்.

### எரிப்பதற்காக?

நான் பட்ட மரத்தை,
வெட்டி விறகு,
எடுக்கப் போவது,
சமைப்பதற்காக,
அல்ல;
ஷெல் தாக்குதலினால்,
இறந்து போன,
எம் மக்களை
எரிப்பதற்காக!

ஜீ.எச்.கே.அஜந்த–
அக்கரைப்பற்று 08.

### சு(இ)டுகாடு

நாட்டில் வாழ வழியில்லை.
காட்டில் பிழைப்பு நாடி வந்தால்,
அனுமான் எரித்த லங்காபுரிபோல்
சுடுகாடாய்க் கிடக்கிறதே....

எஸ்.ஞானராஜா–வாழைச்சேனை.

### கோடாரி காம்பு

நீயே காம்பாக மாறி....
உன் இனத்தையே
அழிக்கின்றாயே?

ம.பிரியா–கல்லடி.

### பாவி மனிதா!

பச்சை மரம் என்னை
வெட்டி வெட்டி நீ வளர்ந்தாய்.
பட்ட மரம் ஆனபின்னும்-பயன்
பருகப் பார்க்கின்றாயே;
பாவி மனிதா....!
இதுதானோ மனித குணம்?

எம்.விஜி–நோவூட்.

### பயங்கரம்

பட்ட மரமாய்
பட்ட மரத்தை நோக்கி
பட்டயத்தோடு போகிறாயோ?
பட்டயால் வேலி கட்ட! ம் ம்!
நடக்காது!
பத்திரமாய் ஓடிப் போ....
பாதுகாப்பின் பேரில்
பயங்கரவாதி என்ற
பட்டமே வந்து விடும்
உனக்கு...!

என்.பாலசுந்தரம்-அல்கரனோயா.

### அழிக்காதீர்!

சூழலைக் காக்க
வளங்களைப் பேண
உயிரினங்கள் வாழ
பறவைகளுக்கும்
எம் அகதிகளுக்கும்
புகலிடம் தரும்
மரங்களை அழிக்காதீர்!

ச.ஷாயிஷதுர்சன்-வேலூர்.

# வாசக[ர்]சாலை




முரசு....

இதைப் படித்தால்தான் எங்கள் மனங்களில் மகிழ்ச்சி....

உனது பக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்துக்கள். முரசு 374இல் 1994ம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலின் நடவடிக்கைகள் தொடர்பாக நாரதர் வழங்கிய 'எக்ஸ்ரேரிப்போர்ட்'. இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தலுக்கும், சம்பவங்களுக்கும் பொருத்தமாகவே உள்ளது. -சபாஷ்.... பாராட்டுக்கள்!

'செய்திச் சிதறல்', 'அதிரடி ஐய்யாத் துரை', 'தகவல் பெட்டி', 'தேன் கிண்ணம்', 'சிறுகதைகள், தேன் தொட்டால் 'வீட்டுக் கடன், தேர்தல்', மிகவும் சுவைபட இருந்தது.

'கண்ணிவெடியில் சிக்கிய யானை' தகவலையும் புகைப்படத்தையும் பார்த்தேன், நமது நாட்டிலும் கண்ணிவெடியில் சிக்கி தங்கள் கால்களை ரணமாக்கி தவிப்போடு நிற்கும் பல மனித நேயங்கள் மத்தியில், இந்த தாய் லாந்து நாட்டு யானை உண்மையில் கொடுத்து வைத்த யானைதான்.

இவற்றையெல்லாம் தாங்கி என் கரம் வந்து கிடைக்கும் முரசுக்கு வாழ்த்துக்கள்.

புதிய காத்தான்குடி முஸாமில்-குவைத்.

---

என் அன்பின் முரசே!

வாரம் தோறும் நீ அள்ளி வழங்கும் பல சுவையான அம்சங்கள் பிரமாதம். இருபது பக்கங்களைக் கொண்ட முரசு ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு விதம். நான் எப்போதும் வியாழக்கிழமை வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன். அதுவரையும் எனது மனதில் நிம்மதியே இல்லை. வியாழக்கிழமை வந்ததும். என் மனதில் பாலை வார்த்த மாதிரி இருக்கும்.

வீ.குணசேகரம்–
கொழும்பு 11.

---

என் இதயத்தில் இடம் பிடித்த தினமுரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்றன. உன் வரவுக்காய் வியாழன் தோறும் வழிமேல் விழி வைத்து பார்த்து இருக்கும் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமைப் படுகின்றேன்.

கலைப்பிரியன் வேணு–
பெரியநீலாவணையூர் 01.

---

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074–514282
தொலை நகல் (Fax):– 074-513266

---

தமிழர்களை விழிக்கவைக்கும் எம் இனிய தின முரசே!

என்னவென்று சொல்லுவதம்மா உன் திறமையை.....! தமிழர்களின் கடந்த கால நிலையையும், இன்றைய நிலையையும் நாளைய நிலையையும். அழகு தமிழில் இனிமையாய் விளங்கவைப்பது மட்டுமல்லாமல், நம் தமிழ் மொழியின் பெருமையையும் புரியவைத்த உனது முத்தான ஒவ்வொரு இதழின் பக்கங்களும் தனி ஈர்ப்பு சக்தியையே கொண்டுள்ளது.

உனது அரசியல் தொடர் ஒவ்வொன்றும் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

இனிய முரசே! உன்னை பற்றி என் நண்பனின் மூலமே அறிந்து கொண்டேன். என்னை நல்வழிபடுத்திய உனது ஒவ்வொரு வாக்கியமும் மேலும் பல தமிழர்களை நல்வழி படுத்த வேண்டும். என்றும் நீ இனிதே மேலும் வளர வேண்டும், என்றும் இதயம் கனிந்து வாழ்த்துகின்றேன்.

முரசின் ஆசிரியருக்கு எனது நன்றிகள் பல....

நாவலப்பிட்டி–த.பிரபா.

---

என் அன்பின் முரசே!

வார ஆரம்பத்தில் நீ மொட்டாக இருந்து வார நடுப்பகுதியில் நீ மணம் வீசும் மலராக மலர்ந்து உண்மைச் செய்திகளையும் மன்னாதிமன்னன் கதையும் சினிமா செய்தியும் சுமந்து என் கரம் வந்து நீ சேரும் போது என்னையறியாமல் உன் சேவையை நினைத்து ஆனந்தக் கண்ணீரும் விட்டு இருக்கின்றேன். என்றும் உன் சேவை பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

எஸ்.விக்னேஸ்–துறைநீலாவணை 08.

---

எனது அபிமான முரசே!

உள்ளதை உள்ளபடியே தெட்டத் தெளிவாக கூறுவதில் உனக்கு நிகர் நீயே தான்! உண்மையின் விம்பம் நீ, உனது அனைத்து அம்சங்களும் சூப்பர், உன்பணி இன்று போல் என்றும் தொடர அனைத்து வாசகர் சார்பிலும் என் வாழ்த்துக்கள்.

ந.ஜினோஜிகா–கரைதீவு–03.

---

அன்பின் இனிய முரசே!
உன்னுடைய அழகிய முகப்பு
தெளிவுறு அச்சு தெள்ளியகருத்து
என்னைக் கவர்ந்தவை ஒவ்வொரு
பக்கமும் சுவையாகவும் இனிமையாகவும்;
கவிதைகள் படிப்பதற்கு சுவையாகவும்
உள்ளன. மற்றும்
அனைத்து ஆக்கங்களும் சூப்பரோ
சூப்பர். முரசு மென்மேலும் வளம்
பெற வாழ்த்துகிறேன்.
வாழ்க! முரசு வளர்க! மலர்

எம்.அப்துல் ஹகீம்-சிங்கப்பூர.

---

அன்பின் இனிய முரசே!

வாரத்திற்கு வாரம் வலம் வந்து வசந்தம் அளிக்கும் உனக்கும் உனது குடும்பத்திற்கும் எனது இனிய வாழ்த்துக்கள்.

மேலும் நீ சுமந்து வரும் 'அதிரடி அய்யாத்துரை', 'பாப்பாமுரசு', 'சிறுகதைகள்', 'மோனிக்கா என் மோனிக்கா', 'கடி ஜோக்ஸ்', 'மன்னாதி மன்னன்', 'ஸ்போர்ட்ஸ்', 'இலக்கிய நயம்', 'சினிமா காட்சிகள்' என் மனதை மிகவும் கவர்ந்தவை. எல்லா சேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவும். உனது சேவை என்றென்றும் வளர வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். வாழ்க முரசு, வளர்க தமிழ்.

ஆர்.கிருஷ்ணகுமார்–நமுனுகுல.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

## இலட்சக் கணக்கில் வாக்குகள் நிராகரிக்கப்படும் தேர்தல் முறை மாற்றப்படவேண்டும்!

இன்று நடைமுறையிலிருக்கும் விகிதாசார முறையிலான பொதுத் தேர்தல் இந்த நாட்டுக்குப் பொருத்தமாக அமையவில்லை? என்று பல அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்கு வரும் வாக்காளர்கள், வாக்குச் சீட்டைப் பெற்றதும், எவ்வாறு தங்கள் வாக்குகளைச் செலுத்துவது என்பதையிட்டு தடுமாற்றமடைகின்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

படிப்பறிவில்லாத பாமரமக்கள் மட்டுமல்லாமல் படிப்பறிவுள்ள பெரும்பாலான மக்களும் கூட தவறுதலாகவே வாக்குச் சீட்டில் அடையாளமிடுகின்றனர். சர்வஜன வாக்குரிமை இந்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட காலத்தில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒவ்வொரு வர்ணம் கொடுக்கப்பட்டது. அந்த ஒவ்வொரு வர்ணத்துக்கும் ஒவ்வொரு பெட்டி வீதம் வாக்களிப்பு நிலையங்களில் வைக்கப்பட்டன. தான் தெரிவு செய்ய விரும்பும் வேட்பாளருடைய வர்ணப் பெட்டிக்குள் வாக்குச் சீட்டைப் போடுவதன் மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இதன் பின்னர் கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் அடையாளச் சின்னங்கள் வழங்கப்பட்டன. தமக்குரிய வேட்பாளரின் சின்னத்துக்கெதிரே புள்ளடியைப் போட்டு வாக்குப் பெட்டிகளுக்குள் போட்டுவிடும் முறை நடைமுறையில் இருந்தது.

இன்றுள்ள நிலையில் கட்சிச் சின்னத்தைத் தேடிப் பிடித்து அதற்கு முன்னே புள்ளடி இடப்படுகிறது. தொடர்ந்து தமக்கு விருப்பமான வேட்பாளர்கள் மூவருக்கும் அவரவர்களுடைய இலக்கங்களுக்கு முன்னால் அடையாளமிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் சீட்டுகள் போடப்படுகின்றன.

இந்த முறையில்தான் பெரும்பாலான வாக்காளர்கள் தவறுகளை விடுகின்றனர்.

ஒரே தொகுதியில் ஏராளமான வேட்பாளர்கள் போட்டி போடும்போது, அவர்களுடைய இலக்கங்களை வாக்குச் சீட்டில் கண்டுபிடிப்பது வாக்காளர்களுக்கு சிரமமாக இருக்கின்றது. இதன் காரணமாக குழப்பமடையும் வாக்காளர், தவறான இடங்களில் அடையாளத்தை போட நேரிடுகிறது. இதன் பயனாக செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுகள் தொகை அதிகரிக்கின்றன.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 91 இலட்சத்து 28 ஆயிரத்து 823 வாக்குகள் செலுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 86 இலட்சத்து 47 ஆயிரத்து 668 வாக்குகள் செல்லுபடியானவை. 4 இலட்சத்து 81 ஆயிரத்து 155 வாக்குகள் செல்லுபடியாகாத வாக்குகள் என நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஏறத்தாழ 5 இலட்சம் வாக்காளப் பெருமக்கள் வாக்குகளைச் செலுத்தியும் அவை பயனற்றுப் போயுள்ளன. இன்றுள்ள வாக்களிப்பு முறையிலுள்ள குறைபாடுதான் இந்தக் கணிசமான தொகை வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளன. எனவே இத்தகைய வாக்களிப்பு முறை பொருத்தமற்றது என்பதைச் சுட்டிக் காட்டி, கூடுமானவரை வாக்களிக்கும் உரிமை பெற்ற ஒவ்வொருவருடைய பெறும்தியான வாக்கும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய முறையில் தேர்தல் சட்டம் திருத்தியமைக்கப் படவேண்டும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## சமாதான சகவாழ்வுக்கு அடிகோலும் மக்கள் அளித்துள்ள மகத்தான தீர்ப்பு!

இந்த நாடு இன்றுள்ள நிலையில் எத்தகைய பாதையில் செல்ல வேண்டுமோ அத்தகைய பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. 'பெரும்பான்மையினரான சிங்கள மக்களும் சரி, சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களும் சரி, இருதரப்பினரும் இம்முறை தேர்தலில் எடுத்துள்ள முடிவு நிச்சயமாக ஒரு நல்ல முடிவுதான்' என்று சகல தரப்பினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பல்லாண்டு காலமாக இந்நாட்டைக் குட்டிச்சுவராக்கும் இனப்பிரச்சனைக்கு முடிவு கட்டப்படவேண்டும் என்பதில் பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதை இத்தேர்தல் மூலம் நாட்டு மக்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

'இந்த நாடு ஒரு பௌத்த சிங்களநாடு; இந்த நாட்டில் வாழும் முழு உரிமையும் பௌத்த சிங்கள மக்களுக்கே உரியது' என்று கொக்கரித்த சிங்கள பேரினவாதச் சக்திகள் அத்தனையையும் பெரும்பான்மையின சிங்கள மக்கள் ஒதுக்கித் தள்ளிவிட்டனர். பேரினவாதக் கொடியை உயரப்பிடித்துக் கொண்டு கூக்குரலிட்டவர்களுக்கு பௌத்த மகா சங்கத்தினரே பேராதரவு வழங்கினர். ஆட்சியதிகாரப் பீடத்தில் இருந்த சில பிரமுகர்களினுடைய ஆதரவும் ஆசீர்வாதமும் கூட இப்பேரினவாதச் சக்திகளுக்கு துணை நின்றன. இருப்பினும் சிங்களப் பொதுமக்கள் இவர்களுடைய கூக்குரலை ஒதுக்கித் தள்ளிவிட்டு சிறுபான்மை மக்களுடன் பெரும்பான்மையினரும் இணைந்து வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்கே தங்கள் வாக்குகளை அளித்துள்ளனர்.

இதுகாலவரை பட்ட துன்பங்கள் போதும்; இந்த நாட்டில் பெரும்பான்மையின மக்களுடன் சரிசமமாக வாழும் உரிமைகளைப் பெற்று ஒன்றுபட்டு வாழ்வதற்கான வழிமுறைகளை வகுத்து, தருபவர்களுடன் இணைந்து வாழ்வதே சிறுபான்மையின மக்களுக்கு உகந்த வழியாகும் என்று தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்கள் தீர்க்கமாக ஆலோசித்து முடிவெடுத்திருக்கின்றனர், என்பதையே வட-கிழக்கில் வாழும் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

பெரும்பான்மை மக்களும்சரி, சிறுபான்மை மக்களும்சரி இந்த நாட்டில் தொடரும் யுத்தத்தின் கோரப் பிடியினால் பெரும் துன்பக் கடலாடுகின்றனர். ஆகவே இன்று மக்கள் அளித்துள்ள தீர்ப்பின் அடிப்படையில் உருவாகியுள்ள அரசாங்கம் கூடிய விரைவில் யுத்தத்துக்கு முடிவுகட்டி, சமாதான-சகவாழ்வு மலர வழி வகுக்க வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

## மட்டக்களப்பில் ஹர்தால்?

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் முடிவுகள் அப்பிராந்தியத்தில் பலத்த சர்ச்சைகளை உருவாக்கியிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் பொன்.செல்வராசா ஆகிய இருவரும் பகிரங்கமாகவே கோதாவில் இறங்கி மல்யுத்தம் புரிவதற்கு முன்வந்துவிட்டதாகவே தெரிகிறது.

கூட்டணி தலைமை வேட்பாளரான ஜோசப் பரராஜசிங்கம் கடந்த முறைத் தேர்தலில் பெற்றிருந்த அதிகப்படியான விருப்பு வாக்குகளைவிட மிகக் குறைந்த மேலதிகவாக்குகளைப் பெற்றே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவருக்குக் கிடைத்த வாக்குகள் அவரை, தேர்தலில் தோல்வி அடைய வைத்துள்ளன என்றும் பல மோசடிகளின் மூலம் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது என்றும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

திரு.பரராஜசிங்கம் பல மோசடிகளுக்கும் இடம் கொடுத்து தேர்தலில் வெற்றியீட்டியமையினால் மட்டக்களப்பு மக்கள் 17ம் திகதியன்று செவ்வாய்க்கிழமை மாவட்டம் முழுவதும் ஹர்தால் அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறி மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரிலுள்ள பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்ததாகவும் நகரம் வெறிச் சோடிக் கிடந்ததாகவும் எமது நிருபர் அறிவித்துள்ளார். ஆனால் அரசாங்க அலுவலகங்கள் இயங்கின. போக்குவரத்தும் பாதிக்கப்படவில்லை.

## கிழக்கில் தொடர்ந்து பதற்றமும் பகைமையும்!

கிழக்கிலங்கையின் பெரும்பாலான முஸ்லிம் பகுதிகளில் இன்னமும் தேர்தல் தொடர்பான வன்முறைகள் ஓய்ந்தபாடில்லை.

எனினும் நாட்டின் வேறு பகுதிகளில் ஏற்பட்டிருந்த பகைமையுணர்வுகள் பெரும்பாலும் தணிந்து போயுள்ளன.

கிழக்கின் தமிழ்ப்பகுதிகளில் நடந்து முடிந்த தேர்தலைப் பற்றிய அக்கறை எதுவுமின்றி மக்கள் தமது நாளாந்த வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர்.

ஆனால் கிழக்கின் முஸ்லிம் பகுதிகளில் வன்முறைகளும் பகைமையும் தொடர்ந்த வண்ணமுள்ளதால் பாதுகாப்புத் தரப்பினருக்குப் பெரும் தலையிடியாக உள்ளது. இதனால் பொலிஸார் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர்.

மாற்றுக் கட்சிக்காரர்களால் நடக்கும் வன்முறைகளை விட உட்கட்சிக்காரர்களின் பிரதேசவாதப் பூசல்களே அதிகம் தலைவிரித்தாடுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடிப் பகுதிகளிலும், அம்பாறையில் அக்கரைப்பற்று, கல்முனைப் பகுதிகளிலும் தேர்தலையொட்டிய வன்முறைகள் ஆங்காங்கே தளிர் விட்டுக் கொண்டிருக்கின்றன.

தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பிரதேசப் பகைமை மிகமோசமான கட்டத்தை அடைந்து ஊர்ப் பகையாக உருவெடுத்துள்ளது. பிரதியமைச்சராக இருந்த ஹிஸ்புல்லா காத்தான்குடியைச் சேர்ந்தவர். இவருக்கு வாக்களிக்கக் கூடாது என்று ஏறாவூரைச் சேர்ந்த (முன்னாள் ஈரோஸ் தேசியப் பட்டியல் எம்.பி) பஷீர், சேகுதாவூத் மற்றும் ஓட்டமாவடியைச் சேர்ந்த எம்.ஏ.காதர் ஆகியோர் மேடைகளில் திட்டித் தீர்த்தனர். இவர்கள் எல்லோரும் ஒரே கட்சியாக தேசிய ஐக்கிய முன்னணியின் கீழ் போட்டியிட்ட போதிலும் இவர்களது உட் கட்சிப்பூசலும் பிரதேசவாதமும் மேடைகளில் ஒருவரையொருவர் கேவலமாகப் பேசியதும் பெருத்த அவமானமாக இருந்தது.

அதன் வெளிப்பாடே இன்று ஊர்ப் பகையாக உருவெடுத்து ஒருவரையொருவர் மிக மோசமாகத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

## யாழில் தொடரும் செல்–துப்பாக்கி மழை

(யாழ் நிருபர்)

கடந்த வைகாசித் திங்கள் இடம் பெயர்ந்த மக்கள் இன்று வரை, 'நாளை வருவோம், நாளை மறுநாள் வருவோம்' என்று நம்பி ஏமாந்து விட்டனர். தேர்தலுடன் யுத்தமும் முடிந்து விடும் என்ற எதிர்பார்ப்பு பெரும் ஏமாற்றமாகிவிட்டது. கடந்த 15ம் திகதி ஞாயிறு இரவும் துப்பாக்கி ரவைகள் பெரும் சத்தத்துடன் யாழ் கோட்டையை அண்டிய பகுதிகளில் வந்து விழுந்தன.

மக்கள் தமக்கிருந்த பொருள், பண்டங்களை இழந்தது மட்டுமல்ல, எஞ்சியிருந்த ஒரு சொட்டு நிம்மதியையும் இழந்து விட்டனர். வெறும் நடைப் பிணங்களாக அலைந்து திரியும் யாழ் வாசிகளுக்கு எப்போது விடிவு வரும் என்று தெரியவில்லை. மீண்டும் ஹெலிக்ஹொப்ரர்கள் பதிவாகப் பறந்து செல்கின்றன. ஒவ்வொரு இதயமும் தன்னையறியாமலே தடுமாறுகின்றது. மனத்திடன் என்ன என்று அறிய முடியாத நிலைக்குத் தள்ளப் படுகின்றது யாழ் குடாநாடு கையிழந்து, காலிழந்து மனிதன் வாழகிறான். ஆனால்மனம் ஒடிந்து வாழ முடியாது.யார் யாருக்கு ஆறுதல் கூற முடியும். ஊரடங்கு அமுலில் இருக்கும் போது சனநடமாட்டமின்மையால் நிலவுகின்ற நிசப்தத்தைக் குலைக்கவா இந்த அதிர் வேட்டுக்கள், வோட்டுக்கள் போட்டு முடிந்ததும் இந்த வேட்டுக்கள் ஏன் தீரவில்லை? என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## கண்டியில் 3 முஸ்லிம் எம்.பிக்கள்

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்ட அரசியல் வரலாற்றில் முதன் முறையாக மூன்று முஸ்லிம்கள் எம்.பீக்களாக வந்திருக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் ஜனாப் ஏ.ஸி.எஸ். ஹமீத்தின் மறைவின் பின்னர் அவரது மருமகனும் முன்னாள் ம.மா.அமைச்சர்களுள் ஒருவருமான ஜனாப் எம்.எச்.ஏ. ஹலீம் முதல் முறையாக 45.177 வாக்குகளைப் பெற்று எம்பியாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

முன்னாள் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான ஜனாப் றவூப் ஹக்கீமும் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

கண்டி மாவட்ட ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட முன்னாள் எம்.பி. ஜனாப் ஏ.ஆர்.எம். ஏ.காதரும் 58365 வாக்குகளைப் பெற்று இம்முறை பாராளுமன்றத்தில் இடத்தை மீண்டும் பெற்றுள்ளார்.

## 99 சுயேச்சை அணிகளில் ஒன்று மட்டும் தெரிவு!

அம்பாறையில் (திகாமடுல்ல) தமிழர் மகாசங்கம் உட்பட பல்வேறு சமூக சிந்தனையாளர்களும் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பயனாக அங்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒன்றுபட்டு சுயேச்சையாகப் போட்டியிடுவதன் மூலம் ஒரு தமிழ்ச் சமூக எம்.பியைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளுக்கெல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணி முட்டுக் கட்டையாகவே இருந்து வந்தது.

எனினும் கூட்டணியினரின் வேட்புமனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

தேர்தலில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சுயேச்சை அணி-2 இல் போட்டியிட்ட மா.குணசேகரம் (சங்கர்) அம்பாறை மாவட்ட எம்.பி.யாக அந்த மாவட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு 13505 விருப்பு வாக்குகள் கிடைந்தன.

இந்த பாராளுமன்றத் தேர்தலில்தான் மொத்தம் 99 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன. எனினும் அவற்றில் 98 சுயேச்சை அணிகள் தோல்வியைத் தழுவின.

## புலிகளைக் குறி வைத்து வைக்கப்பட்ட குண்டு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி பழுகாமம். கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் அங்கு எதிர்பாராத விதமாக குண்டொன்று வெடித்தது. எனினும் புலிகள் தரப்பில் எவரும் உயிரிழக்கவோ காயப்படவோ இல்லை. ஆனால் குண்டைப் பொருத்தியவர் என்று சந்தேகிக்கப்படும் நபர் உடல் சிதறி மாண்டார்.

புலிகள் தமது எதிரிகளைக் குறி வைத்து நடத்தும் தாக்குதல் பாணியிலேயே தற்சமயம் புலிகளின் இலக்குகளைக் குறி வைத்தும் தாக்குதல்கள் திட்டமிடப்படுகின்றன என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னரும் ஒரு தடவை அப்பகுதியில் இதே மாதிரியான குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

குண்டு பொருத்தியவர் அதனைப் பத்திரமாகப் பொருத்தாது தவறவிட்டதாலேயே அவரே குண்டுக்குப் பலியாகியுள்ளார். புலிகளின் புலனாய்வு அலுவலகம் என்று கருதப்படும் குண்டு வெடித்த அந்த இடத்தில் அப்பொழுது புலிகள் எவரும் இருக்கவில்லை.

## தேர்தல் தின மோசடிகள் கண்டியிலேயே அதிகம்?

(கண்டி நிருபர்)

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்திலேயே வன்செயல்களும் மோசடிகளும் அதிகமாக இடம் பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்களினது தெரிவாட்சி உத்தியோகத்தர்களினதும் அறிக்கையின் பின்னர் தேர்தல் ஆணையாளர் திரு.தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் இந்த மோசடிகள் பலவும் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம்கள் வாழும் கிராமங்களிலேயே பெரும் அளவில் இடம் பெற்றிருக்கின்றன. பொ.ஐ.மு. சார்பில் போட்டியிட்ட இருவரின் ஆதரவாளர்களின் அடாவடித்தனங்களினாலேயே இந்த ஆத்திர மூட்டும் சம்பவங்கள் கண்டியில் இடம் பெற்றன.

இதனால் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகள் பல வீணாகிப் போய் விட்டதாகவும் போட்டியிட்ட வேட்பாளர்கள் தெரிவிக்கின்றார்கள். இந்த நிலையை அடுத்து வெகுவாகப் பாதிக்கப்பட்ட இ.தொ.கா. வேட்பாளர் திரு.துரை மதியுகராஜா, ஐ.தே.கட்சி வேட்பாளரும் முன்னாள் எம்பியுமான திரு.எஸ்.இராஜரட்ணம் தே.ஐ.முன்னணி சார்பில் போட்டியிட்ட ஜனாப் றவூப் ஹக்கீம் ஆகியோர் இந்த அடாவடித்தனம், மோசடி பலவும் குறித்து வேதனையுடன் அதிருப்தியும் தெரிவித்தனர்.

கண்டி மாவட்ட தேர்தலில் வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்ட வேளையில் அங்கு இடம் பெற்ற இந்த மோசடியினால் கண்டி மாவட்டத்தில் 13 வாக்களிப்பு நிலையங்களின் வாக்குகள் அப்புறப்படுத்தப்பட்டன எனவும் தேர்தல் ஆணையாளர் தமது இறுதி தேர்தல் முடிவு அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

## மாகாணசபை உறுப்பினர்கள் எம். பி. க்களானார்கள்!

கண்டி நிருபர்

கண்டி மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் மூவர் எம்பிக்களாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவர்களின் இடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் இடம் பெற இருக்கின்றனர்.

மத்திய மாகாண சபை சுகாதார அமைச்சர் திரு.மகிந்தானந்த அலுத்கமகே (பொ.ஐ.மு) இத்தேர்தலில் 3ம் இடத்தைப் பெற்றதால் மாகாண சபை தேர்தல் முடிவு பட்டியலில் கடைசியாக இடம் பெற்றிருப்பவரான முன்னாள் சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும் இந்நாள் தேர்தலில் போட்டியிட்டவருமான டாக்டர் எச்.எம்.மஹ்ரூப் அவரது இடத்திற்கு நியமனம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளையில் ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட்ட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் திரு.கெஹலிய ரம்புக்வெல்ல (கண்டி) திரு.ரஞ்சித் அலுவிகாரை (மாத்தளை) ஆகிய இருவரும் பொதுத் தேர்தலில் எம்பீக்களாயினர். இவர்களது இடத்திற்கும் பட்டியல் மூலமாக இருவர் மாகாண சபைக்கு வர இருக்கின்றனர்.

மத்திய மாகாண முதலமைச்சர் திரு.நந்தமித்திர ஏக்கநாயக்க மாத்தளை மாவட்டத்தில் இருந்து வெற்றிபெற்றதையடுத்து புதிய முதலமைச்சராக முன்னாள் ஹேவாஹெட்டை எம்.பீயும் தற்போதைய மாகாண சபைத் தலைவருமான திரு.மகிந்த அபயகோன் நியமிக்கப்படலாம் எனவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

## புதிய பாராளுமன்றத்தில் எட்டு பெண் உறுப்பினர்கள்!

இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் இரண்டு முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

இதில் முதலாவது பெண்மணியாக ஏ.ஆர்.அம்ஜான் உம்மா இடம் பெறுவார்: இவர் ஜே.வி.பி.மூலம் அதன் தேசியப்பட்டில் எம்பியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஏற்கெனவே இவர் மாகாணசபையின் உறுப்பினராகவும் இருந்த முதல் முஸ்லிம் பெண்ணாகும். ஜனாபா பேரியல் அஷ்ரஃப் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவர் காலஞ்சென்ற அஷ்ரஃப்பின் இடத்திற்காகத் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் இம்முறை பாராளுமன்றத்திற்கு மொத்தம் எட்டுப் பெண்கள் தெரிவாகியுள்ளனர்.

மொனராகலையிலிருந்து சுமேதா ஜி.ஜயசேன, புத்தளத்திலிருந்து ஸ்ரீயாணி பெர்னாண்டோ, அனுராதபுரத்திலிருந்து சந்திராணி பண்டார, குருநாகலிலிருந்து அமராபியசீலி ரத்நாயக்க, இரத்தினபுரியிலிருந்து பவித்திரா வன்னியாராச்சி, சுரங்கனி எல்லாவெல ஆகியோரே அந்தப் பெண் எம்பிகளாவர்.

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வன் நா.அபிஷேக் 18.10.2000

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகேந்திரன்-கமலேஸ்வரி தம்பதியினரின் செல்வப் புதல்வன் அபிஷேக் தனது முதலாவது பிறந்த நாளை புதுகுடியிருப்பிலுள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

அபிக் குட்டியை அன்பு அப்பா-அம்மா, லண்டன் சித்தப்பாமார்களான குமார், பாஸ்கரன், சதீஸ், காந்தன், சந்திரன், ஹொலண்ட் மாமா பிரபா, புதுக்குடியிருப்பில் வசிக்கும், அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார் உதயன், ரவி, ரூபன், மாமா துசியந்தன் பூட்டன், பாட்டி, மாமிமார், மேனகா, நிழுஷா ஹொலண்டில் இருக்கும் அம்மம்மா, சிலாபத்தில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தைமார்கள், உற்றார் உறவினர், நோர்வே அப்பப்பா குடும்பம், லண்டன் அம்மப்பா குடும்பம், ஜெர்மன் அப்பப்பா குடும்பம், லண்டன் மாமாவாகிய துவாரகன் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் புதுக்குடியிருப்பு காட்டமணக்கு பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வூழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: சித்தப்பா சந்திரன், லண்டன்.

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி.நிஷாதனா 14.10.2000

சுவிஸில் வசிக்கும் அருட்குமரேசன்-சதானந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வி நிஷாதனா தனது முதலாவது பிறந்த நாளை 14.10.2000 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பாமார்கள், அக்காமார்கள், அண்ணன்மார்கள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரை இறைவன் அருளால் பல்கலையும் கற்று பெருவாழ்வு வாழ்க என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.


தகவல்: சி.பாலகிருஷ்ணன், சிலாபம்.


உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

SINGHA HOLDINGS (PVT) LTD

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.

T.P : 888214 Fax : 682984


# விளம்பரப் பகுதி

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## ராம்பிரகாஸ் (அஜய்)

17.10.2000

எமின் போட் பரக்கடுவ B.L. டிவிசனை சேர்ந்த R.தியாகராஜன்-அழகு சுந்தரி (சுசிலா) தம்பதிகளின் செல்வப்புதல்வன் ராம்பிரகாஸ் (அஜய்) 17.10.2000 அன்று தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், ஜேர்மனியில் இருக்கும் செல்வம் பெரியப்பா குடும்பம், வத்தளையில் இருக்கும் நிக்ஸன் மாமா குடும்பத்தினர், கொழும்பு பாலாமாமா, மச்சாள்மார், மச்சான்மார், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் இவரை சிவசுப்பிரமணியம் சுவாமி அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல் : ஏ. நிக்ஸன், வத்தளை.


## தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்

Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

P.T.C 14, Covington Road, Batticaloa.



நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா? அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரால் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா? கவலை வேண்டாம்!

ஒவ்வொரு மருந்தும் பல மருத்துவ ஆராய்ச்சிகளிற்கும் வைத்திய பரிசோதனைகளிற்கும் உட்படுத்தப் பட்டு, அது பூரண திருப்தியளிக்கும் பட்சத்திலேயே பாவனைக்கு உகந்தது என அங்கீககரிக்கப்படுகிறது. Baraka கருஞ்சீரக எண்ணெயும் மேலுள்ள படிகளைத் தாண்டியதே.

நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கருஞ்சீரகமானது ஒமேகா-3, கொழுப்பமிலம், புரதம், கனியுப்பு, விற்றமின், போன்றவற்றைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளதோடு அது நாளாந்த பாவனைக்கு உகந்தது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்எனவும்நிருபணமாகியுள்ளது.


புரதம் ✓

விற்றமின்கள் ✓

கனியுப்புகள் ✓

Baraka பாவனைக்கு முன்னும் பின்னும் கொலஸ்ரோலின் அளவு

Baraka பாவனைக்கு முன்னும் பின்னும் குருதிச் சீனியின் அளவு.






ஆயுர் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பாமசிகளிலும் கிடைக்கிறது.

Baraka பாவித்து உங்களது வாழ்வை சுகமாக கழியுங்கள்.

- உணவு நிகரியாகவோ
- நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவோ
- குருதிச் சீனியை கட்டுப் படுத்தவோ
- கொலஸ்ரோலின் அளவைக்கட்டுப்படுத்தவோ பாவிக்கலாம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேசிய மருத்துவப்பிரிவினால் (IIM) நடாத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் இருந்து கருஞ்சீரத எண்ணெய்யை தொடர்ந்து பாவிப்பதன மூலம் இரத்தத்திலுள்ள சீனியின் அளவையும், கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்த முடியும் என நிரூபிக்கப்பட்டு ள்ளது.

EXPO LANKA

இன்னும் Baraka ஆனது சுகாதார, சுதேசிய வைத்திய அமைச்சின் ஆயுள்வேத மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பல வைத்தியர் களினாலும் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது.


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

Customer Care, Baraka,No 11A, Mile Post Avenue, Colombo - 03.





## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம செய்வது. பிறநத திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது .:.பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி

Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP

SRI DURGAADEVI MANTHIRIKA

UCHCHADA PEEDAM

NO. 162, KOTAHENA STREET,

MAY FIELD ROAD, COLOMBO-13.

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி

Fax-00941342464.

Tel-00941431137.

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

342463-344831



## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 19.10.2000-24.10.2000

இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 585592, 581986.

HOTLINE : 077-602513.



தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :

MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.

தொலைபேசி-0142552036



## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் ஒக்டோபர் 22 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.

T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

கல்முனையில் நவம்பர் 04, 05 திகதிகள்.

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் திகதிகள் அறிவிக்கப்படும்.

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM

NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.


# 31வது தின அந்தியேட்டியும் நன்றி நவில்தலும்


தாயின் கரங்களில்

01.06.1963

மண்ணின் கரங்களில்

19.09.2000

தேசியத்திற்காக உழைத்த ஒரு தேனி நித்தியமாய் உறங்கி விட்டது. எங்களின் நினைவுகளில் அதன் தியாகங்கள் தானே என்றும் இனிக்கிறது.



## அமரர் நாகரெட்ணம் பாஸ்கரன்

(தோழர் ரஜினி/ஜெயம்) ஈ.பி.டி.பி

அவர்களின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றியும் பல வழிகளில் உதவி புரிந்தும். தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபச் செய்தி அனுப்பிய அனைவருக்கும் ஈ.பி.டி.பி.யினருக்கும் உற்றார், உறவினர், தோழர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும், தாய், தந்தை, தம்பி மைத்துனி பெறாமக்கள்.

தகவல்: தம்பி என்.பிரபாகரன் கௌரி வீடியோ மூவீஸ்

இல.536/44, கோவிந்தன் வீதி, திருக்கடலூர், திருகோணமலை.

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# கூட்டணியின் குழிபறிப்பு

## திருமலைப் பிரதிநிதித்துவம் இழப்பு

தேர்தல் முடிந்துவிட்டது. முடிவுகள் வெளிவந்து ஆட்சியும் ஒருவாறு நிலைநிறுத்தப்பட்டுவிட்டது. தேர்தல் பெறுபேறுகள் குறித்து பலரும் பலவிதக் கருத்துக் கணிப்புகளை வெளியிட்டிருந்தார்கள். அவற்றில் பல புஸ்வாணமாகிவிட்டன. எனினும் முரசின் கணிப்பு மிகச் சரியாகவே அமைந்துள்ளது-வழமைபோல.....!

இப்போதெல்லாம் தேர்தல் கணிப்புகள் கூட தேர்தல் பிரசாரமாகவும் அமைந்துவிடுகின்றன. ஏதோ ஒரு மனவிருப்பின் அடிப்படையில் இத்தகைய கணிப்பிலீடுபவர்கள் யதார்த்த நிலைமையை உண்மையில் தெரிந்து கொள்வதில்லை. அதனால் அவர்களின் கணிப்பில் நம்பகத்தன்மை இருப்பதில்லை.

இதில் உண்மை என்னவென்றால், நாட்டில் கருத்துக்களைக் கூறுகின்ற பத்திரிகைகள், ஊடகங்கள் என்பன மொத்தமாகப் பார்த்தால் குறுகிய எண்ணிக்கையானவையே. அவற்றினது உரிமையாளர்கள்-அரசாங்கமாக இருந்தாலும்சரி, தனியாராக இருந்தாலும்சரி, இந் நாட்டு அரசியலின் ஏதோ சில போக்குகளை அனுசரிப்பவர்களாகவே இயல்பில் அமைந்துள்ளனர். அவர்களின் மனவிருப்புகள் அவர்களின் பொதுஜன ஊடகங்களில் பிரதிபலிக்கின்றன. அதனால் அவர்கள் வெறுமனே உண்மை நிலைமையைத் தெரிவிக்க முனைவதைவிட தமது விருப்பங்களை உண்மையாகக் காட்டவே முனைகிறார்கள்.

அதனால் இவர்களின் கணிப்புகள் பொய்த்துவிடுகின்றன. இந்த வகையில் முரசின் தேர்தல் கணிப்பு விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு யதார்த்தங்களையும் சாத்தியப்பாடுகளையும் கருத்துக்கெடுத்தே அமைந்திருந்ததால் அப்படியே சரியாக அமைந்துவிட்டது.

முரசின் எக்ஸ்ரே ரிப்போர்ட் கடந்த சில வாரங்களாக தேர்தலின் உள்ளோட்டங்களைச் சுட்டிக்காட்டி, அதில் பிழைக்கப் போகும் உத்திகளையிட்டு எச்சரிக்கை செய்தும் இருந்தது. எனினும் சம்பந்தப்பட்ட கட்சிகள் தமது கற்பிதங்களில் தாமே நம்பி ஏமாந்ததால் இறுதியில் மண்கவ்வ நேர்ந்தும் உள்ளது.

முரசின் கடந்த இதழ் எக்ஸ்ரே ரிப்போர்ட் தந்த இறுதிநேரக் கணிப்பும் அதற்கு முன்னைய இதழ் தந்த கணிப்பும் மிகச் சரியாகவே அமைந்திருந்ததை இங்கு எடுத்துக் காட்டுவது சாலப் பொருந்தும்.

சென்ற இதழ் எக்ஸ்ரே ரிப்போர்ட்டின் இறுதிப் பந்தியில் இப்படிச் சொல்கிறது.

'............எனவே மீண்டும் பொ.ஐ.மு. ஆட்சியே ஏற்படும். இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளும் கூட்டாட்சி வகிக்கும். வடக்கு-கிழக்கில் ஈ.பி.டி.பி. முன்னணிக் கட்சியாக வரக்கூடும். வராவிடினும் ஈ.பி.டி.பிக்கும் அமைச்சுக்கள் அரசாங்கத்தால் முன்வைக்கப்படலாம்.'

அதேவேளை அதற்கு முந்திய இதழின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்,

'......சிங்கள அரசியல் இவ்வாறிருந்தாலும் அது சிறுபான்மைக் கட்சிகளிடம் தங்கிருக்க வேண்டிய நிலமை இம்முறை மேலும் வலுக்கும். அமையப் போகும் அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளுடனான கூட்டரசாங்கமாக அமைய நேரிடுவதும் தவிர்க்க முடியாததாகிவிடக் கூடும். அந்தவகையில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன சென்ற தடவையைப்போல் முக்கியத்துவம் பெறுகின்றன. சிலசமயங்களில் வடக்குக் கிழக்குத் தமிழ்க் கட்சிகள் கூட அரசாங்கம் அமைப்பதற்கு அத்தியாவசியப் படலாம்....' என்று எழுதியிருந்தது. இவை இன்று கச்சிதமான கணிப்புகளாக உறுதியாகிவிட்டன.

இக் கணிப்புகள் கூறியபடியே பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. எனினும் சிறுபான்மைக் கட்சிகளின், அதுவும் வடக்கு கிழக்குத் தமிழ்க் கட்சியொன்றின் துணையும் அவசியம் என்ற நிலை உருவாகியது. அதன்படி முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. என்பனவற்றோடு மட்டுமன்றி ஈ.பி.டி.பி. கட்சியுடன் கூட்டரசாங்கத்துக்குச் சென்று அதற்கு அமைச்சுக்களை வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை அவ்விதழில் ஜே.வி.பி. மேலதிக ஆசனங்களைப் பெறுமெனத் தெரிவித்ததும் பலித்துள்ளது. சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் வெற்றிபெறப் போவதில்லையென்றும், சிறிசேனகூரேயின் பிரஜைகள் முன்னணி ஐ.தே.க.வின் வாக்கு வங்கியை உடைத்து வெல்வது சாத்தியமாகப் போவதில்லையெனக் கூறியிருந்ததும் சரியாகியுள்ளது.

இந்த வகையில் தமிழ்த் தரப்பு பற்றி மற்றைய தமிழ்ப் பத்திரிகைகளின் கணிப்புகளுக்கு மாறாக முரசு கூறிய கணிப்பு மிகச் சரியானதென நிரூபணமாகியும் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. முன்னணி வகிக்கும், கூட்டணி அதற்கு அடுத்த இடத்தைப் பெறும் என்று எக்ஸ்ரே ரிப்போர்ட் கூறியது போலவே நடந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் தலைமைப் பிரதிநிதித்துவத்தை இம்முறை கூட்டணியிடமிருந்து ஈ.பி.டி.பி. கைப்பற்றியுள்ளதென்பது ஓர் அரசியல் மாற்றமாகியுள்ளது. அதைவிட முக்கியத்துவம் யாதெனில், இத் தேர்தல் பெறுபேறுகள் சந்தர்ப்பவசத்தால் ஈ.பி.டி.பி. இன்றி அரசமைக்க முடியாது என்ற ஒரு தீர்மானகரமான அரசியல் சக்தியாக அதை ஆக்கிவிட்டுள்ளமையே. இது கூட்டணியைப் பொறுத்தவரையில் ஜீரணிக்க முடியாத ஓர் அரசியல் பின்னடைவாக அமைந்துவிட்டது. அதனால் சாக்குப் போக்குக்காக 'இந்தப் பழம் புளிக்கும்' என்ற வகையில் எதிர்க் கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றபோதும், இந்த தோல்வியைத் தாங்க முடியாத ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே அவை உணரப்பட முடிகின்றன.

மேலும், சென்ற இதழ் எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் வன்னியில் டெலோ முன்னணி வகிக்குமெனத் தெரிவித்திருந்தபடியே நடந்துள்ளது. அதேபோல் அதற்கு முன்னைய இதழின் எக்ஸ்ரே ரிப்போர்ட் '....நிறைவேறாத வாக்குறுதிகள் குறித்த கூட்டணி மீதான அதிருப்தி காரணமாகவும் கூட்டணி தன் முன்னைய 3 ஆசனங்களில் ஒன்றை இழக்கவும் நேரிடலம்'...... என்று மிகச் சரியாகவே ஆரூடம் சொன்னதுபோல் கூட்டணி தன் முன்னைய ஓர் ஆசனத்தை இழந்து இம்முறை இரு ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது. இங்கு மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமென்னவென்றால் அதன் தலைமை வேட்பாளரும் அங்கு மிகப் பிரபல்யம் வாய்ந்தவராகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டவருமான ஜோசெப் பரராசசிங்கம் அக் கட்சிக்குள்ளேயே இரண்டாவது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். அவருக்கு கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்த விருப்பு வாக்குகளின் அரைவாசியைக்கூட இம்முறை அவரால் ஈட்டிக்கொள்ள முடியாத நிலையில், அரும்பொட்டாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள அவர் மீதான அதிருப்திகளின் பிரதிபலிப்பாகவே உணரப்படுகிறது.

இந்த அதிருப்திக்குப் பிரதான காரணம் ஜோசெப் பரராசசிங்கம் வழங்கிய வேலை வாய்ப்புகள், லைசன்ஸ்கள் போன்றவை, எவ்வழியாலோ அரச தரப்பிடமிருந்து பெற்றுத் தமக்கு வேண்டிய வட்டத்தினருக்கு மட்டுமே வழங்கப்பட்டதென்றும், அதுவும் கைமாறு பெற்றுக் கொண்டே செய்யப்பட்டதென்றும் அங்கு பரவலாக தெரியவந்ததனாலாகும். அவ்வாறு அவர் என்னென்ன கைமாறு பெற்றார் என்று பட்டியலிட்ட நோட்டீஸுகள் கூட அங்கு அவ்வப்போது விடப்பட்டிருந்தன.

ஜோசெப் பரராசசிங்கத்திற்கு ஏற்பட்ட இந்த வீழ்ச்சி அவரை முன்னர்போல் கூட்டணியில் தீர்மானகரமான சக்தியாக இயங்க முடியாத நிலைக்குத் தள்ளி விட்டது. தனிப்பட்ட முறையில் அவருக்கு ஏற்பட்ட ஆதரவு வீழ்ச்சி மட்டுமன்றி, கிழக்கு மாகாணத்தில் ஒட்டுமொத்தமாகக் கூட்டணிக்கு ஏற்பட்ட வீழ்ச்சியாலும் அவரது அதிகாரம் கட்சிக்குள் நொடிந்து போயுள்ளது.

கடந்த பாராளுமன்றத்தில் கூட்டணியின் சகல உறுப்பினர்களுமே கிழக்கிலிருந்து தெரிவானவர்களாதலாலும், அதிலும் மொத்தம் ஐந்து பேரில் பெரும்பான்மையான மூன்று பேர் மட்டக்களப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்டமையாலும் கூட்டணிக்குள் ஜோசெப்பின் கை வலுத்திருந்தது. கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைவராக ஜோசெப்பே இருந்தார். பல முடிவுகள் கூட்டணியின் செயலாளர் சம்பந்தனையும் மீறி ஜோசெப்பாலேயே எடுக்கப்பட்டன, அல்லது நிர்ப்பந்திக்கப்பட்டன.

ஆனால் இப்போது பல்லுப் பறிபோன பாம்பாக மாறிவிட்டார். ஏனெனில் இம்முறை கூட்டணி ஆசனங்களில் அதிகூடிய 3 ஆசனங்கள் வடக்குப் பிரதிநிதித்துவத்தாலேயே கிடைத்துள்ளன. கிழக்கில் ஆக மட்டக்களப்பிலிருந்து இரண்டு ஆசனங்கள் தான். அதனால் இம்முறை கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைமைப் பதவி ஜோசெப் பரராசசிங்கத்துக்குக் கிடைக்கப் போவதில்லை. அத்தோடு யாழ்ப்பாணத்திலிருந்து ஆனந்தசங்கரி தெரிவாகியுள்ளது, ஜோசெப்புக்கு தலையிடியாக இருக்கப் போகிறது.

கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைமையை ஆனந்தசங்கரி எடுத்துக் கொள்ளப் போவதுடன் ஜோசெப்பின் அரசியலுக்கு அதில் இடமளிக்கப் போவதில்லை. இதனால் ஏற்கெனவே வீழ்ச்சி கண்டிருக்கும் கூட்டணிக்குள்ளும் முரண்பாடுகள் வெளிப்பட வாய்ப்புண்டு.

அது ஒருபுறமிருக்க, அம்பாறையிலும் எக்ஸ்ரே ரிப்போர்ட்டின் கணிப்பு மிகச் செப்பமானதாக உறுதியாகியுள்ளது. இறுதிக்கு முந்திய தினமுரசின் எக்ஸ்ரே ரிப்போர்ட் எழுதியிருந்தது இவ்வாறு.....

'.... அங்கு அனைத்துக் கட்சிகளும் கூட்டாகப் போட்டியிடும். தமிழர் மகாசபையின் சுயேச்சை அணியே தமிழ்த் தரப்பில் தெரிவாகும். அதில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினராக அங்கு சேவையாற்றியதன் பயனாக குணசேகரத்துக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைக்குமெனவே எதிர்பார்க்கப்படுகிறது.'

அது எழுதியிருந்தவாறு அப்படியே நடந்துள்ளது. இவ்வாறே முரசின் கணிப்பீடுகள் யாவும் சொன்னதுபோலவே நிகழ்ந்துள்ள போதும் அது சொன்னது பலித்துவிடக் கூடாது என முரசே பிரார்த்தித்த ஒரு விடயம் யாதெனில் திருகோணமலையின் தலைவிதி!

திருகோணமலையின் தேர்தல் தலைவிதிகுறித்து முரசின் அதே இதழின் எக்ஸ்ரே ரிப்போர்ட் ......'திருகோணமலையில் பல தமிழ்க் கட்சிகள் மோதுகின்றன. அங்கு வாக்குகள் சிதைந்தால் தமிழ்த் தரப்பில் ஒரு பிரதிநிதிகூட இல்லாது போய்விடும் ஆபத்து நிலவுகிறது.....' என எழுதியது. அதைப் போலவே இறுதியில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஒன்றுமே கிடைக்காது போய்விட்டது.

திருகோணமலையின் சனத்தொகையில் மூவின மக்களும் இருந்தாலும் இன்றும் அதிகூடிய வாக்காளர்களைக் கொண்டதாக விளங்குவது தமிழர்களே. சுமார் 79,000 தமிழ் வாக்காளர்கள் அங்கு உள்ளனர்.

இரண்டாமிடத்தில் சிங்களவர்கள் சுமார் 68,000 வாக்காளர்களைக் கொண்டிருக்கின்றனர். மூன்றாமிடத்திலுள்ள முஸ்லிம்கள் ஏறத்தாழ 30,000 வாக்காளர்களைக் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் இத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகப்படியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது முஸ்லிம் பிரதிநிதிகளே. பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவருமாக இம் மூன்று முஸ்லிம்களுமே தெரிவாகியுள்ளனர். அதிலும் சிறப்பு என்னவென்றால் இம் மூவருமே கிண்ணியாவைச் சேர்ந்தவர்களாக அமைந்திருப்பதுதான்.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் மறுதலையாக, 79,000 வாக்காளர்களைக் கொண்டு அதிகூடிய தொகையில் இருந்தும் ஓர் ஆசனத்தைக்கூட ஈட்ட முடியாது போய்விட்டது மிக மிகப் பரிதாபகரமான முடிவு!

இங்கு போட்டியிட்ட எல்லாத் தமிழ்க் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களுமே தோல்வியைத் தழுவின. மாறாக பெரும்பான்மை இனக் கட்சிகளான பொதுஜன ஐக்கிமுன்னணி 3 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் இங்கு பெற முடிந்திருக்க தமிழ்க் கட்சிகள் கோட்டை விட்டுவிட்டு நின்று விழிக்கின்றன.

இப் படுதோல்விக்குக் காரணம் வேறு யாருமல்ல; தமிழர் விடுலைக் கூட்டணியேதான் என்று எவரும் உடனடியாகவே கூறிவிட முடியும். காரணம் அங்கு பல தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று வாக்குக் கேட்டால் தமிழ் வாக்குகள் சிதறி, பிரதிநிதித்துவத்துக்குத் தேவையான வாக்கு எவருக்குமே கிடைக்காது போய்விடும் பேரபாயம் எதிர்நோக்கப்படுகிறதென முன்னதாகவே யாவருக்கும் தெளிவாகத் தெரியும்.

இதனையிட்டு சகல தமிழ்க்கட்சிகளையும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் வாக்குக் கேட்கும்படி திருமலைத் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுகோள் விடப்பட்டது. அதுமட்டுமன்றி கூட்டணியை இக் கூட்டமைப்பில் சேர்ந்துகொள்ள வலியுறுத்தி உண்ணாவிரதம் கூட அங்கு நடத்தப் பட்டது. ஆனால் கூட்டணி இறங்க மறுத்துவிட்டது. அதனால் திருகோணமலையில் தமிழ்த் தரப்பினர் ஒரே சின்னத்தில் கேட்டு பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றும் வாய்ப்பு இழக்கப்பட்டு விட்டது.

திருகோணமலையில் ஒருவாறு ஏனைய அனைத்துக் கட்சிகளும் ஒரு பொதுச் சின்னத்தில் தேர்தலில் நிற்பதற்கு இணங்கி விட்டன. ஆனால் கூட்டணி தனித்துக் கேட்க முடிவெடுத்துவிட்டதால் அந்தக் கூட்டை அமைப்பது சாத்தியப்படாது போய்விட்டது.

கூட்டணியின் இந்த முடிவுக்குக் காரணம் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்லத் திட்டமிட்டிருந்த அதன் செயலாளர் சம்பந்தனின் சுயநலமே. பொதுச் சின்னத்தின்கீழ் தேர்தலில் நின்றால் அதற்கு விழும் வாக்குகள் கூட்டணியின் தேசியப் பட்டியலுக்கு சேரமாட்டாதென்ற ஒரே காரணத்துக்காக. திருகோணமலையில் பிரதிநிதித்துவம் எவருக்கும் கிடைக்காது போனாலும் கவலையில்லை. தனக்குத் தேசியப்பட்டியலே முக்கியம் என்ற முடிவுக்கு கூட்டணி வந்தது. ஏனெனில் தேசியப் பட்டியலில் சம்பந்தன் இருக்கிறார், அவரைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற நப்பாசை.

இந்த நப்பாசைக்கு திருகோணமலைத் தமிழ் மக்களைப் பலிகொடுத்தபோதும் ஈற்றில் அதுவும் நிறைவேறவில்லை. கூட்டணிக்கு தேசியப் பட்டியலில் ஒருவர்கூடத் தெரிவு செய்யப்படவுமில்லை.

**நரன்**

திருகோணமலையில் சுமார் 79000 தமிழ் வாக்காளர்கள் இருந்தும் ஒருவர் கூடத் தெரிவு செய்யப்படாமல் போகும் கதியை கூட்டணியின் 'புரொக்ராசிப் புத்தி' ஈட்டிக் கொடுத்தது. உண்மையில் அங்கு 30,000 வாக்குகளுடன் ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்பட முடியும். இதன்படி எழுபத்தொன்பதாயிரம் தமிழ் வாக்காளர்களால் இரண்டு பிரதிநிதிகளைக் கூடத் தெரிவு செய்திருக்க முடியும். ஆனால் கூட்டணியின் இந்த மதிகெட்ட தனமான முடிவால் யாவுமே பாழாகிப் போனது.

கூட்டணியின் நடத்தையால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவும் அங்கு தமிழ்த் தரப்பினர் ஒன்றுபட்டுத் தேர்தலில் நிற்காததாலும் சுமார் ஐம்பதாயிரம் தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. அதாவது எழுபது சதவீதமானவர்கள் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான இழுபறியில் எமக்கேன் வம்பென ஒதுங்கிக் கொண்டு விட்டார்கள்.

திருகோணமலையில் மட்டும் போட்டியிட்ட கட்சிகளும் குழுக்களும் மொத்தம் 23. அதில் தமிழ்க் கட்சிகள், குழுக்களின் தொகை 7. நடந்தது என்னவென்றால் தமிழ் வாக்காளர்களில் ஐம்பதாயிரம்பேர் வாக்களிக்காதிருக்க, வாக்களித்த சுமார் 30000 பேரும் இந்த ஏழு கட்சிகளுக்குமாகப் பிரிய, யாருக்குமே பிரதிநிதிகள் இல்லாது போய்விட்டது.

இத் தேர்தலில் கூட்டணி பெற்ற மொத்த வாக்கு 14,090 மட்டுமே. அதனால் ஒரு பிரதிநிதியைத் தன்னும் ஈட்ட வேண்டுமெனில் மேலும் 16,000 வாக்குகள் தேவை. அதாவது கூட்டணி பெற்ற வாக்குகளின் இருமடங்குக்கு மேலான வாக்குகள் தேவை. இந்த நிலவரத்தில் கூட்டணிக்கு இத்துணை திமிர்த்தனம் தேவைதானா என்பதுதான் நகைப்புக்குரிய கவலை.

ஆனால் அதேவேளை அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் கிடைத்த வாக்குகளை பார்த்தால் சுமார் 30,000 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அதாவது ஒரு பிரதிநிதியை தெரிவுசெய்யக் கூடிய வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

உண்மை என்னவென்றால் யாவரும் ஒரு பொதுச்சின்னத்தில் ஒன்றுபட்டுக் கேட்டிருந்தால் தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைத்திருந்த இந்த முப்பதாயிரம் மொத்த வாக்குகளால் ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வது மட்டுமல்ல, வாக்களிக்காது விடப்பட்ட சுமார் ஐம்பதாயிரம் வாக்குகளைக் கூட திரட்டிக் கொள்ள முடிந்தது இரண்டு பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட முடிந்திருக்கலாம்.

ஆனால் இவை எதுவும் சாத்தியமாகாதபடி கூட்டணி குழப்பிவிட்டது. விளைவாக கூட்டணி மண்கவ்வியதுமட்டுமன்றி பெரும்பான்மைக் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியுமே அங்கு தெரிவு செய்யப்பட வாய்ப்பளித்து விட்டது.

திருகோணமலைத் தமிழ் மக்களுக்கு இது ஓர் அதிர்ச்சியான முடிவு. இதுவரை காலமும் இல்லாமல், இப்போதுதான் அவர்களுக்கென எந்தப் பிரதிநிதியும் இல்லாது போன நிலை: எதிர்வரும் ஆறு வருடங்களுக்கு இவ்வாறு ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது மட்டுமல்ல இங்கு கவலைக்குரியது. தாம் நம்பியிருந்த தலைமைகள் தமது பதவியை மட்டும் உறுதிப் படுத்திக் கொள்வதற்காகத் தம்மையே பலிகொடுக்க துணிவார்கள் என்பதை நம்பமுடியாவிட்டாலும் நம்பியாக வேண்டிய நிலைமையே அதிர்ச்சி தருவது. இவர்களை நம்பி, படித்தவர்கள், சட்டத்தரணிகள் என்ற நம்பிக்கையில் விவேகமான முடிவுகளை எடுப்பார்களென இனி எவ்வாறு எதிர்பார்க்க முடியும். என்பதே இப்போது கேள்விக்குறியாகிவிட்ட கேள்வி.

இதே குழிபறிக்கும் வேலையை அம்பாறையில் கூட்டணி மேற்கொள்ள முயற்சித்தது. ஆனால் கூட்டணியின் வேட்புமனு அங்கு நிராகரிக்கப்பட்டதால் நல்ல காலமாக அது தோல்வியடைந்தது. அதனால் அங்காவது ஒரு பொதுக் கூட்டமைப்பில் தமிழ்த் தரப்பினர் போட்டியிட்டு ஒரு பிரதிநிதித்துவத்தையாவது ஈட்டிக் கொண்டன.

எவ்வாறாயினும் கூட்டணியைப் பொறுத்தவரை இத்தேர்தல் ஒரு படுமோசமான தோல்வியே! இது அதன் சுயநல சிந்தைக்கு ஏற்பட்ட தோல்வியாகவே அர்த்தப்படுகிறது.

# செய்திச் சிதறல்

● இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு எந்த உரிமையும் வழங்குவதற்கு அனுமதிக்கப் போவதில்லை. மாறிமாறி ஆட்சிபீடமேறும் இரு அரசியல் கட்சிகளும் இந்த நாட்டின் பெருமையை சீரழித்து வருகின்றன, என்ற கோஷத்தை முன்வைத்து ஒருசில மாதங்களுக்குள் பரபரப்பாக விளம்பரம் தேடிக் கொண்ட சிஹல உறுமய கட்சி, பொதுத் தேர்தலில் ஓர் இடத்தைத் தானும் கைப்பற்ற முடியவில்லை. இக்கட்சிக்கு மொத்தமாகக் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியலில் ஓர் எம்.பி.பதவி அளிக்கப்பட்டது. இந்தப் பதவியை யார் ஏற்றுக் கொள்வது என்ற பிரச்சனை பூதாகரமாக வெடித்தமையினால், இக்கட்சி சிதறுண்டு போய் விட்டது. 'பௌத்த சிங்கள மக்களின் நலனுக்காக பல உருப்படியான சாதனைகளைப் புரியப் போகிறோம்' என்று கொக்கரித்த அக்கட்சியின் தலைவர்கள் திசைக்கொருவராக சிதறுண்டுப் போய் விட்டார்கள்.

● முன்னெப்போதும் இல்லாத வகையில் இத்தடவை நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பாக மிக அதிகமான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. தேர்தல் தினத்தன்று மட்டும் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனையும் சேர்த்தால் தேர்தல் தொடர்பாக மொத்தம் 73 கொலைகள் நடைபெற்றிருக்கின்றன.

● தேர்தல் மோசடிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டோர் பலர் கைது செய்யப்பட்டுமுள்ளனர். இவர்களில் சிலர் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுமுள்ளனர். இத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்று பல அமைப்புகள் கோரிக்கை விடுத்துவருகின்றன.

● பருவமழை காரணமாக வன்னிப் பிராந்தியத்தில் பல அனர்த்தங்கள் நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே அகதிகளாக்கப்பட்ட மக்கள் சிறுசிறு குடிசைகளை அமைத்துக் கொண்டு இடிந்து தகர்ந்த கட்டடங்களில் சில பகுதிகளை வசிப்பிடமாக ஆக்கிக் கொண்டும் பெரும் துன்ப துயரங்களுடன் வாழ்ந்து வந்தனர். 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற முதுமொழிக்கேற்ப வன்னியில் மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி கொட்டும் மழையில் ஒதுங்குவதற்குக் கூட ஓரிடமின்றி படும்பாடு விவரிக்க இயலாத ஒன்றாகும். இவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு தொண்டர் நிறுவனங்களாலும் முடியாதிருப்பதாகத் தெரிய வருகிறது. தொடர்ந்து பெய்யும் மழையினால் நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்வதும் முடியாதிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

● யாழ் மாவட்டத்தின் தேர்தலுக்கு முன்னதாகத் தொடங்கிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மிடையிலான மோதல்கள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. இதனால் தினசரி இரு தரப்பிலும் உயிரிழப்புகள் அதிகரித்தவண்ணமேயுள்ளன-ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக அலைகின்றனர்.

● ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த 12 தேசியப் பட்டியல் எம்.பிகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3 தமிழர்கள், 2 முஸ்லிம்கள் அடங்குகின்றனர். தமிழர்கள் மூவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கைத் தேசிய தொழிலாளர் சங்கத்தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவர்களில் ஒருவரான பி.பி.தேவராஜ், மலையக மக்கள் முன்னணிசார்பில் க.கனகராஜ் ஆகியோரும் முன்னாள் எம்.பிக்களான ஏ.எச்.எம்.அஸ்வர், எம்.ஏ.மஜீத் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

# அண்டை மண்டலத்தில்....

## ஜெயலலிதா தேர்தலில் நிற்கும் தகுதியை இழக்கிறார்

முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா டான்சி நிலபேர ஊழல் வழக்குகளில் மொத்தம் ஐந்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்றிருக்கிறார். அவரது உடன்பிறவா சகோதரி சசிகலாவிற்கும்அதே அளவு தண்டனை. இருவரும் இன்னமும் ஆறு ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டி யிடும் தகுதியினை இழக்கின்றனர்.

கோயில் கோயிலாக வலம் வந்தனர். இருவரும் நடத்திய யாகங்கள் எண்ணி லடங்கா. நள்ளிரவிலெல்லாம் காளிதேவியை பூஜித்தனர். ஊஹூம், எதற்கும் பயனில்லை. அக்டோபர் 9ம் நாள் ,காலை சிறப்பு நீதிபதி ப.அழகப்பன் ஜெயாபப்ளிகேஷன்ஸ் மீதான வழக்கில் ஜெயலலிதா, மற்றும் ஐவருக்கு தலா மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனையினையும், சசி என்டர்ப்ரைசஸ் மீதான வழக்கில் முன்னாள் அமைச்சர் முகம்மது ஆசி‿ப் தவிர மற்ற ஐவருக்கு தலா ஐந்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை யினையும் விதித்து தீர்ப்புக்கூறினர்.

காளி பூஜைக்குப் பின்தான் கலர் டீ.வி.வழக்கில் ஜெயலலிதா விடு தலையானார்.

ஆனால் டான்சியில் அந்த முயற்சி பலிக்கவில்லையே.

அது ஒருபுறமிருக்க ஏற்கனவே கொடைக்கானல் ப்ளசென்ட்ஸ்டே ஹோட்டல் வழக்கில் ஜெயலலிதாவிற்கு ஓர் ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைத்திருந்தாலும், ஜெயா பப்ளிகேஷன்ஸ் வழக்கு தண்டனை அவரை மிகவும் கடுமையாகப் பாதிக்கும். காரணம் 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 8(3)ன் படி இரண்டாண்டுகள் அல்லது அதற்குமேல் சிறைத்தண்டனை பெறுபவர்கள் எந்தத் தேர்தலிலும் போட்டி யிட முடியாது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடை பெறவிருக்கும் சட்டமன்றத்தேர்தல்களில் அவர் போட்டியிட முடியாவிட்டால் அ.இ. அ.தி.மு.க. அணியின் வெற்றி வாய்ப்புகள் பாதிக்கப்படக்கூடுமா? வேறு எவரையும் எதிர்கால முதல்வர் என்று ஜெயலலிதா முன்னிறுத்தினால் மக்கள் ஏற்றுக்கொள்வார் களா? ஜெயலலிதாவுக்கு ஆதரவாக ஓர் அரசு அமையவில்லையானால், தண்டனைத் தீர்ப்புக்களையெதிர்த்து செய்யும் மேல்முறை யீடுகளின் கதி?

இப்படியெல்லாம் ஆய்வாளர்கள் மண் டையைப் பிய்த்துக் கொண்டிருக்கையில், நீதிமன்றத்திலிருந்து வெளிவந்த கையோடு, ஜெயலலிதா தனது தோழியை அ.இ.அ.தி.மு.க.வின் பொதுக்குழு உறுப் பினராக நியமனம் செய்து அறிக்கை வெளி யிட்டார். இதுவரை சசிகலா என் அந்தரங்க சினேகிதி என் இல்லத்தை கவனித்துக் கொள்கிறார். கட்சிவிவகாரங்களில் அவர் தலையிடுகிறார் என்பதெல்லாம் அவதூறு என்று சொல்லி வந்த ஜெயலலிதா இப்போது அவரைக் கட்சி கொள்கைத்திட்டங்களை முடிவு செய்யும் ஒரு குழுவிலே உறுப்பினராக ஆக்கியிருக்கிறார். வேறு பதவிகளும் வரலாம். அடுத்த தேர்தலில் போட்டியிடுவார் என்று வதந்திகள். அவர்தான் அந்தத் தகுதியினை இழந்துவிட்டாரேயென்றால், தான் வைத்ததுதான் சட்டம், என்ன நடக்கின்றதென்று பார்ப்போம் என்ற ரீதி யில்தான் ஜெயலலிதா நடந்து கொள்கிறார்.

தீர்ப்பை வழங்கிவிட்டு நீதிபதி தனது அறைக்குச் சென்றபின், நீதிமன்ற அறை யிலேயே ஜெயலலிதா, வழக்கில் தண் டனைபெற்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் வழக்கறிஞரை அருகில் அழைத்து, அவரை அனைவர் முன்னிலையிலும் கடுமையாகச் சாடினார்.

டான்சி விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அந்த அதிகாரி தானாக எந்த முடிவெதையும் எடுக்கவில்லை. இறுதி முடிவெடுத்தது முதல்வரே. அதற்கு அதிகாரி பணிந்து போகவேண்டியதாயிற்று என்ற ரீதியில் அந்த வழக்கறிஞர் வாதிட்டிருந்தார். நீங்கள் உங்கள் வேலையை கச்சிதமாகச் செய்து முடித்துவிட்டீர்களே என்று ஜெயலலிதா சினந்து கூற அந்த வழக்கறிஞர் சற்று வெலவெலத்துப் போய்விட்டார்.

நான் அப்படிச் சொல்லவில்லை மேடம் என்று அவர் ஏதோ சொல்லி சமாளிக்க முயன்றார். ஆனால் ஜெயலலிதா காது கொடுத்துக் கேட்கத்தயாரயில்லை. குனிந்த தலையுடன் வழக்கறிஞர் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார்.

மூன்றுவழக்குகளில் தண்டனைபெற்று எந்நேரமும் சிறைக்குச் செல்லக்கூடும் என்ற நிலையிலிருப்பவர், தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பினையே இழந்து தனது எதிர்காலம் என்னாவது என்ற கவலையிலாழ்ந் திருப்பவர், ஒரு வழக்கறிஞரை பகிரங்க மாக மிரட்டுகிறார். அவரும் ஏதோ மாபெரும் தவறிழைத்துவிட்டவர் போல் பயந்து நடுங்கி, மன்னிப்புக் கேட்கிறார். இதுதான் இன்றைய தமிழ்நாடு!

டான்சி பௌண்டரி என்ற தமிழக அரசு நிறுவனத்திடமிருந்து ஜெயலலிதா மற்றும் சசிகலா பங்குதாரர்களாயிருந்த ஜெயா பப்ளிகேஷன்ஸ் என்ற தனியார் நிறுவனம் 1992ல் 3.07 ஏக்கர் நிலத்தினையும் அதன் மீதிருந்த கட்டிடங்களையும், மார்க் கெட் விலைக்கு மிகக்குறைவாக வாங்கிய தில் அரசுக்கு மூன்றரைகோடி ரூபாய் இழப்பு. அதேபோல் இவ்விருவருக்கும் சொந்தமான சசி என்டர்ப்பிரைசஸ் டான்சியின் மெற் றொருதுணை நிறுவனமான எனாமல்ட் வயர்ஸின் சொத்துக்களை வாங்கியதில் அரசுக்கு 66 இலட்ச ரூபாய் இழப்பு. இதுவே வழக்குகளின் சாராம்சம்.

ஜெயா, சசி தவிர முன்னாள் அமைச்சர் முகம்மது ஆசி‿ப், முன்னாள் டான்சி நிறுவனத் தலைவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி டி.ஆர்.ஸ்ரீனிவாசன், அன்று முதல்வரின் செயலாளராக இருந்த துணை அதிகாரி ஆர்.கற்பூரசுந்தரபாண்டியன் மற்றும் பதிவுத்துறை அதிகாரி எஸ்.நாகராசன் ஆகியோர் மீது இரண்டு வழக்குகளிலும் குற்றஞ்சாட்டப்பட்டது. அறுவருக்கும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் வழக்கில் தலா மூன்றாண்டுகளும். ஆசி‿ப் தவிர மற்ற வர்களுக்கு சசி என்டர்ப்ரைசஸ் வழக்கில் தலா ஆறாண்டுகளும் கடுங்காவல் தண் டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆசி‿ப் இரண்டாவது வழக்கில் விடுதலை செய் யப்பட்டார். மொத்தம் ஐந்தாண்டுகளானா லும், வெவ்வேறு வழக்குகளில் தண்டனை கள் வழங்கப்பட்டதால் அனைவருக்கும் சிறப்பு நீதிபதி அன்பழகன் உடனடியாக ஜாமீன் அளித்தார். உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்வதற்கு ஏதுவாக தண்டனைகளையும் நவம்பர் 7ம் நாள் வரை ஒத்திவைத்தார்.

இந்திய சட்டத்தின் படி மூன்றாண்டு களுக்குமேல் ஒருவருக்கு ஒரு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட நீதிபதி தண்டனையினை நிறுத்திவைக்க முடியாது. தண்டிக்கப்பட்டவர் உயர்நீதிமன்றத் திற்குதான் செல்லவேண்டும். உயர்நீதிமன் றம் ஜாமீனில் விடுதலை செய்யும் வரை சிறையிலிருந்துதான் ஆகவேண்டும். உடனடியாக சிறைக்குச் செல்லும் ஆபத்தி லிருந்து ஜெயலலிதாவும், சசிகலாவும் இவ் வாறாகத்தப்பித்தனர். ஆனால் அளவுக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு அவர்களைப் பயமுறுத்திக்கொண்டிருக் கிறது. லஞ்ச ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழ் அதிகபட்ச தண்டனையான ஏழாண்டு கடுங்காவல் அதில் வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது. இரண்டரை கோடி ரூபாய்க் கும் குறைவாகவே சொத்து சேர்த்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அ.இ.அ.தி. மு.க. சட்ட மன்ற உறுப்பினர் மல்லிகாவுக்கு சிறப்பு நீதிமன்றம் ஏழாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்திருக்கிறது. ஜெயா-சசி பரிவாரத்தினர் மீது 66.66 கோடி அளவிற்கு சொத்து சேர்த்ததாக அல்லவா வழக்கிருக்கிறது?

சிறைக்குச் சென்றாலும் நாலைந்து நாட்களில் வந்துவிடலாம்தான். ஆனாலும் பெரும் அவமானமல்லவா அது? மேலும் தேர்தல் நேரத்தில் அப்படிசிறைப்படுவது ஜெய லலிதாவிற்கு பின்னடைவுதான். நினைத்து நினைத்து மிரண்டு கொண்டிருக்கிறார்கள்.

வழக்கு விசாரணையினை முடிந்தவரை தாமதப்படுத்தி வருகிறார்கள். அதெல்லாம் பலிக்கிறதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். சுப்பிரமணியசுவாமிதான் முதன் முதலில் அரசுநிலங்களை ஜெயா- சசி கோஷ்டியினர் கபளீகாரம் செய்ததை வெளிக்கொணர்ந்தவர். அவர் மீது பல்வேறு அரசியல்ரீதியான தாக்குதல்கள்.

அவர் எடுத்துவைத்த சாட்சியங்களை ஆதாரமாகக் கொண்டு வழக்கு தொடுக்க தயாரானபோது தி.மு.க. வழக்கறிஞர் சண்முகசுந்திரத்தினை அ.இ.அ.தி. மு.க. குண்டர்கள் கொலை செய்யவே முயற்சி செய்தார்கள்.

ஒரு வழியாக டான்சி வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்தின் முன் வந்தபிறகு கூட எத்தனை மாய்மாலம்! ஏதேதோ நொண்டிச் சாக்கினைச் சொல்லி வாய்தா கேட்டு நூற்றுக்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆவணங்கள் தமிழில் வேண்டும், மொழிபெயர்க்க ஆட்களை நியமித்ததில் இட ஒதுக்கீடு பின்பற்றப் படவில்லை. பின்னர் சசிகலாவிற்கு கண் பார்வை கோளாறு, ஆசி‿ப்பிற்கு உடல் நிலை மோசமடைந்துவிட்டது, நீதிபதி அன்பழகன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பழிவாங்குகிறார், அவரை மாற்றவேண்டும் என்றெல்லம் மனுக்கள்.

ஒரு கட்டத்தில் உயர்நீதிமன்றத்தில் மனுச்செய்து ஜெயலலிதா வழக்கிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதில் வெற்றியும் பெற்றார். உச்சநீதிமன்றம் வரை சென்று போராடியே தமிழக அரசு விசாரணை யினைத் தொடரமுடிந்தது.

ஆனால் வழக்கறிஞர்களுக்கு ஜெய லலிதா வாரி இறைத்த பணமெல்லாம் இப் போது வீணாகிவிட்டது. தண்டனை நிறை வேற பல ஆண்டுகாலம் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் இப்படிச் சென்று கொண்டிருப்பாரே , அதுவே விஷயம்.

இப்போது மூன் றாண்டுகள் தண் டனைபெற்றாகிவிட் டது. இதன் விளை வாக தேர்தலில் நிற்கும் தகுதி யினை வேறு அவர்



இழக்கிறார். தேர்தலுக்கோ இன்னும் சில மாதங்களே உள்ளன.

ஒரு சிலர் அவர் தேர்தலில் நிற்கும் தகுதியினை இழந்துவிட்டதாகக் கூறமுடி யாது. உயர்நீதிமன்றத்தில் தண்டனை நிறுத்திவைக்கப்பட்டால் அவரால் போட்டி யிடமுடியும் என்று வாதிடுகிறார்கள். சிறைத் தண்டனை வேண்டுமானால் நிறுத்தி வைக் கப்படலாம். ஆனால் அவர் குற்றவாளி என்ற தீர்ப்பை நிறுத்தி வைக்க முடியாது என்று இன்னொரு சாரார் கூறுகின்றனர்.

தேர்தல் கமிஷன்தான் இது பற்றிய முடிவு செய்யவேண்டிய அமைப்பு. ஜெய லலிதா தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்யும்போது, நீங்கள் இரண்டாண்டுகள் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று கூறி ஒரு சாதாரண அதிகாரி அவரது மனுவினை தள்ளுபடி செய்துவிடமுடியும்.

அதன்பிறகு தலைமை கமிஷனருக்கு முறையீடு செய்து அதுவும் பலிக்காவிட்டால் உச்சநீதிமன்றத்தினை அணுகலாம். இதெல் லாம் முடிவதற்குள் தேர்தலே முடிந்து விடுமே! அதுவும் மேலும் ஒரு வழக்கில் அதிக தண்டனை பெற்றுவிட்டால் ஜெய லலிதாவின் நிலை இன்னமும் மோசமாகி விடும்.

இப்படியொரு நிச்சயமற்ற சூழலில் ஜெயலலிதா தான் போட்டியிடப் போகிறேன், என் அணிக்கு நானே தலைவி, வெற்றிபெற் றால் நான்தான் முதல்வர் என்று அறிவித்து மக்கள் முன் செல்வது அவ்வளவு எளிதாக இருக்காது. சரி அவர் இல்லாவிட்டால் வேறு யார்? சசிகலாதான். அவரைத்தவிர வேறு யாரையும் ஜெயலலிதா நம்புவதில்லை. ஆனால் தோழிக்கும் தண்டனை கிடைத் தாகிவிட்டது.

தினகரனை முழுமையாக அவர் நம்புவ தில்லை. அப்படியே நம்பினாலும் அவர் தலைவரென்றால் மக்கள் வாக்களிப்பார் களா, அவருக்கென்று தனிப்பட்ட செல்வாக் கேதும் கிடையாதே என்று அப்போதே அ.இ.அ.தி.மு.க.வினர் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். மிஞ்சியிருக்கும் மூத்த தலைவர் காளிமுத்து. ஒரு காலத்தில் ஜெயலலிதாவை கடுமையாக எதிர்த்தவர். அவரை முதல்வராக்குவது ஆபத்தாக முடிய லாம்.

சரி இவர்களையெல்லாம் விட்டுவிட்டு தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாரை கூட்டணித் தலைவர் என்று அறிவித்துவிடலாமே என்றும் சில ஆலோ சனைகள். ஜெயலலிதாவின் ஊழல் வழக்கு விவகாரங்களினால் ஏற்பட்டுள்ள அவப்பெய ருக்கு சற்று மாற்றாக மூப்பனாரின் நற்பெயர் அமையக்கூடும்.

### கானகன்

த.மா.கா.வுடன் தேர்தல் கூட்டு வேண்டுமானால் வைத்துக் கொள்வேன், ஆனால் கூட்டணி அரசு என்ற பேச்சே கிடையாது என்று முகத்திலறைந்ததாற் போல் மூப்பனாரை மேடையில் வைத்துக் கொண்டே முழங்கியவர் ஜெயலலிதா. அவருக்கு இப்போது மூப்பனாரை முதல் வராக்குங்கள் என்று மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய மனம் வருமா என்ன? என்னதான் தண்டனை கிடைத்தாலும் அவருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு நிரம்பவே இருக்கிறது. கருணாநிதியைப் பிடிக்காத வாக்காளர்கள் நிச்சயம் அவருக்கு வாக்களிக்க முன் வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

மேல்முறையீடுகளில் வெற்றி பெற்று ஜெயலலிதா சிறைக்குச் செல்லாமலிருக்க வேண்டுமானால் அவருக்கு சாதகமான அரசு தமிழகத்தில் அமையவேண்டும். கிட்டத்தட்ட அடுத்த ஆண்டு தேர்தல்கள் அவருக்கு ஒரு ஜீவமரணப் போராட்டம். அவர் என்ன செய் யப்போகிறார் என்றறிய பலரும் ஆவலுடனி ருக்கின்றனர். ○

## சென்னையில் இலங்கை எழுத்தாளரின் நூல்வெளியீடு

இலண்டன் மாநகரில் வாழ்ந்து வரும் கிழக்கிலங்கை-கோளாவில்லைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி.இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தலைசிறந்த தமிழ் எழுத்தாளராக விளங்குகிறார். நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், ஆராய்ச்சி நூல்கள் ஆகிய பல நூல் களை எழுதி வெளியிட்டுள் ளார். 'அவனும் சில வருடங்களும்' என்ற இராஜேஸ்வரியின் நாவல், சென்னை பத்திரிகையாளர் கழகத் தில் அண் மையில் வெளியிடப்பட்டது. தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளர் களான சுஜாதா, வாஸந்தி, அசோக மித்திரன் ஆகியோர் கலந்து கொண்ட இவ்விழாவுக்கு திரைப்பட இயக்குநர் பாலு மகேந்திரா தலைமை தாங்கினார்.



நூல் வெளியீட்டு விழாவில் விழாவுக்குத் தலைமை தாங்கிய பாலுமகேந்திராவும் நூலாசிரியை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும்.

இராஜேஸ்வரி அவர்களின் 'அவனும் சில வருடங்களும்' என்ற நாவலுக்கு முன்னுரை வழங்கியுள்ள பாலு மகேந்திரா இவ்வாறு கூறுகிறர்:

"சினிமா என்ற மீடியத்தின் தாக்கமும், வசீகரமும் படம் பார்ப் பவர்களை மட்டுமல்ல, படம் எடுப் பவர்களையும் கூட ஆட்கொள்ளு கின்றன என்பது ஒத்துக் கொள்ளப் பட்ட உண்மை.

இந்த நாவல் திரைப்படக் கல் லூரி ஒன்றினைப் பின்புலமாகக் கொண்டது. லண்டன் திரைப்படக் கல்லூரியும், அங்கு பயிலும் பல நாட்டு மாணவர்கள், மற்றும் ஆசிரி யர்கள் ஆகியோருமே இதன் கதை மாந்தர்கள்.

வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த வர்கள் என்பதால், வெவ்வேறு கலா சாரப் பின்னணியும், இதன் கார ணமாக அவர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளும், இவற்றையும் மீறி ஊடாடும் சில உடன்பாடுகளும் இந்நாவலில் சித்தரிக்கப்படுகின்றன.

ஆசிரியர் இராஜேஸ்வரி கூட இதே லண்டன் திரைப்படக் கல்லூரி மாணவியாய் இருந்தவர் என்பதால், திரைப்படக் கல்லூரிகளின் அறியப் படாத பல அபூர்வ தனித்துவங்கள் பல இந்த நாவலில் இயல்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

காதல் கதை என்பதால், இதன் சுருக்கத்தை இங்கு சொல்லி வாசகரின் வாசிப்பு சுவாரஸ்யத்தை நான் குறைக்க விரும்பவில்லை.

நானும் ஒரு திரைப்படக் கல்லூரி மாணவனாய் இருந்தவன் என்ற வகையில், இந்த நாவலின் இயங்குதளத்துடன் என்னால் இல குவாக ஐக்கியப்பட முடிந்தது."

அலசுவது - இராஜதந்திரி

# உலகின் முதலாவது பெண் பிரதமரின் மறைவோடு உருவாகும் இலங்கையின்

# 11-வது பாராளுமன்றம்

இலங்கை அரசியலில் இரு முக்கிய நிகழ்வுகள் கடந்த வாரம் இடம்பெற்றிருந்தன.

பதினோராவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் வாக்களிப்பு இடமபெற்ற தினத்திலேயே இலங்கையின் முதலாவது பெண் பிரதமரும், உலகின் முதலாவது பெண் பிரதமருமான திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமது கணவரான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா 1959ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அரசியலில் பிரவேசித்த சிறிமாவோ



பண்டாரநாயக்கா மூன்றுதடவைககள் இலங்கையின் பிரதமராகத் தெரிவாகியிருந்தார்.

மூன்றாவது தடவையாகவும் 1994ம் ஆண்டு பிரதமராக சிறிமாவோ தெரிவானார். ஆயினும் பாராளுமன்ற ஆட்சியின் முக்கியத்துவம் இழந்த நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான தமது புதல்வி சந்திரிகாவின் கீழ் பெயரளவில் மட்டுமே சிறிமாவோ பிரதமராக இருந்தாரே தவிர, உடல் உளரீதியாகத் தீர்மானங்களையோ அல்லது முடிவுகளையோ எடுக்கும் வல்லமையை சிறிமாவோ இழந்திருந்தார்.

இதன் காரணமாகவே இத்தடவை தேர்தல் இடம்பெறுவதற்கு ஒருமாதம் முன்பதாக பிரதமர் பதவியிலிருந்தும் சிறிமாவோ அப்புறப்படுத்தப்பட்டுப் புதிய பிரதமராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்டார்.

உடற்பலத்தை இழந்தபோதிலும் சக்கர நாற்காலியில் சென்று தமது வாக்களிப்பை முடித்த பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயத்திலேயே சிறிமாவோ காலமானார்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா கொல்லப்பட்டதும் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அநாதரவான நிலையை அடைந்திருந்தது.

அக்கட்சியை முன்னெடுத்துச்செல்ல பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேர்ந்த ஒருவராலேயே முடியுமென அன்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் காரணமாகவே விதவைக்கோலத்தில் ஒரு குடும்பப் பெண்ணாக இருந்த திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீ.ல.சு.க.யின் தலைமையை ஏற்றதோடு பின்னர் இலங்கையின் பிரதமராகவும் தெரிவாகியிருந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையில் முடிவுக்கு வந்ததும் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே ஒரு முக்கிய அரசியல் சக்தியாக விளங்கியிருந்தது. அக்கட்சியே ஆளுங்கட்சியாகவும் அப்போது விளங்கியிருந்தது. அதில் சிறிமாவோவின் கணவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவும் ஓர் அமைச்சராக அங்கம் பெற்றிருந்தார்.

ஆனால் காலப்போக்கில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஒரு மாற்றுக் கட்சியாக அரசியல் கோதாவில் உருவாக்கியிருந்தார். அத்துடன் அக்கட்சியின் சார்பிலேயே அவர் பிரதமராகவும் வந்திருந்தார்.

பெரிதும் இடதுசாரிப்போக்குடைய சோஷலிஸத்தன்மை கொண்டதாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விளங்கியதோடு, இலங்கையிலுள்ள ஏனைய இடதுசாரிக்கட்சிகளுடனும் ஸ்ரீ.ல.சு.க.கூட்டு வைத்திருந்தது.

1970ம் ஆண்டில் சிறிமாவோ அரசாங்கம் இரண்டாவது தடவையாகப் பதவியேற்றபோது அந்த அரசாங்கத்தில் பெருமளவிலான இடது சாரித் தலைவர்களும் அங்கம் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மட்டுமல்ல. உலகில் கூட முதலாவது பெண்பிரதமர் என்ற பெருமையைப் பெற்றிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அணிசேரா இயக்கம் ஊடாக சர்வதேச கவனத்தையும் பெற்றிருந்தார்.

1976ம் ஆண்டில் இலங்கையில் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தியதோடு இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி உட்பட சர்வதேச முக்கியத்துவம் மிக்க தலைவர்கள் பலரையும் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அணிசேரா உச்சிமகாநாட்டின்போது ஏகலாலத்தில் ஒன்று சேரச் செய்த பெருமை சிறிமாவோ அம்மையாரையே சாரும்.

நூற்றுக்கணக்கில் உலகத்தலைவர்கள் பலரும் அணிசோரா உச்சி மகாநாட்டுக்காக இலங்கை வந்திருந்தனர். அதன்பின்னர் அவ்வளவு பெருந்தொகையாக இலங்கையில் உலகத் தலைவர்கள் ஒரேதரத்தில் கூடியது இதுவரை கிடையாது என்றே கூறமுடியும்.

எனவே சிறிமாவோ பண்டாரநாயக்கா, அவரது கணவரால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதன் தலைமைத்துவத்தை இழந்து பலவீனமுற்றிருந்த ஒரு காலகட்டத்திலேயே அரசியலில் பிரவேசித்தார்.

இருதடவைகள் சிறிமாவோ பிரதமராகப் பதவி வகித்த காலகட்டத்தில் இலங்கையில் பாராளுமன்ற ஆட்சியே முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது.

பின்னர் 1977ம் ஆண்டு சிறிமாவோவின் ஆட்சி அதன் தவறான அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகப் படுதோல்விக்கண்ட தருணத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது.

இதன்பின்னர் 1978ம் ஆண்டு பாராளுமன்ற ஆட்சியின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்து புதிய அரசியலமைப்போடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியை ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கம் இலங்கையில் ஏற்படுத்திவிட்டிருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்து பெரும்பலத்தோடு ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கம் பதவியிலிருந்தபோதும், சிறிமாவோவின் அரசியல் கவர்ச்சி ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு அச்சத்தைக் கொடுப்பதாகவுமிருந்தது.

இதன் காரணமாகவே சிறிமாவோ மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி தனது பதவிக் காலத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தன சிறிமாவோவின் குடியியல் உரிமைகளைப் பறித்து விட்டிருந்தார்.

இதன்காரணமாக 1977ம் ஆண்டு பதவியிழந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மேலும் பலவீனமுற்று சுமார் 17 வருடகாலம் வரை எவ்வகையிலும் ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றுவதை நினைத்துக் கூடப்பார்க்க முடியாத நிலையில் இருந்தது.

எனவே 1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் சிறிமாவோ பண்டாரநாயக்கா நீண்டகாலத்தின்பின்னர் இலங்கையின் பிரதமராக மூன்றாவது தடவையாகவும் தெரிவாகியிருந்தார். ஆனால் அவரால் அப்பதவியை வகிக்கக்கூடிய உடல் வலுவோ அல்லது மனோபலமோ இருக்கவில்லை. அத்துடன் அவர் வகித்த பிரதமர் பதவிகூட அரசியல் ரீதியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியின் கீழ் பலவீனமானதாக இருந்துவரக் காணப்படுகின்றது.

இத்தடவை இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் கெடுபிடிமிக்க வன்முறைகளுடன் பல்வேறு இடங்களிலும் உயிரிழப்புகள், மற்றும் அடாவடித்தனங்கள் நிரம்பியதாகவே இருந்தது.

இத்தகைய அராஜகமான ஒரு சூழலில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தமது வாக்களிப்பை முடித்தபின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க மாரடைப்பினால் காலமாகியிருந்தர்.

இலங்கையில் புத்தாயிரமாவது ஆண்டின் முதலாவது தேர்தல் என்ற ரீதியில் இத்தடவைத் தேர்தல ஜனநாயக வீழுமியங்கள் பாதுகாக்கப்பட்ட ரீதியில் நடத்தப்படுவதற்குப் பதிலாக ஆயிரத்துஐநூறுக்குமதிகமான வன்முறைகளைக் கொண்டதாகவே விளங்கியிருந்தது.

பல்வேறு இடங்களிலும் வாக்களிப்புத் தினத்திலேயே முறைகேடுகளும், அச்சுறுத்தல்களும் நிகழ்ந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் பலர் நேரடியாகவே வந்து தேர்தல் நடைமுறைகளைக் கண்காணித்திருந்தபோதிலும் தேர்தல் வன்முறைகள், முறைகேடுகள் என்பவை எவ்விதத்திலும் குறைந்திருக்கவில்லை.

தேர்தல்கள் முடிவுற்ற நிலையில் பிரதான அரசியல்கட்சிகளான பொது ஜன ஐக்கியமுன்னணியோ அல்லது, ஐக்கிய தேசியக் கட்சியோ பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க முடியாத சூழ்நிலையையே கொண்டுள்ளன.

தேர்தல் முடிவுகளின் பிரகாரம் பொதுஜன ஐக்கிய முன்னணி முதன்மையாக நின்றாலும் அக்கட்சி அமைக்கவிருக்கும் பாராளுமன்ற ஆட்சி பலம்மிக்கதாக இருக்குமா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பாகத் தோற்றம் பெற்ற ஜனதா விமுக்தி பெரமுன என்ற ஜே.வி.பி. அமைப்பு ஒரு மூன்றாவது முக்கிய சக்தியாக முப்பது வருடங்களின் பின்னர் பத்து ஆசனங்களுடன் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளது. இக்கட்சியின் நிலைப்பாடென்பது தனது தனித்துவத்தைக் காப்பாற்றுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதாக இருக்கின்றது. அத்துடன் எந்தவொரு கட்சியிடமும் சோரம் போய்விடலாகாது என்பதிலும் ஜே.வி.பி. குறியாக இருக்கின்றது.

இதேவேளை கடந்தகாலங்களில் மலையகத்தில் ஒரு மாபெரும் சக்தியாக காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமானினால் உருவாக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி இத்தடவை ஒரு மலைசரிந்த பாங்கிலேயே தேர்தல் தோல்விகளைச் சந்தித்துள்ளது.

இ.தொ.க.வுக்குள் நிலவும் பிரிவினைகள் உட்பட காலஞ்சென்ற எஸ்.தொண்டமானிடமிருந்த தலைமைத்துவப்பண்பு இன்று காணப்படாதிருப்பதே இ.தொ.க.வின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனக் கடந்த தேர்தலில் போட்டியிட்டு தற்போது தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்ட அணியினர் நான்கு ஆசனங்களைப் பெற்றுள்ளனர்.

காலஞ்சென்ற அமைச்சர் ஏ.எச்.எம். அஷ்ரப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியும் ஆளுங்கட்சியின் பலத்தை தீர்மானிக்கும் ஒரு முக்கிய சக்தியாக உருப்பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க வடக்கு-கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக்கட்சி, தமிழீழ விடுதலைக் கழகம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்பவை மொத்தம் 14 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

இத்தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துமே தம்மிடையேயான கொள்கைகள் தொடர்பாக முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. 14 ஆசனங்கள் மூலமாக வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து ஆளுந்தரப்புக்கு நிறையவே அழுத்தங்களை தமிழ் கட்சிகள் கொடுக்கலாம். ஆனால் அது முடியாதகாரியமாகவே இருக்கின்றது.

எனவே நடந்து முடிந்த பொதுத் தேர்தலை எடுத்து நோக்கும் பட்சத்தில் 225 பாராளுமன்ற ஆசனங்களுக்கும் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளனர். ஆயினும் இப்பாராளுமன்ற ஆட்சி எவ்வளவு தூரம் நாட்டுநலனை முக்கியப்படுத்துவதாக இருக்குமென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகள் தத்தமது பலத்தையே பாதுகாத்துக் கொள்ள எத்தனிக்கும் நிலையில் ஒரு குளறுபடியான தன்மையே புதிய பாராளுமன்றில் நிலவக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

தீராத நோயாக இருக்கும் வடக்கு-கிழக்குப் பிரச்சனை மற்றும் நாளுக்குநாள் மோசமாகிச் செல்லும் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் என்பவற்றுக்கு இலங்கையின் பதினோராவது பாராளுமன்றம் எவ்வாறு முகங்கொடுக்குமென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**சிறிமாவோ** அம்மையார் மறைந்து விட்டார். கணவரது மறைவுக்குப் பின்னர் ஏனையோரது நிர்ப்பந்தம் காரணமாகவே அவர் அரசியலுக்கு வந்தார். சிறிமாவோ ஆட்சிக்காலத்தில் ஒரு தடவை, அவரது அமைச்சரவையில் இருக்கும் ஒரே ஒரு ஆண்மகனும் அவரே என்று தெரிவிக்கப்பட்டதாம். ஏனையவர்கள் சவால் கொடுக்கும் விடயங்களில் பின்வாங்கிய போது சிறிமாவோ அச்சவால்களை ஏற்றுக் கொண்டு ஆட்சி நடத்தியிருந்தாராம். அதனால்தான் 'ஆண்மகன்'என்று கூட அவர் வர்ணிக்கப்பட்டிருந்தார்.

**தேர்தல் காலத்தில்** நோர்வேயின் சமாதான முயற்சி பற்றி பேசுவதை அரச தரப்பினர் தவிர்த்துக் கொண்டார்கள். ஆனால் தேர்தல் முடிந்ததும் முடியாததுமாக கதிர்காமர் ஐயா நோர்வே சென்று நோர்வேயின் உதவியை மீளவும் கேட்டிருக்கிறார். என்ன செய்வது மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்ட வேண்டியிருக்குது.

**குமார் பொன்னம்பலம்** வாழ்ந்த காலத்தில் எவ்வளவோ முயற்சித்தும் அவரால் பாராளுமன்றம் போகமுடியவில்லை. ஆனால் இத்தடவை அவரது சொந்தப் பிரதேசத்திலேயே வடக்கில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஒரு ஆசனத்தைப் பெற்றிருக்குது. மறைவுக்குப் பிந்திய கௌரவத்தை வடமராட்சி மக்கள் குமாருக்கு வழங்கியிருக்கிறார்கள்.

**கென்யா கிரிக்கெட்** போட்டியில் இந்தியா வெற்றியை கோட்டை விட்டுவிட்டது. என்ன செய்வது? அனுபவசாலிகளெல்லோரும் ஊழல் மோசடியில் மாட்டுப்பட்டிருக்கினம். ஏதோ இறுதிவரை போராடி தோல்வி கண்டிருக்கிறது, இந்தியா. நியூஸிலாந்து அணியின் வெற்றி அந்நாடு மட்டுப் படுத்தப்பட்ட போட்டியொன்றில் பெற்ற முதலாவது வெற்றியாக இருக்கிறது.

**தேசிய ஐக்கிய முன்னணித்** தலைவி பேரியல் கணவர் அஷ்ரப் மறைவினால் சமய விதிப்படி அமைதிகாத்து வருகின்றார். ஆனால் அரசியல் கட்சிகள் தமது நலன்களுக்காக பேரியல் அம்மையாரையும் குழப்பப்பார்க்கினம். கணவர் நினைவாக தியானத்திலிருப்பவரை குழப்பிக் கூத்தாட்டம் போடப் பார்க்கினம் பெரிய கட்சிக்காரர்கள்.

**வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின்** இணைப்புநகர் திருகோணமலை. ஆனால் இங்கிருந்து ஒருதமிழராவது இத்தடவை தேர்தலில் தெரிவாகவில்லை. சிறந்த தமிழ் அரசியல் வாதிகள் பலரையும் தந்த கோணமாமலையில் தமிழ் அரசியல் வாடையே இல்லாமல் போயிருக்குது.

# உலகப்புகழ் பெற்ற எழத்தாளர் லோர்ட் டுன்ஸானி எழுதிய சிறுகதையின் தமிழ் வடிவம்

# சாப்பிட்டே விட்டான்

என் பெயர் ஜோன்சன். நான் ஒரு ஊறுகாய் கம்பனியின் சேல்ஸ்மேனாக பணிபுரிந்து வருகிறேன்.

என்னை திடீரென்று லண்டனுக்கு மாற்றி விட, ரூம் கிடைக்காமல் அவதிப்பட்டேன். ஒருவார அலைச்சலுக்குப் பின் ஒரு ரூம் எனக்குக் கிடைத்தது.

ஆனால் ரூம் வாடகை மட்டும் என் பட்ஜெட்டுக்கு உதைத்தது. என்னடா செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் அதே ரூமை இன்னொருவர் பார்க்க வந்திருந்தார்.

அவருக்கும் ரூம் பிடித்திருந்தது. ஆனால் வாடகை ஜாஸ்தி என்ற என்னுடைய பிரச்சனையே அவரையும் வாட்டியது. உடனே நான்,

"நாம இரண்டு பேரும் ரூமை ஷேர் பண்ணிக்கலாமா?"ன்னு கேட்க அவரும் ஒத்துக் கொண்டார்.

இருவரும் அந்த வீட்டில் குடியேறினோம். ஒரு வாரம் கழிந்தது. நான் தினமும் காலை வெளியே சென்று ஊறு காய் விற்று இரவு வெகுநேரம் கழித்துதான் வீடு திரும்பினேன்.

ஆனால் என் ரூம் நண்பரே எங்கும் செல்ல மாட்டார். அவருக்கு கைவசம் கொஞ்சம் பணமிருந்தது. வேளா வேளைக்கு ஹோட்டலிலிருந்து உணவு வரவழைத்து சாப்பிட்டுவிட்டு ஏதோ சிந்தித்துக்கொண்டே இருப்பார்.

எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் அதில் ஒரு வித்தியாசமான கோணத்தில் யோசித்து நல்ல பதிலளிப்பார். நன்றாகப் படித்திருக்கிறார். நான் அதிகம் படிக்கவில்லை என்பதால்



எனக்கு வரும் சந்தேகங்களை அவரிடம் கேட்டு தெரிந்து கொள்வேன். எனக்கு செஸ் விளையாட; பிடிக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் சமயம் கிடைக்கும்போது மட்டும் செஸ் விளையாடுவேன்.

அவரையும் செஸ் விளையாட கூப்பிட்டுப் பார்த்தேன். ஆனால் தனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டார்.

இதனால் நானே எதிரில் இன்னொருவர் இருந்தால் எப்படி ஆடுவாரோ அதைப்போல் நானே காய்களை நகர்த்தி விளையாடுவேன். இரண்டு மூன்று நாட்கள் நான் விளையாடுவதை கூர்ந்து கவனித்த என் ரூம் நண்பர் நான்காவது நாளே,

"இந்தக் காயினை இங்கு நகர்த்து இப்படி ஆடு..." என்று எனக்கு ஐடியா கொடுக்க ஆரம்பித்தார்.

அவர் ஐடியாக்கள் எல்லாமே சிறப்பானதாக இருந்தன. ஓ.கே. இவர்தான் சரியான ஆள், என்று எனக் குள் முடிவெடுத்துக் கொண்டு அப் போது லண்டனுக்குப் பக்கத்தில் நடந்த ஒரு கொலை சம்பவத்தைப் பற்றி அவரிடம் எடுத்துக் கூறினேன்.

"ஒரு இருபது நாள் முன்னாலே மேன்வெல் தெருவில் ஒரு வினோதமான வழக்கு. அங்கு ஒரு பெரிய பங்களாவில் ஒரு ஆணும் பெண்ணுமாக குடிவந்திருக்கிறார்கள். இளம் வயது. இவர்கள் தம்பதியினரா என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது.

திடீரென நான்கைந்து நாட்கள் கழித்து அந்தப் பெண் அந்த வீட்டில் இல்லை. பக்கத்து வீட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம்.

இந்த ஆள் மட்டும் தனியாக வீட்டிலேயே முடங்கிக்கிடக்கிறான். அந்தப் பொண்ணுக்கு என்னாச்சு? என்று சந்தேகம் அதிகமாக, பொலிசுக்குப் புகார் கொடுத்தனர். பொலிஸ் வந்து கேட்டதற்கு,

'அந்தப் பெண் தென் ஆபிரிக்கா சென்று விட்டதாக அந்த ஆள் வாக்குமூலம் கொடுத்தான். ஆனால் பொலிசுக்கு அவன் சொன்ன வாக்குமூலத்தில் நம்பிக்கை இல்லை.

விசாரணை தொடர்ந்து நடந்தது. விசாரணையில் அவன் ஏதேதோ உளறினான். ஆனால் அந்தப் பெண் எங்கே என்பதைப் பற்றி மட்டும் எப்படிக் கேட்டும் அவன் பதில் சொல்லவில்லை.

அந்தப் பெண்ணை கொலை செய்துவிட்டு சடலத்தை எங்காவது புதைத்து வைத்திருக்கிறானா என்று வீடு முழுவதும் தேடிப் பார்த்தனர்.

ஆனால் எந்த ஒரு தடயமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவனுடைய வீட்டுக்காரரிடம் விசாரித்தபோது,

"தெரியலீங்க. ஒரு பதினைந்து நாள் முன்னாடி வீட்டை வாடகைக்கு எடுத்தாங்க. நான் கேட்ட அட்வான்ஸ் கொடுத்தாங்க. ஆனா அவன் ஒரே ஒரு கண்டிஷன் தான் போட்டான்.

என் வீட்ல இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டிடுவேன்னு சொன்னான். நான் கேட்ட பணத்தைக் கொடுத்ததுனால மரத்தை வெட்டிக்கறதுக்கு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கல.

அவன் பாட்டுக்கு தினமும் மரத்தை வெட்டிக்கிட்டே இருக்கான். ஆனா அந்த விறகைக் கூட விற்கல. எதுவும் பண்ணல, அப்படியே கிடக்குது."

என்று வீட்டுக்காரர் கூறினார்.

மேலும் விசாரணையில் அவன் ஒரு வெஜிடேரியன் என்பதும் அவனிடம் 150 பவுண்ட் இருக்கிறது என்பதும் நான்கைந்து நாட்களுக்கு முன்பு இரண்டு ஊறுகாய் பாட்டில் வாங்கியிருக்கிறான் என்பதும் தெரிய வந்தது.

அந்த ஊறுகாய் நான் விற்கும் கம்பெனி ஊறுகாய் என்பதால்தான் எனக்கு இந்தக் கேஸில் தனி ஆர்வம்.

இப்போது இரண்டு மூன்று நாட்களாக ஸ்காட்லாண்ட் யார்டு பொலிஸ்காரர்கள் வந்து விசாரித்தும் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை.

உன்னால் நான் சொன்னதை வைத்து அந்தப் பெண் என்ன ஆகியிருப்பாள் என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?"

இப்படி நான் பத்திரிகையில் படித்ததை விளக்கமாகவே அவனிடம் சொன்னேன்.

"நீ சொன்னதை வைத்துப் பார்த்தால் எனக்கு உண்மை ஓரளவு புரிந்து விட்டது. ஆனாலும் நீ அந்த மேன்வெல் தெருவுக்கு போ. அங்கு வேற ஏதாவது தகவல் கிடைக்கிறதா என்பதை கண்டறிந்து வா.

அத்துடன் கொலைகாரன் என்று சந்தேகிக்கப்படும் அவன் ஊறுகாய் வாங்கிய கடைக்குச் சென்று வா. அவன் ஒரே நாளில் இரண்டு பாட்டில் ஊறுகாய் வாங்கினானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்," என்று அவன் சொல்ல நானும் மறுநாள் அந்தத் தெருவுக்கு சென்று வந்தேன்.

"ஊறுகாயை அவன் ஒரே நாளில்தான் வாங்கியிருக்கான். அதுக்கப்புறம் அவன் வீட்டுக்குப் போனதில அந்த ஊறுகாய் ப்பாட்டில் ரெண்டுமே கிட்டத்தட்ட காலியாகியிருந்தது.

வேற எந்தப் புதுத் துப்பும் எனக்கு கிடைக்கல," என்றுநான் விசாரித்த விஷயங்கள அவனிடம் சொன்னேன்.

"ஆமா அந்த ஊறுகாய் உங்க கம்பெனிதுதானே...?"

"ஆமா... ஆமா!"

"இந்த டைப் ஊறுகாய் மட்டன் சிக்கன் போன்ற ஐட்டங்களுக்கு தொட்டு சாப்பிட்டாத்தான் நல்லாயிருக்கும். வெஜ் ஐட்டங்களுக்கு இது ஒத்து வராது" என்று நான் சொல்லி முடிப்பதற்குள்,

"ஓ.கே. நடந்தது என்ன என்று நான் சொல்கிறேன். ஸ்காட்லாண்டு யார்டு பொலிஸ் இன்ஸ்பெக்டரை இங்கு வரச் சொல். நான் எல்லாத்தையும் விலாவாரியாக அவர்கிட்ட சொல்றேன்!" என்று என் ரூம் நண்பர் கூற, நானும் அவசர அவசரமாக அவன் சொன்னபடியே செய்தேன்.


பொலிஸ் இன்ஸ்பெக்டர் அரை மணி நேரத்தில் வந்தார். அவரும் எனது ரூம் நண்பரும் தனியாக அரை மணி நேரம் பேசினார்கள். வெளியே வரும்போது அந்த இன்ஸ்பெக்டர் "எல்லாம் ஓ.கே. ஃப்ரெண்ட். அவன் எதுக்கு மரத்தை தினம் வெட்டி போட்டிருக்கான்?"

"பசி எடுக்கறதுக்குத்தான்" என்று என் நண்பர் கூற,

அப்போதுதான் எனக்கு எல்லாமே புரிந்தது. அந்த கொலைகாரப் பாவி அவனுடன் வசித்த பெண்ணை கொலை செய்து விட்டு பச்சையாகவே சடலத்தை (வேக வைத்தால் பக்கத்து வீட்டுக்கு வாசனை வந்து விடுமே என்று) ஊறுகாயைத் தொட்டு சாப்பிட்டிருக்கிறான்.

பசி எடுக்க வேண்டுமென்பதற்காகவே அவன் மரம் வெட்டியிருக்கிறான்."

# அப்துல் ஹமீதும் 'தெனாலி'யும்



இந்தியாவிலும் இலங்கையிலும் தீபாவளி வெளியீடாக கமலஹாசனின் 'தெனாலி' திரையிடப்படவிருக்கிறது. இந்தப்படத்தில் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்களும் நடித்துள்ளார் என்ற செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

"தெனாலியில் நீங்கள் எத்தகைய பங்களிப்பை ஏற்றிருக்கிறீர்கள்?" என்று அப்துல் ஹமீத் அவர்களை வினவியபோது, 'முரசு'க்கு இவ்வாறு அவர் தெரிவித்தார்:

"சிங்கப்பூரில் இம்மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற சிங்கப்பூர் தொலைக்காட்சியின் உரைக்கோவை தொகுப்பு நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பில் கலந்துவிட்டு, கடந்த 9ம் திகதி காலை விமானத்தில் வந்திறங்கிய நான் பொரளையிலுள்ள எனது இல்லம் நோக்கி வந்துகொண்டிருக்கும்போது, தெமட்டக்கொடை திரையரங்கின் விளம்பரப் பலகையில் இடம்பெற்றிருந்த தெனாலிப்படத்தின் விளம்பரத்தைப் பார்த்து அசந்து போனேன். கமலஹாசன், ஜோதிகா, பி.எச்.அப்துல்ஹமீத் ஆகியோர் நடித்த 'தெனாலி' என்று அந்த விளம்பரத்தில் போடப் பட்டிருந்தது.


உண்மையில் இந்தப்படத்தில் நான் எந்தவகையான பெரிய பாத்திரத்தையும் ஏற்று நடிக்கவில்லை. கமலுக்கும் எனக்குமிடையிலான நட்பின் காரணமாக ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மட்டும் தோன்றியுள்ளேன்.

கமலஹாசன் இந்தப்படத்தில் இலங்கையைச் சார்ந்தவராக நடிக்கிறார். அவருக்கான உரையாடல்களை இலங்கைத் தமிழ் மொழி நடையில் எழுதித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க யாழ்ப்பாணத் தமிழில் உரையாடல்களை எழுதிக் கொடுத்தேன்.

அத்துடன் ஒரு பாடலின் சில வரிகளை இலங்கை தமிழ்மொழிநடையில் எழுதிக் கொடுத்தேன். என்னுடைய பங்களிப்பு தெனாலி படத்தில் இவ்வளவு மட்டுமே.

'என்னுடைய பெயரை விளம்பரங்களில் இணைத்து விளம்பரம் செய்வதால், படம் முழுவதும் அப்துல்ஹமீத் பிரமாதமாக நடிக்கிறார்' என்று நமது ரசிகர்கள் ஏமாந்து விடக்கூடாது!" என்று கூறினார்.

# இன்னொரு டயானா?



மறைந்த இங்கிலாந்து இளவரசி டயானாவைப் போலவே இருக்கிறார் சாஸி என்ற பெண்மணி. இவரது தோற்றத்தைக் கண்டு வியக்காதவர்களே இருக்க முடியாது. அச்சு அசலாகவே டயானா போல் இருக்கிறார் இவர்.

சாஸி தற்போது டயானா வேடத்தில் குறும்படம் ஒன்றில் நடித்திருக்கிறார்.

இப்படத்தில் மறைந்த இளவரசி டயானாவின் பழக்கவழக்கங்களையும் சமூகத்தொண்டினையும் படமாக்கி இருக்கிறார்கள். டயானா சாப்பிடுவது, நடப்பது போன்று படம் முழுவதும் டயானாவாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார் இவர்.

இப்போது இங்கிலாந்து முழுவதும் இந்தப்படத்தைப் பற்றித்தான் பேசிக் கொள்கிறார்கள்.

படத்தில் உள்ளது போல் நெற்றியை விரலால் தொட்டு புன்னகை கொட்டிப் 'பளிச்'சென மின்னுபவர் டயானா அல்ல. இளவரசி டயானா போன்ற தோற்றத்தில் ஜொலிக்கும் சாஸிதான் இது. நம்பமுடியவில்லையல்லவா?

# பேராசிரியர் மைக்கல் ஜாக்சன்



உலகப் புகழ்பெற்ற மைக்கல் ஜாக்சன் பேராசிரியராகப் போகிறார். அப்படியென்றால் இனிமேல் பாடமாட்டாரா?

அப்படியொன்றும் கிடையாது. ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் மைக்கல் ஜாக்சனை வகுப்பெடுக்க அழைத்துள்ளனர். எதைப் பற்றி? பொப்பிசை பாடல்களைப் பற்றியா?

இல்லை. குழந்தைகள் நலம் பற்றி. இதற்காக மைக்கல் ஜாக்சன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளார்.

குழந்தைகள் நலம்பற்றி விரிவுரை நடத்தும்,மைக்கல் ஜாக்சன் மீது சில வருடங்களுக்கு முன், குழந்தைகளைப் பாலியல் கொடுமைப்படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டுக் கூறப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.


# ஒரு க்ளுக்... ஒரு குலுக்...

## ரேட் 20 இலட்சம்



இப்போது கடைகள் திறப்பதென்றால் பிரபல நடிக, நடிகைகளைக் கூப்பிடுவது இந்தியாவின் ஃபாஷனாகி விட்டது. இதில் தமிழ் நடிக, நடிகையர் மட்டுமல்ல இந்தி நடிக, நடிகையரும் திறப்புவிழாக்களுக்குச் செல்கின்றனர்.

இப்படியான திறப்புவிழாக்கள் மற்றும் பொது விழாக்களில் இவர்கள் சும்மா தலை காட்ட வாங்கும் 'ரேட்' என்ன தெரியுமா?



'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' உட்பட ஒரு சில தமிழ்படங்களில் நடித்திருக்கும் தபு மற்றும் ஊர்மிளா, ரவீனா ஆகிய நடிகைகள் கடை திறப்பு விழாவில் ரிப்பன் வெட்ட ஒரு 10 நிமிடத்திற்கு சுமார் ஒன்றரை இலட்சம் இந்திய ரூபாய் வாங்குகிறார்கள்.

ஷாருக்கான்-இவருக்கு இருக்கும் மவுசு, இந்தித் திரைப்படங்களில் மட்டுமன்றி இந்திய நகரங்களிலும் இவருக்கு ஏக மவுசு. இவர் ஒரு பொது நிகழ்ச்சியில் பங்குபற்றி ஒரு க்ளுக் சிரிப்பு, ஒரு ஸ்மைல் குலுக் விட 20 இலட்சம் ரூபா வாங்குகிறார்.



ராஜேஸ் கன்னாவின் மகன் 6 இலட்சம், சல்மான் கான் 5 இலட்சம், கோவிந்தா 10 இலட்சம், கரிஷ்மா கபூர் 10 இலட்சம் என்று பெரிய தொகைகளாக வாங்குகின்றனர்.

தமிழ்ப்படங்களில் தலைகாட்டி வரும் பூஜா பத்ரா பொது விழாக்களில் கலந்து கொள்ள வெறும் 50 ஆயிரம் ரூபா வாங்குகிறார். இதனால் அதிகமான விழாக்களில் இவரைக் காணலாம்.

## ராஜநடை நடக்கும் இயந்திர மனிதன்


↓ இயந்திர மனிதர்களை உருவாக்குவதில் ஜப்பான் முன்னணியில் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன் ஜப்பானின் ஹொண்டா நிறுவனத்தால் உருவாக்கப் பட்ட இயந்திர மனிதன் தான் இது.

130 கிலோ நிறையும் 1.6 மீட்டர் உயரமுமான இந்த இயந்திரமனிதன் டோக்கியோவில் உள்ள கண் காட்சியகத்தில் நடக்க விடப்பட்டான்.

ராஜ நடையுடன் வலம் வந்த இவரை பார்வையாளர்களும், பத்திரிகையாளர்களும் கூடி நின்று படம் பிடித்துக் கொண்டனர்.

(பட உதவி: அஹமட் நியாஸ்-கொரியா)





## எண்ணமும் வண்ணமும்

↑ தென்கொரியாவும், வடகொரியாவும் அண்மையில் ஒன்றாக இணைந்து கொண்டதை அறிவீர்கள். இம்முறை ஒலிம்பிக் போட்டியில் இரண்டு கொரியாக் களும் இணைந்து போட்டியிட்டன.

ஒலிம்பிக் போட்டியில் இரண்டு கொரியாக்களும் இணைந்து போட்டியிடுவதை அறிந்து கொண்ட சில கொரியர்கள் சந்தோஷ எண்ணத்தை வெளிக்காட்ட தமது உடல்களில் வண்ணத்தைப் பூசிக் கொண்டாடினார்கள்.

## த க வ ல் பெ ட் டி




## சைக்கிள் சாகசம்

↑ உலக அதிசயங்களில் ஒன்றான பாரிஸ் நகரில் இருக்கும் ஈபிள் கோபுரம் அருகே சைக்கிளில் சாகசம் நடத்துகிறார் இளைஞர் ஒருவர். உலக அதிசயத்தைப் பார்க்க வந்த உல்லாசப் பயணிகள் இந்த இளைஞரின் சாகசத்தையும் கண்டு களித்தார்கள்.

சுமார் ஆயிரம் அடி உயரத்திற்கு மேலாக சைக்கிளுடன் குதித்துப், பார்த்தவர்களை விழியகல வைத்தார் இந்த இளைஞர்.

↓ சமீபத்தில் ஜெர்மனியின் மியூனிச் நகரில் பியர் திருவிழா (எதுக்கெல்லாம் திருவிழா என்று ஒரு விவஸ்தையே இல்லையா?) நடைபெற்றது. இந்தத் திருவிழாவில் பியர் நிரப்பப்பட்ட கோப்பைகளை உயரே பிடித்தபடி சியர்ஸ் சொல்கிறார்கள். இந்தத் திருவிழாவில் 3 ஆயிரம் பீப்பா பியர்களை ஒரே நாளில் குடித்து முடித்து விட்டார்கள்-இந்த "குடிமகன்கள்."

## பியர் திருவிழா






## திரும்பாதே நீ திரும்பாதே!

↑ படத்தில் ஒய்யாரமாக நடந்து செல்லும் அழகியைத் தயவு செய்து திரும்பாதே என்று சொல்ல வேண்டும். பாஷன் ஷோ எனப்படும் அலங்கார ஆடை அணிவகுப்பு ஒன்று அண்மையில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்றது. இந்த அணிவகுப்பில் பொலித்தீன் போன்ற மேலாடையுடன் வலம் வந்த அழகி ஒருவர், திரும்பிச் செல்லும் போது அதையும் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு கண்களுக்குக் கவர்ச்சி

# விக்ரம் நடிக்கும் 'சாமுராய்'

இயக்குநர் மணிரத்னத்துடன் இணைந்து ஆலயம் என்ற பட நிறுவனம் சார்பில் 'ஆசை' போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் எஸ்.ஸ்ரீராம். இவர் இப்போது தனியாக வந்து தயாரிக்கும் படம் 'சாமுராய்'.

இதில் விக்ரம் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடிகளாக 'பெண்ணின் மனதைத் தொட்டு' நாயகி ஜெயா சீல் மற்றும் மும்பை புதுமுகம் அனிதா ஆகியோர் நடிக்கின்றனர். இவர்களுடன் நாசர், சின்னிஜெயந்த, வடிவுக்கரசி ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்து வருகின்றனர்.

இப்படத்தை பாலாஜி என்ற புதியவர் கதை, திரைக்கதை அமைத்து இயக்குகிறார். இவர் இயக்குநர் ஷங்கரிடம் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

இசை-ஹாரிஸ் ஜெயராஜ் (ஏ.ஆர்.ரகுமானின் குழுவில் இருந்தவர்) ஒளிப்பதிவு-சேது ஸ்ரீராம் (சந்தோஷ் சிவனின் உதவியாளர்), வசனம்-பட்டுக்கோட்டை பிரபாகர்.

# தெலுங்கிலும் வெற்றி

'ஆ சொந்தாம் ரண்டி' தெலுங்குப் படம் ஆந்திராவில் வெற்றிகரமாக ஓடுகிறது. தமிழில் வெற்றி பெற்ற 'தை பொறந்தாச்சு' தான் 'ஆ சொந்தாம் ரண்டி' என்ற பெயரில் தெலுங்கில் படமாக்கப்பட்டு ஓடுகிறது.

பிரபு-கார்த்திக்-கௌசல்யா நடித்த வேடங்களில் தெலுங்கில் ஜெகதிபாபு-ஸ்ரீகாந்த்-ரம்பா நடித்துள்ளனர். ராஜா வண்ணம் ரெட்டி என்பவர் இதை இயக்கியுள்ளார்.

# ஷங்கரின் அடுத்த பட...

முதல்வனை இந்தியில் இயக்கி வரும் ஷங்கர், தமிழ்... இயக்கும் படத்தினையும் முடிவு செய்து விட்டார்... எழுத்தாளர் சுஜாதாவும் உருவாக்கியுள்ளார்... படங்களில் கிராஃபிக்ஸ், அனிமேஷன் என அசத்... இந்தப் படத்திலும் பல புதிய அம்சங்களை புகுத்...

இப்படத்தின் நாயகன் கமல். இந்திய... ஷங்கர்-கமல்-சுஜாதா-ஏ.ஆர்.ரகுமான் இணை... இது. தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழி... பிரமாண்டமாகத் தயாராகும் இப்படத்தை ... டீர்மஸ்' பட நிறுவனம் தயாரிக்கிறது.

இதில் கதாநாயகியாக நடிக்கிறார் ... நாயகி பிரீத்தி ஜிந்தா. அது சரி. மணிர... படங்களில் நடித்த நாயகிகள் ஷங்க... களில் தவறாமல் இடம் பெறுவதன் ... தான் என்னவோ?

# நம்பிக்கை கண்...

சரத்குமார் இரட்டை வேட... வரும் 'ரிஷி' படத்தில் நகைச்சுவை... நடித்து வருகிறார் ரமேஷ்... 'உன்னிடத்தில் என்னைக் ...' படத்திற்குப் பின் 'ரிஷி' பட... நல்ல பெயர் கிடைக்கும் என... நம்பிக்கிறார் இவர்.



உதயா-விந்தியா-லிவிங்ஸ்டன்
படம்: பூங்குயிலே

# அனுராதா வாரிசு அறிமுகம்

முன்னாள் கவர்ச்சி குழுக்கு நடிகைகளில் அனுராதாவைப் பலர் மறந்திருக்கமாட்டார்கள். உதவி நடன இயக்குநர் ஒருவரை மணந்த பின் ஒரு படத்தில் குணச்சித்திர வேடம் ஒன்றில் நடித்தார். அதன் பின் ஆளையே காணவில்லை.

இப்போது இவரது மகள் அபிநயா குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிறார். விஜய்-சூர்யா இணைந்து நடிக்கும் 'ஃப்ரெண்ட்ஸ்' படத்தில் தான் அபிநயா அறிமுகமாகிறார்.

# மறுபடி ஒதுங்கினார்

ரசிகா என்ற பெயரை சங்கீதா என்று மாற்றிக் கொண்ட பின் 'டபுள்ஸ்' படத்தில் நடித்தார். நடித்தார் என்பதை விட கவர்ச்சியை இறைத்தார் எனலாம்.

அப்படியிருந்தும் 'டபுள்ஸ்' படத்தின் பின் சங்கீதாவுக்குப் புதிய வாய்ப்புக்கள் வரவில்லை. மறுபடி மலையாளக் கரையோரம் ஒதுங்கியுள்ளார் சங்கீதா.

# தெலுங்கில் பூங்காற்று

அஜித்-மீனா-கார்த்திக் நடித்த 'ஆனந்தப் பூங்காற்றே' தெலுங்கில் தயாராகி வருகிறது. தமிழில் அஜித்-கார்த்திக் ஏற்ற வேடங்களை தெலுங்கில் ஸ்ரீகாந்த்-டாக்டர் ராஜசேகர் நடிக்கின்றனர்.



## முகப்பில்

விஜய்-சிம்ரான்
படம்: ப்ரியமானவளே



அஜித்குமார்-சுரேஷ்கோபி
படம்: தீனா

# மீண்டும் கல்பனா

பாக்யராஜின் 'சின்னவீடு' படத்தில் அறிமுகமான ஊர்வசியின் சகோதரி கல்பனா சில வருடங்களுக்கு முன் கமலின் 'சதிலீலாவதி' படத்தில் நடித்தார்.

இப்போது இவர் மலையாளப்படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்து வருகிறார். புதிய தமிழ்ப்படமொன்றில் இவர் நகைச்சுவை வேடத்தில் நடிக்கவுள்ளார். இதில் இவருக்கு ஜோடி வடிவேலு.

# தேவயானியின் கௌரவத் தோற்றம்

சத்யராஜ்-திவ்யா உன்னி, மும்தாஜ் நடிக்கும் 'மிஸ்டர் நாரதர்' படத்தை இயக்கிவருகிறார் ஆக்தி சிதம்பரம். படத்தில் இரண்டு நாயகிகள் இருந்தும் தேவயானியையும் நடிக்கவைக்கப் போகிறார் இயக்குநர். முழு நாயகியாக அல்ல, கௌரவ வேடத்தில்.

சில காட்சிகளில் வந்தாலும் சிறப்பான வேடம் என்றபடியால் அதில் நடிக்கப் பச்சைக்கொடி காட்டி விட்டார் தேவயானி.

# அடுத்த தயாரிப்பு

மனோஜ்-மீனா இணைந்து பாடிய '16 வயதினிலே' இசை அல்பம் அமோகமாக விற்பனையானதைத் தொடர்ந்து இன்னொரு இசை அல்பத்தை உருவாக்கப் போகிறார் மனோஜ்.

இந்த அல்பத்திற்கு 'காதல் ஓவியம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இரண்டு அல்பங்களுக்கும் தனது தந்தை பாரதிராஜாவின் படப்பெயரையே சூட்டியிருக்கிறார் மனோஜ்.

# புது முகங்கள் நடிக்கும் 'தொட்டுவிடத் தொட்டுவிடத் தொடரும்'

ராமாலயா என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'தொட்டுவிடத் தொட்டுவிடத் தொடரும்'. இதில் முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கிறார்கள்.

கதாநாயகனாக அஜித் மணியன் நடிக்கிறார். இவர் திரைப்படக்கல்லூரியில் பயின்றவர். இவருக்கு ஜோடியாக நடிக்க புது முகத்தை தேடி வருகிறார்கள்.

இவர்களுடன் பாண்டு, ஜெயலட்சுமி, சப்தா ஆனந்த், லதா, வேம்பு, காத்தாடி ராமமூர்த்தி, ஜூனியர் பாலையா உட்படப் பலர் நடிக்கின்றனர்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கைங்கை அமரன் இசையமைக்கும் இப்படத்தை கருணாநிதி என்பவர் இயக்குகிறார்.

# மினி சினி

❁ பாண்டியராஜனுக்கு ஜோடியாக 'கும்பகோணம் கோபாலு' படத்தில் அறிமுகமான மயூரி மறுபடி தொடங்கப்பட்டிருக்கும் 'காமராசு' படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்து வருகிறார்.

❁ விஜய்-ஜோதிகா நடித்துள்ள 'குஷி' தெலுங்கில் தயாரிக்கப்படுவது தெரிந்ததே. பவன் கல்யாண்-பூமிகா நடிக்கும் இப்படத்தில் தமிழில் நடித்த அதே வேடத்தில் மும்தாஜ் நடிக்கிறார்.

❁ பி.வாசு இயக்கும் 'வண்ணத்தமிழ்ப் பாட்டு' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் வைஜெயந்தி இப்படம் வெளியாகும் முன்னரே விக்ரம் ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.

❁ பிரசாந்த்-லைலா-சிம்ரான் நடித்து வெற்றிபெற்றுள்ள 'பார்த்தேன் ரசித்தேன்' படம் 'மை பெஸ்ட் ஃப்ரெண்ட்ஸ் வெட்டிங்' என்ற ஆங்கிலப் படத்தின் தழுவல் என்கிறார்கள்.

❁ அஜித்குமார் ஜோடியாக 'உயிரோடு உயிராக' படத்தில் நடித்த ரிச்சா இப்போது தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் நடித்து வருகிறார். இவர் விரைவில் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார்.

❁ பார்த்திபன் நடித்த 'சபாஷ்' சுமாராக ஓடிக் கொண்டிருப்பதைத் தொடர்ந்து அடுத்த பட வேலையில் இறங்கிவிட்டார் அதன் இயக்குநர் சுபாஷ். இப்படத்திலும் பார்த்திபன் தான் கதாநாயகன்.

❁ விஜயகாந்த் இரட்டை வேடங்களில் நடித்த 'வானத்தைப் போல' தெலுங்கில் தயாராவது தெரிந்ததே. தமிழில் கௌசல்யா நடித்த வேடத்தை தெலுங்கில் ஏற்றிருப்பவர் தீப்தி பட்நாகர்.

❁ சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் கமல் நடிக்கும் 'ஆளவந்தான்' படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிக்கும் இரு நாயகிகளும் இந்தி நடிகைகள். ஒருவர் ரவீனா டாண்டன், மற்றவர் மனிஷா கொய்ராலா சௌத்ரி.



சத்யன்-...
படம்: இ...

## தமிழில் தயாராகும் திகில் படம்

கன்னடத்தில் தயாராகி வரும் படமொன்று அங்கு வெளியாகும் அதே சமயம் தமிழிலும் மொழிமாற்றி வெளியிடவிருக்கிறது. இப்படத்தின் பெயர் 'பருவம் பத்தும் செய்யும்'.

கல்லூரி விடுமுறையின் போது கூடப்படிக்கும் மாணவி ஒருவரின் வீட்டில் தங்குகிறார்கள் 5 மாணவிகள். அச்சந்தர்ப்பத்தில் தினமும் ஒவ்வொருவராக கொலை செய்யப்படுகிறார்கள். இந்தக் கொலைகளைச் செய்வது யார்? இவர்கள் ஏன் கொல்லப்படுகிறார்கள் என்பது சஸ்பென்ஸ். இப்படத்தை அசோக்குமார் என்பவர் இயக்குகிறார்.

## பிரபுதேவாவுடன் நடிக்க மறுப்பு

பிரபுதேவாவுடன் திருமணம் என்று செய்தி பரவியதைத் தொடர்ந்து அவருடன் நடிக்க மறுத்து வருகிறார் மீனா. 'களவும் கற்று மற' உட்பட இரண்டு படங்களில் பிரபுதேவாவுடன் இணைந்து நடிக்கும் வாய்ப்புக்களை நிராகரித்து விட்டார் மீனா.

அதன் பின்னர் பிரபுதேவாவுடன் நடிக்க மூன்றாவது படவாய்ப்பு ஒன்றும் வந்தது. அதையும் தட்டிக் கழித்து விட்டார் மீனா.



விக்னேஷ்-சங்கீதா-வடிவேலு
படம்: என்றும் ஆனந்தம்




ஜோதிகா

## திரையுலக மறுபக்கம் 171

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# நகைச்சுவை நடிகரின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்ட தயாரிப்பாளர்

**வி**நாயகருடைய பெயரைக் கொண்ட இளம்நடிகர் ஒருவர் நடிக்கும் 'நீ தான் என்னுடைய ஆகாயம்' எனப் பொருள்படக்கூடிய படத்தை சிறிய தயாரிப்பாளர் ஒருவர் தயாரித்தார்.

படம் முடிவடைந்ததும், தணிக்கைக்குழுவுக்கு அனுப்பினார். படத்தைப் பார்த்த தணிக்கைக் குழுவினர், கத்தரியால் கண்டபடி கத்தரித்து விட்டனர்.

தணிக்கைக் குழுவினரின் கத்தரியால் காயப்பட்டதில் பெரும்பாலானவை நகைச்சுவைக்காட்சிகள். அக்காட்சிகள் முழுவதும் இரட்டை அர்த்த வசனங்களுடன் ஆபாசமாக இருப்பதாகக் கூறிக் கத்தரித்து விட்டனர்.

படத்தின் நகைச்சுவைக்காட்சிகள் கண்டபடி கத்தரிக்கப்பட்டதால் காட்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்தன. எனவே நகைச்சுவைக் காட்சிகளை புதிதாகப் படமாக்கி இணைத்துவிடத் திட்டமிட்டார் தயாரிப்பாளர்.

கஷ்டப்பட்டு சில இலட்சங்களைப் புரட்டிக் கொண்டு, இப்போது நகைச்சுவையில் முன்னணியில் இருக்கும் ஒரு நகைச்சுவை நடிகரை அணுகினார் அவர்.

இது சிறிய படநிறுவனம் என்பதைப் புரிந்து கொண்ட அந்த நகைச்சுவை நடிகர், "ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் சம்பளம் குடுக்க முடிஞ்சா பேசுங்க" என்று கறாராகக் கூறிவிட்டார்.

தயாரிப்பாளருக்கு அந்த நேரத்தில் வேறு வழி தெரியாததால் கொண்டு சென்ற பணத்தைக் கொடுத்து, அவரை மூன்று நாட்களுக்கு நடிக்க ஒப்பந்தம் செய்து விட்டுச் சென்றார்.

ஆந்திர மாநில எல்லைப்பகுதியில் உள்ள காட்டுப் பகுதி ஒன்றில் படப்பிடிப்பு நடத்தினார்கள். இதில் நகைச்சுவை நடிகருக்கு ஜோடியாக ஒரு கட்டிளம் கவர்ச்சி நடிகையை நடிக்க வைத்தார்கள்.

ரம்பா-மந்த்ரா-ரவளி போன்றவர்களுடன் போட்டி போடுமளவுக்கு உடல் வாகைக்கொண்ட அந்தப் புது நடிகையைக் கண்ட நடிகர் அப்படியே சொக்கிப் போய் விட்டார்.

நடிகையின் அழகில் மயங்கிய நடிகர், "ஏம்மா இதுவரைக்கும் என் கண்ணுல படாமல் போயிட்டியே" என்று வழிந்தார். அது மட்டுமன்றி படப்பிடிப்பு முடிந்ததும் அந்த நடிகையின் படுக்கையில் பங்குபோட எண்ணினார் நகைச்சுவை நடிகர்.

ஒப்பந்தம் செய்யப்பட்டதை விட இரண்டு நாட்கள் அதிகமாக நடித்துக் கொடுத்த பின்னர் தான் நடிகையின் ஒத்துழைப்பு நடிகருக்குக் கிடைத்தது.

அதுமட்டுமன்றி, நடிகையின் அரவணைப்பில் அசந்து போன நடிகர் "இப்ப என் கூட ஜோடி போட்டு என்னை உதைச்சு நடிச்சுக் கிட்டிருக்காளே, அவளைக் கழட்டிவிடப்போறேன். அதுக்கப்புறம் நீ தான் என் ஜோடி" என்று வாக்குறுதியும் கொடுத்து விட்டார்.

நகைச்சுவை நடிகரின் பலவீனத்தைத் தெரிந்து கொண்டு புது நடிகையை நடிகருடன் இணைத்து, ஒப்பந்தம் செய்ததை விட இரண்டு நாட்களுக்குக் கூடுதலான வேலையும் வாங்கிய அந்த தயாரிப் பாளரை 'படுகில்லாடி' என்றனர் அந்தப் படப்பிடிப்புக்குழுவினர்.

## சுரேஷ்கோபி நீக்கம்?

'தீனா' படத்தில் அடியாள் வேடத்தில் நடிக்கும் அஜித்குமாரின் அண்ணனாக நடித்து வருகிறார் மலையாள நடிகர் சுரேஷ்கோபி அதே வேளை விஜயகாந்தின் 'வாஞ்சிநாதன்' படத்திலும் சுரேஷ்கோபி முக்கிய வேடம் ஒன்றில் நடிப்பதாக இருந்தது. இப்போது என்னானதோ தெரியவில்லை. 'வாஞ்சிநாதன்' படத்தில் இருந்து சுரேஷ்கோபி நீக்கப்பட்டுள்ளார்.


## 'பாரதிக்கு ராஜீவ் குரல்'

ஞானராஜசேகரனால் உருவாக்கப்பட்டிருக்கும் 'பாரதி' படத்தில் ஷாயாஜி ஷிண்டே என்ற மராத்தி நடிகர் பாரதியாக நடித்திருப்பது அனைவருக்கும் தெரியும். இதில் பாரதிக்கு குரல் கொடுத்திருப்பவர் நடிகர் ராஜீவ்.

பாரதி பாத்திரம் சிறப்பாக இருப்பதற்கு ஷிண்டேயின் நடிப்பு பாதி என்றால் மீதி ராஜீவின் மிடுக்கான குரல்வளம் என்பதில் ஐயமில்லை.



தீப்தி பட்நாகர்



...சல்யா
...ரயவன்

## காதோடு சொல்லுகிறோம்

**பு**கழ் வெளிச்சத்தில் 'பிரகாசமா....கா' மின்னும் மூன்றெழுத்துத் தங்கை நடிகையைத் தங்களது படங்களில் ஒப்பந்தம் செய்தவர்கள் அவஸ்தையில் நெளிகிறார்களாம். ஒப்பந்தமாகும் போது பேசிய சம்பளத்தை விட, அதிக சம்பளம் கேட்டுத் தினறடிப்பதே தயாரிப்பாளர்களின் அவஸ்தைக்குக் காரணமாம்.

**பட**ப்பிடிப்புக்காக வெளிநாட்டிற்குச் சென்றபோது நடனக் காதலருடன் ஏற்பட்ட தகராறினால், தங்கியிருந்த நட்சத்திர ஹோட்டலிலுள்ள பொருட்களை எல்லாம் சேதம் பண்ணிவிட்டாராம் 'சிம்ம' நடிகை. இந்தப் பிரச்சனையால் தயாரிப்பாளர்களுக்கு பெரிய நஷ்டமாம். நடிகை உடைந்த பொருட்களுக்கு அவர்கள் தான் தண்டம் கட்டினார்களாம்.

**ம**ண்வாசனை இயக்குநரின் மகனை வைத்து 'வில்வித்தைகாரர்' படத்தை இயக்கி வரும் இளம் இயக்குநர் மிகவும் நொந்து போயிருக்கிறாராம். ஒப்புக் கொண்ட திகதிகளில் நடிக்க வராது படத்தை முடிக்க விடாமல் இழுத்தடித்து வருகிறாராம் இயக்குநரின் மகன்.

**கோ**யம்புத்தூர் நகைச்சுவை நடிகையிடம் அடிவாங்குவது போல் நடிப்பது வைகைப்புயல் நடிகருக்கு விருப்பமில்லையாம். இதனால் நடிகையுடன் நடிக்க வரும் பட வாய்ப்புக்களை நிராகரித்து வருகிறாராம். இது தெரிந்ததும் நடிகை விவேகானந்தரைத் தனக்கு ஜோடியாகப் போடும்படி கேட்டு வருகிறாராம்.

# உன் வாக்கு யாருக்கு?

உனக்கான மணமகன்
தேர்வுத் தேர்தலில்
நானுமொரு வேட்பாளன்.
+++
உன் இதயமெனும்
அழகிய சிம்மாசனத்தில்
அமர்வதற்காய்....
எத்தனை வேட்பாளர்கள்
இந்த(த்) தேர்தலில்!
+++
மீன் கொத்திப்
பறவையாய், என்
மனங் கொத்திப் போனவளே...!
ஆளாகு முன்பே
என்னிதயத்தில் காதலெனும்
ஆணியடித்துப் போனவள் நீ!
+++
போட்டிகளேயில்லாமல்
உன்னை வென்று விடலாம்
என்றிருந்தேன், ஆனால்
நீ வாளிப்பாய் வளர்ந்தது கண்டு
உன் தோட்டத்தில் இன்று
எத்தனையோ வாலிப வண்டுகள்.
+++
மற்றவர்கள் போல்
வாக்குக் கேட்டு
உன் வாசலுக்கு
என்னால் வரமுடியவில்லை;
ஏனென்றால், உன்
பெற்றோர்கள் என்னை
எதிர்க்கட்சிக் காரனைப் போல்
எடுத்தெறிந்து பேசுகிறார்கள்.
+++
உன் ஆதரவு
எந்தப் பக்கமோ
எனக்குப் புரியவில்லை;
ஆனாலும் நானென்றும்
உன் பக்கம்.
+++
இந்த(த்) தேர்தலில்
உன்னுடைய பெயர்தான்
என்னுடைய சின்னம்
"மல்லிகைப் பூ"
+++
முத்து முத்தாய்
உன் நிலா முகத்தில்
சிதறிக் கிடக்கும்
வியர்வைப் பனித்துளிகளை
ஒற்றித் துடைக்கும்
உன் கைக் குட்டைதான்
என் கட்சிக் கொடி!
+++
இப்போது நீ
எந்தக் கட்சியில்
இருக்கிறாயோ
எனக்குத் தெரியாது....;
ஆனால்—
ஒன்றை மட்டும்
மறந்து விடாதே......!
முழுமூச்சாய்
உனக்காகப் பாடுபட்ட
முதன்மை வேட்பாளன் நான்!
+++
என்ன யோசிக்கிறாய்...?
எனக்குப் புள்ளடியிட்டால்
என்ன தருவேனென்றா.....?
என்னையே தருவேனடி....!

"தோப்பூர் நிலா நேசன்"

# அவளது ஆசை

அவள் ஒரு ராணி
அலங்கார வாணி
அவள் பசியாறும் தீனி
நான் தானே மன்னன்
அவள் பேசும் கண்ணன்.
(அவள் ஒரு....)

அவள் ஒரு பாவை
என் பாடல் கோவை
அவளுக்கு ஆசை
என் சிங்கார மீசை
(அவள் ஒரு....)


ஏன் இந்தத் தாகம்?
என் மேலே மோகம்
அவள் தேன் போன்ற முகமே
அது தெவிட்டாத சுகமே!
(அவள் ஒரு....)

கவிஞனின் உள்ளம்—பெருங்
கற்பனை வெள்ளம்
அதிலொரு கொஞ்சம்
அவனது நெஞ்சம்!
(அவள் ஒரு....)

காதலாம் என்றாள்......
வெறும் கற்பனை என்றேன்!
சாதலே இனியாம்!
அது சகஜம் தான் என்றேன்.
(அவள் ஒரு....)

மனம் நொந்து போனாள்
அவள் மயக்கமாய் ஆனாள்
விளையாட்டிற்காக
நான் செய்த செய்கை
வினையாக வந்து முடிந்ததே இன்று!
(அவள் ஒரு....)

எம்.இளையதம்பி—
மட்டக்களப்பு.



# தூசி தட்டிய டி

அன்று
உன்
நேச நெருடல்களில்
ஒரு பூனைக் குட்டியாய்
உன்
இதய அடுப்பங்கரையில்
சுருண்டு கிடந்தேன்—நான்
***
உனக்கு
நன்றாய்த் தெரியும்
நம் உறவு
மும்தாஜ்
சாஜஹான்
உறவை விட
ஒரு படி மேலானது....
கடந்த பொழுதுகளில்!
***
அடியேய்......!
இப்போதெல்லாம்
உன்
பிரிவுக் கீறல்களால்
ஆறாத காயங்கள்
மனசுக்குள்.....
***
நிலா விரிப்பில்
தலை சாய்த்ததும்
விழிகளுக்கும்
உறக்கத்துக்கும்
கொஞ்ச நாளாய்
உறவே கிடையாது.....
***
அடியேய்.....!
உன்
உம்மா
வாப்பாவின்
சொல் கேட்டு
எனக்குள் மட்டும்
ஏனடி
கனத்த காவியத்தை
எழுதி விட்டுச் சென்றாய்?
***
ஆமாம்......!
இன்றைய சுவாசிப்புக்கள்
நேற்றைய பொழுதுகளை
கவ்விக் கொண்டு
துடிதுடித்தவாறு....
***
போலிமுலாம்
பூசிய
உன் வார்த்தைகளால்
சிதைபட்டுப் போனது
என் வாழ்க்கை......!
அதனால்
நீளமாய்
எரிந்து கொண்டிருக்கின்றது
உன் உறவு....
***
அடியேய்....!
எல்லாமே
முடிந்துபோனது;
என்றாலும்
உன் ஞாபகங்களை
கொஞ்சம்
தூசி தட்டிக் கொள்கின்றேன்.....

கிண்ணியா
ஏ.நஸ்புள்ளா.

# தேன் கிண்ணம்

# பெற்றோர்

பத்திலே ஒன்றாய்
உத்தமி என்தாய்
முத்தாய்ப் பெற்றெடுத்தாள்.
குத்தரிசிச் சோறும்
குளத்து மீன் கருவாடும்
குப்பைக் கீரையும்
குறையாமல் இருக்கும்
எப்போதும் வீட்டில்—வேறு
சத்தாக எதுவுமில்லை—காரணம்
சொத்தென்று ஏதுமில்லை—ஆனால்
சொந்தங்கள் நிறைய உண்டு;
சொல்லிக் கொள்ள யாருமில்லை.
கொஞ்சக் காலம்
கஞ்சிக்கும் வழியில்லை
கொஞ்சப் பிள்ளைகளா நாங்கள்....
பஞ்சத்தில் அடிபட்டு,
பாதிவயிறு உணவுண்டு
மீதிக்கு வழியின்றி
நாதியற்றுத் திரிந்தாலும்
பாதியிலே நிறுத்தவில்லை
பள்ளிப் படிப்பை மட்டும்!
பத்திலே பாஸ்பண்ணி
பல்கலைக்கழகம் வரை
பத்துப் பேரும் படித்தமையால்
நித்திலத்தில் இன்று நாம்—தலை
நிமிர்ந்து நிற்கின்றோம்!
அத்தனைக்கும் காரணம்
அவனியில் எம் பெற்றோர் என்பதில்
ஐயமேதுமில்லை.

பற்குணன் அம்பிகாபதி—
மன்னார்.

# விளையாட்டு!

நீண்ட காலமாய்
ஓடுகின்றோம்!
ஓட்ட காலத்தை
ஒப்பிட்டால்
கின்னஸ் சாதனையில்
எம் பெயரும்.
***
நாங்களும்
வெடியோசை கேட்டுத்
தான்
ஆரம்பிப்போம்.
***
ஆனாலும்
எம்மால் பதக்கம்
பெற முடிவதில்லை.
***
நினைவுப் பரிசாய்
அவ்வப் போது
அவயங்களை
இழப்போம்....!
***
கண்ணீர் பரிசாய்
உறவுகளை
தொலைப்போம்!
***
ஆனாலும்
ஓடுகின்றோம்....
என்றோ
விடிவு வரும் என்ற
ஊக்க மருந்துடன்
ஓடுகின்றோம்....
சுதந்திரம் எனும்
முடிவுக் கயிற்றை
நோக்கி.....

எஸ்.செல்வமலர்—
வெள்ளவத்தை.

# "ஒரு தாயின் கண்ணீர் புஸ்பங்கள்...."

பல சுமைகளுக்கும்....
மத்தியில் உன்னை
ஈன்றெடுத்தேன்,
அன்றைய எனது வாழ்க்கையை
எண்ணுகையில்....
படிக்க வேண்டிய
வயசில் நான் "பரதேசியாய்"
ஊர் சுற்றி வயிற்றுப்
பசியை போக்கினேன்.
புத்தகம் தூக்க
வேண்டிய கரத்தில்
பிள்ளை பார்க்கும்
இளம் ஆயாவாய்.....!
சம்பளக் காசு வாங்கி
என் வயிற்றுப்
பசியைப் போக்கினேன்.
எல்லோருக்கும் மணவாழ்க்கை
போன்று எனக்கொரு
வாழ்க்கை அமைந்தது,
ஆம்.... ஆம்....
மணவாழ்க்கையில்
அமைந்த நான்
மகப்பேறு பெறாத
"மலடி" என்ற அரச
கீரிடம் கொடுப்பதற்கு
முன்னரே மகன்
என்ற உன்னைப் பெற்று
'விதவை' என்ற
விமர்சனம் பெற்றேன்.
எல்லோருக்கும் உள்ள
கற்பனை பாணியில்
உன்னை வளர்த்தேன்,
உன் மூலம் இனிமையாக
வாழ ஆசைப்பட்ட நான்......
உன் மனைவியின் இழிவான
வாய் சொல்லுக்கு இரையாகி
அன்று வாழ்க்கைக்கே
சுமையாக இருந்த நான்.....
உனக்கும் உன் மனைவிக்கு
சுமையாய் இருக்க விரும்பாமல்
'வயோதிபர் விடுதி' என்ற
சொர்க்கத்திற்கு என் கண்ணீர்
'புஸ்பங்களை அஞ்சலி'
செலுத்தி
அமைதியுடன் நாடுகிறேன்.

ப.தேவி—
நியூ பிறஸ்டன்.

# பாதையில் தாய் மொழி

அன்னையவள் ஈன்ற மறு
கணமே
அம்மா என்றதும் குழந்தை—
அங்கே
உதிர்த்தது தமிழ்மொழி!
தாயின் கருவறையில்
பயின்று—வந்த
தமிழ் மொழியும் இங்கே—
பாதைதனில்
வரைந்து விட்டு பாதணியால்
மிதிப்பதன்ன...?
இதுதான் தமிழுக்கு தமிழன்
கொடுக்கும் முக்கியத்துவமா?
***
இறைவனால் தோற்றுவித்த
முத்தமிழை
பிற்கால நன்மைக்காய்—பின்
தள்ள நினைப்பது
தவறாகதோ....?
உரிமைதனை பெறவல்ல;
உத்தமர்கள் நாங்கள் என்று
அழகான செந்தமிழை கவிதையாக்கி
'தமிழை வளர்ப்பேன்' என
உறுதிமொழி கூறிவிட்ட உத்தமர்கள் நீங்கள்
உரிமையோடு உங்கள் பெயரை
பாதைதனில் பொறித்து விட்டு
உமிழ்ந்து துப்பும் கேடுகெட்ட
செயல்தனைச் செய்யும் நீங்கள்....
தமிழை வளர்க்கும் முறை இதுதானா?
தமிழர்களின் புதல்வன், தமிழின் காவலன்
என்றெல்லாம் கூறும் வாதிகள் நீங்கள்.....
தமிழைப் பாதையில் போட்டு மிதிப்பதுதான்
தமிழைக் காக்கும் செயல் போலும்....!
இதுதான் தமிழன் தமிழுக்கு
கொடுக்கும் முக்கியத்துவமா?

எம்.திருமால்—சித்தாண்டி 02.



# நில்—கவனி—முன்னேறு

சந்தோஷம் என்னும் சொல் ஒரு சிறந்த ஐந்தெழுத்து மந்திரம். பிறரிடம் பேசும்போது அடிக்கடி சந்தோஷம், மகிழ்ச்சி, நல்லது போன்ற வார்த்தைகளைச் சொல்லுங்கள். அதனால் உங்கள் மனதிலும் பிறர் மனதிலும் சந்தோஷம் நிறைந்து கவலை, நோய், துன்பம் போன்ற உணர்வுகள் விலகி அன்பும் ஆரோக்கியமும் பெருகும்.

யாருமே கவலைகளற்றவர் இல்லை. கவலையும் சந்தோஷமும் மனதில் தோன்றுகிற உணர்வுகள் தான். எப்போதும் சிரித்த முகத்துடன் சந்தோஷமான மனதுடன் இருந்துவிட்டால் இத்தகைய எதிர்மறை உணர்வுகள் நம்மை நெருங்குவதில்லை.

பிறருடைய உதவியின்றித் தானாகவே நிமிர்ந்து நடக்கக் கற்றுக்கொண்ட குழந்தை



மிகுந்த சந்தோஷம் கொள்கிறது. ஆதாரமாகத் தன் தோளைத் தொட்டுக் கொண்டு நிற்கும் தாயின் கரத்தை தனது மிகுதியான ஆர்வம் காரணமாக உணர்வதில்லை. அதுபோலத் தான் நமது ஒவ்வொரு செயலின் சந்தோஷத்திற்குப் பின்னும் முயற்சி என்ற ஆதார சக்தி இருப்பதை நாம் மறந்து விடுகிறோம்.

ஆசை, திட்டமிடல், செயல் இவை மூன்றும் சரியாக இருந்தால் வெற்றி பெறுவது நிச்சயம். ஒவ்வொருவருக்கும் முக்கியமான சில ஆசைகள் இருக்கலாம். அவ்வப்போது வந்து போகும் சின்னஞ்சிறிய சந்தோஷக் கனவுகள் இருக்கலாம். அவற்றையெல்லாம் நீங்கள் ஆராயவேண்டும்.


அவை தேவைதானா, அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வசதி, வாய்ப்புகள் உங்களிடம் உள்ளதா என்றும் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்.

உங்கள் ஆசைகளை பகுத்துப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். எல்லாமே மனதிற்கு சந்தோஷம் தருவதாக மட்டுமே இருக்கும். அது தற்காலிகமானதாகவோ நிரந்தரமானதாகவோ இருக்கலாம். பின்விளைவாக நிகழும் செயல்கள் அளவு கடந்த துன்பங்களை உங்களுக்கு அளிக்கலாம். ஆனால், ஆசைகள் மனத்தின் சந்தோஷத்தை மட்டுமே முன்னிலைப்படுத்துகின்றன.

உதாரணத்திற்கு, மது அருந்துவது இன்பம் தரக்கூடிய செயல் என்று வைத்துக் கொள்வோம். தன் மனக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் கிடைக்கின்ற அந்த இன்பம் அல்லது மகிழ்ச்சி தற்காலிகமானதா நிரந்தரமானதா அல்லது இதன் பின் விளைவாக நிகழக்கூடிய உடல் பாதிப்புகள் தீவிரத்தன்மையுடையதா போன்ற விஷயங்களை ஆய்ந்து நோக்க வேண்டும். இதன் பிறகே மது அருந்துவது என்ற ஆசையை செயலாக்கத் தீவிரம் காட்ட வேண்டும்.

ஆசைகளை செயல் தீவிரம் காட்டி நிறைவேற்றிக் கொள்வதற்கு முன் இப்படிப்பட்ட சுய சோதனையை செய்து, பிறகு செயல்படுத்துவது நிரந்தரமான மகிழ்ச்சியையுடைய வாழ்க்கையை உங்களுக்கு சொந்தமாக்கும்.

# பேனா நண்பர்கள்



பெயர்: கே.ராஜா,
வயது: -
முகவரி: 43. வரக்கா
தொடுவ வீதி,
இரத்தினபுரி.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: எம்.தேவி,
வயது: 18
முகவரி: சிதம்பரபுரம்,
வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.

# இந்தவாரம் உங்கள் பலன்

22.10.2000 முதல் 28.10.2000வரை

ஜோதிடர் 'கார்னி'

**மேடம்:**
மாற்றங்கள் பல வரப்பெறும். நோய்துன்பங்களுக்கு இடமுண்டு. மாமியார் வீட்டுத் தொல்லைகள் ஏற்படும். பணச் செலவுடன் எதிர்பார்த்த விடயங்கள் விலகக்கூடும். கல்வி, அதிகாரத் தொழில் செய்வோர் கவனமாக இருப்பது நன்று. அச்சுவினி. பெண்கள் எதிலும் விழிப்பாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 22, 25.

**இடபம் :**
தொழில் பளு அதிகரிக்கும். திருமணத்தடைகள் விலகும். சகோதரர்களின் முடிவுகள் என்பன நன்மையைக் கொடுக்கும். பிள்ளைகளால் சிற்சில பிரச்சனைகள் வரப்பெறும். ரோகிணி, கார்த்திகை நட்சத்திரருக்கு திருமண வசதிகள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 24, 26.

**மிதுனம் :**
எதிரிகள் பலன் குன்றும் கஷ்டமான நிலைகள் வரப்பெறும். தொழில், உடல்நிலை சீராக காணப்படாது. மருத்துவச் செலவுகள். பணவிரயம் குடும்பத்தில் பிரச்சனைகள் வரப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 25, 27.

**கடகம் :**
தூரதேச உறவினர்கள் வருகை புதிய பொருட்களின் சேர்க்கை எதிர்பார்த்த சிறப்பான விடயங்கள் தடைப்படுவதும். நோய் துன்ப நிலை காட்டும். முக்கிய விடயங்களில் இவ்வாரம் ஆயிலிய, பூச நட்சத்திரர் கவனம் எடுக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 22, 27.

**சிம்மம் :**
பயணம் தொடர்பான புதிய நிலைப்பாடுகள் ஏற்படும். முக்கிய பணிகளால் பணவசதிகள் பெருகும். காதல், திருமண நிலைப்பாடுகள் மகிழ்ச்சிதரும். மகநட்சத்திரருக்கு பெருவெற்றி வாய்ப்பு ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 28.

**கன்னி :**
தொழிலில் பாதிப்புக்கள் காணப்படும். பணச்செலவும் அலைச்சலும் உறவினர்களால் கடும் தொல்லைகளும் வரப்பெறும். உடல் நிலை சோர்வாக அமையும். பயண அலைச்சல் அத்தக்காரருக்கு வரப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 22, 26.

**துலாம் :**
எதிர்பார்த்து உள்ள விடயங்கள் நல்ல நிலைக்கு வரும். உறவினர் சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். திருமண முடிவுகள் ஏற்படும். கல்வி, நிலை மாற்றங்கள் சீராக அமையும். சுவாதி நட்சத்திரருக்கு இவ்வாரம் வெற்றிகள் பெருகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 24, 28.

**விருட்சிகம் :**
திடீரென புதிய முடிவுகள் எடுக்க நேரிடும். எதிர்ப்பை மீறிய நிலை குடும்பத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு கல்வித்துறை உயர்வுடன் தொழில் துறை விருத்தியடையும். கேட்டை காரருக்கு சந்தோஷமான நிலை உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**தனுசு :**
கல்வியில் உயர்வுண்டு. எதிர்பார்த்த சம்பள உயர்வும் பணவருவாயும் வெளியூர் பயண வசதிகளும் ஏற்படும். நண்பர்களால் எதிர்பார்த்த நன்மையுண்டு. பெண்களுக்கு திருமண வசதிகள் ஏற்படும். மூல நட்சத்திர பெண்கள் பயணவசதியும் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 24, 25.

**மகரம் :**
மனதில் நம்பிக்கையும் புதிய செயற்பாடுகளும் ஏற்படும். எடுத்த விடயங்களுக்கு பதில் பலன்கள் தரும். நோய் துன்ப நிவர்த்தியும் பொன், பொருட்கள் சேர்க்கையும் வீடு, வாகன வசதிகளும் பல புதிய பல னுடன் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 22, 23.

**கும்பம் :**
ஏமாற்றமான நிலை; பதவியிலுள்ளோர் சிக்கலான முடிவுகள் எடுப்பர். அரச அதிகாரங்களால் சிக்கல்கள் வரப்பெறும். விவசாய, கைத்தொழில் செய்வோர் ஓரளவு இலாபம் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 25, 27.

**மீனம் :**
புதிய முயற்சிகளுக்கிடமுண்டு மனதில் மாற்றங்கள் தோன்றும். ஆலய தரிசனமும் பெரியோர்களின் ஆசீர் வாதமும் கிட்டும் எடுத்த விடயங்கள் சுறுசுறுப்பாக அமையும் உத்திரட்டாதிக்காரருக்கு பலவசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

## ஜோதிகா போல் ஜொலிக்க...



முகம் மாசு மருவற்று பள பளப்பாக இருக்க வேண்டுமா? முட்டையின் வெள்ளைக் கருவை முகத்துக்கு தேய்த்து முகம் கழுவி வாருங்கள். கொள்ளை அழகாகக் காட்சி அளிப்பீர்கள்.

★ முகத்தில் ஏதாவது தழும்புகள் நீண்டகாலமாக மாறாமல் இருக்கிறதா? அவரை இலையை சாறு பிழிந்து தடவி வாருங்கள். கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும்.

★ வேர்க்குருவா? நுங்கின் உள்ளே இருக்கும் நீருடன் சிறிது எலுமிச்சை சாறை கலந்து பூசுங்கள். வேர்க்குரு மறைந்து விடும்.

★ முகப்பருவா? சாதிக்காயை சிறிதளவு இழைத்து தினமும் பருக்கள் மீது தடவி வாருங்கள். பரு இடம் தெரியாமல் போய் விடும்.

★ இளவயதில் தலை நரையா? கவலைப் படவேண்டாம். சீயக்காய், பாசிப்பயறு, பச்சரிசி, சிறிது கறிவேப்பிலை, மருதோன்றி இலை ஆகியவற்றை காயவைத்து அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வாருங்கள். பிறகு பாருங்கள்.

★ வேப்பிலையையும் மஞ்சளையும் அரைத்து தலைக்குத் தேய்த்து குளித்தால் பொடுகு மறைந்துவிடும்.

★ செம்பருத்தி பூவை நன்றாக காய வைத்து தேங்காய் எண்ணையில் போட்டு வைத்து தலைக்கு தேய்த்து வாருங்கள். கூந்தல் செழிப்பாக வளரும்.

★ துளசி இலையை அரைத்து தலையில் தடவி குளித்து பிறகு ஷம்பு போட்டு குளிக்க... பேன் இராது.

★ தலைமுடி உதிர்கிறதா? முட்டையின் வெள்ளைக் கருவை எடுத்து தலையில் தேய்த்து 10 நிமிடம் கழித்து சீயக்காய் போட்டு குளியுங்கள். தலைமுடி உதிர்வது நின்றுவிடும்.

★ உங்கள் மேனி பளபளப்பாக இல்லையா? சோறு வடித்த கஞ்சியை தினசரி 1 டம்ளர் குடிப்பதுடன், குளிக்கும் போது அந்தக் கஞ்சியை உடலில் தேய்த்து குளித்து வாருங்கள். பளபளப்பாகி விடுவீர்களாக்கும்.

★ உங்கள் கைகள் அழகாக காட்சி தர வேண்டுமா? எலுமிச்சைச் சாறை பூசி உலர்ந்தவுடன் கை கழுவுங்கள் போதும்.

## குழந்தைகளை வளர்ப்பது எப்படி?



குழந்தை வளர்ப்பது மிகப் பெரிய கலை. ஆனாலும் இதில் சைக்கொலஜி எனப்படும் மனப் பக்குவம் இருக்கிறதே இதைக் கையாளுவதில்தான் ஒரு குழந்தையின் வளமான எதிர்காலம்அமையும் என்பது அறிஞர்களின் கருத்து அந்த மனதத்துவ இயலை கொஞ்சம். தெரிந்து கொள்ளுங்களேன்.

◆ குழந்தைகளை எதற்கெடுத்தாலும் திட்டவோ, அடிக்கவோ கூடாது. இரண்டையும் அடிக்கடி செய்து வந்தால், கால இடைவெளிகளில் குழந்தைகளுக்கு பயமில்லாமல் போகும்.

◆ குழந்தைகளை ஜாலியாக விளையாட அனுமதியுங்கள் அதன் பிறகே படிக்கச் சொல்லுங்கள்.

◆ மற்ற குழந்தைகளுடன் உங்கள் குழந்தை சேர்ந்து விளையாடுவதில் கவனம் தேவை. சில நல்ல பழக்க வழக்கம் இல்லாத குழந்தைகளோடு சேர அனுமதிக்காதீர்கள்.

◆ "பக்கத்து வீட்டு பிள்ளையைப்பார் எவ்வளவு கெட்டிக்காரன் நீயும் இருக்கிறாயே!" என்று ஒப்பிட்டு சொல்லி திட்டாதீர்கள். குழந்தை தன்னம்பிக்கையை இழக்க தொடங்கி விடும்.

◆ குழந்தையிடம் அப்பா கோபப்படும் போது அம்மா சமாதானம் செய்ய வேண்டும். அம்மா கோபப்படும் போது அப்பா சமாதானம் செய்ய வேண்டும்.

◆ உங்களுக்கு புது ஆடைகள் வாங்கினால் கண்டிப்பாக குழந்தைகளுக்கும் சேர்த்து வாங்குங்கள்.

◆ குழந்தைகள் அழும்போது அழுகையை நிறுத்தச் சொல்லி அடிக்காதீர்கள். உங்கள் மீது வெறுப்பு ஏற்படும்.

◆ குழந்தைகள் செய்யும் தவறைத்தான் நீங்கள் திருத்தமுடியுமே தவிர குணத்தை மாற்றவே முடியாது.

◆ குழந்தைகள் ஏதாவது நல்லதைச் செய்தால் பரிசுப் பொருள் வாங்கிக் கொடுத்து பழகுங்கள். ஆர்வம் அதிகரிக்கும்.


◆ குழந்தைகள் கேட்பதை வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் கேட்ட உடனேயே வாங்கிக் கொடுப்பது தான் தப்பு.

◆ பல முக்கிய விழாக்கள் வெளியிடங்களுக்கு குழந்தைகளை அழைத்து செல்லுங்கள். வெளியில் பார்க்கும் விஷயங்களை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

◆ குழந்தைகளை கனமான தடி, மற்ற பொருள் கொண்டு ஒருபோதும் அடிக்கக் கூடாது. ஆபத்து மட்டுமல்ல. குழந்தையின் மன பக்குவமும் மாறிவிடும். ■


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IL

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-10-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 59 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவுக்கும் கிளின்ரனுக்குமிடையில் தொலைபேசியில் சூடான வாக்குவாதம் தொடர்ந்து 56 நிமிடங்கள் நடைபெற்று முடிந்ததும், அவளை வெள்ளை மாளிகையில் உடனே வந்து பார்க்கும்படி கிளின்ரன் கூறினார். வெள்ளை மாளிகையிலும் இருவருக்குமிடையில் பலத்த வாக்குவாதம் தொடரக்கூடும் என்ற நினைப்புடனேயே மோனிக்கா அங்கு போய்ச் சேர்ந்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக கிளின்ரன் இன்முகம் காட்டி வரவேற்றார். சற்று முன்னர்தான் இருவரும் சண்டை போட்டனர் என்ற அடையாளமே இருக்கவில்லை. இருவரும் பழையபடி காதலர்களாகவே மாறிவிட்டனர்.

இருவருக்குமிடையில் சூடான வாக்குவாதம் ஏற்படக் காரணமாக இருந்த கடிதக் குறிப்புகளையிட்டு கிளின்ரனிடம் மோனிக்கா மன்னிப்புக் கோரினாள். அதைப் பற்றிய நினைப்பே வேண்டாம் என்று அவர் தடுத்து விட்டார். தன்னுடைய உடல் பெருத்து வருவதாக கிளின்ரன் கவலைப்பட்டார். இதற்கு மோனிக்கா, "இலட்சக்கணக்கான பெண்கள் உங்கள் அழகில் மயங்கிக் கிடக்கும்போது, நீங்கள் இவ்வாறு வீணாகக் கவலைப்பட வேண்டியதில்லை!" என்று அறிவுரை கூறினாள்.

சிறுவனாக இருக்கும்போதே உடல் பருமனால் தான் பட்ட துயர அனுபவங்களை கிளின்ரன் எடுத்துக் கூறினார். ஒருமுறை சிறுவர்களுக்காக நடைபெற்ற 'ஈஸ்டர் பணிஸ்' உண்ணும் போட்டியில் ஏனைய பிள்ளைகளுடன் வேகமாக ஓட முடியாமல் பிந்திச் சென்றமையினால் ஒரு சொக்கலட் பணிஸ்கூட தனக்குக் கிட்டாமல் போனமையினால் தானடைந்த துக்கத்தை மோனிக்காவிடம் விவரித்து இருவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

மோனிக்காவுக்கு தான் ஒரு நத்தார் பரிசு வாங்கி, வைத்திருப்பதாகவும் பண்டிகைக்கு முன் அவளை தான் அழைத்து கிறிஸ்மஸ் முத்தத்துடன் அதனை வழங்கப் போவதாகவும் கூறினார்.

"நான் வாயால் எதனையோ கூறினாலும் உன்னை ஒதுக்கிவிடமாட்டேன். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் உன்னை அழைத்து உறவாட மறக்க மாட்டேன்!" என்று கூறினார்.

இத்தகைய வார்த்தைகளால் பலதரப்பட்ட உணர்ச்சிகளின் கலவையுடன் மோனிக்கா வெள்ளை மாளிகையிலிருந்து தனதில்லம் நோக்கிப் புறப்பட்டாள். போவதற்கு முன்னர் கிளின்ரனிடம், "உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. சில நேரங்களில் பெருங்கொடுமைக்காரராக எனக்குத் தோன்றுகிறீர்கள். அடுத்து சில நேரங்களில் எனதுள்ளமெலாம் நிறைந்து அன்புக்குரியவராக எனக்குக் காட்சி தருகிறீர்கள். மணிக்கணக்காக 'என்னை அழ வைக்கிறீர்கள். அதே வேளையில் விவரிக்க முடியாத மகிழ்ச்சிக்கடலில் என்னை ஆழ்த்துகிறீர்கள். எப்படியிருப்பினும் என் உயிராகவே நீங்கள் என்னில் கலந்து விட்டீர்கள். மீண்டும் நத்தார் பரிசையும் முத்தத்தையும் உங்களிடமிருந்து பெறுவதற்கான நாள் வரும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்!" என்று கூறிவிட்டே மோனிக்கா நகர்ந்தாள்.

அந்தவார முடிவில் மோனிக்கா விமான மூலம் நியுயோர்க் சென்று தன்னுடைய தாயாருடன் தங்கினாள். மோனிக்கா தனதில்லம் சென்றதும் கிளின்ரனுக்கு அதிர்ச்சி தரும் செய்தியொன்று வந்து சேர்ந்தது. கிளின்ரன், தன்னுடன் பாலியல் உறவு வைத்திருந்தார் என்று பவுலா ஜோன்ஸ் தொடுத்திருந்த வழக்கில் பவுலாவுக்கு சார்பாக சாட்சி கூறுவதற்காக நீதிமன்றத்துக்கு அழைக்கப்படவிருப்போர் பட்டியலில் மோனிக்காவின் பெயரும் இருப்பதாக கிளின்ரனுக்கு தகவல் கூறப்பட்டது. இதனால் கிளின்ரன் படும் மனவேதனையைப்பற்றி ஒன்றுமே அறியாத மோனிக்கா, நியூயோர்க்கிலிருந்து கிண்டலும் கேலியும் நிறைந்த ஓர் அட்டையை அவருக்கு அனுப்பி வைத்தாள்.

நவம்பர் 21ம் திகதியன்று இரவு நேரத்தில் மோனிக்காவுக்கும் லிண்டா ட்ரிப்புக்குமிடையில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றிருந்தன. தன்னுடைய அந்தரங்கங்களை லிண்டா பகிரங்கப்படுத்துவதற்கு முயலுகிறாள் என்ற ஐயம் ஏற்பட்டதைத் தொடர்ந்துதான் இருவருக்குமிடையிலான சண்டை வலுவடைந்தது. இதன்பிறகு இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை.

டிசம்பர் 8ம் திகதி திங்கட்கிழமையன்று பெண்டகன் அலுவலகத்தில் ஓய்வு அறையின் பின்புறமாக இருந்த விறாந்தாவில் மோனிக்காவை லிண்டா சந்தித்தாள். மோனிக்காவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு லிண்டா தேம்பித் தேம்பி அழுதாள்.

"என்னை மன்னித்துவிடு மோனிக்கா! என்னுடன் உண்மையாக இதுகாலம்வரை பழகிவந்த உற்ற சிநேகிதியான உனக்கு நான் துரோகம் விளைவித்து விட்டேன். நான் மிகமிக கொடியவளாக நடந்து கொண்டேன்." என்று கூறி விம்மி விம்மி அழுதாள்.

பெண்டகனைவிட்டு மோனிக்காவிலகிச் செல்வதற்கு முன்னர் உத்தியோகத் தோரணையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தாள். அவள் புறப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர், ஏற்கனவே லிண்டாவுடன் போட்ட சண்டையையும் மறந்து, அவளுடைய பிறந்தநாளுக்காக ஒரு பரிசுப் பொருளைத் தெரிவு செய்து, அதனை அழகாகப் பொதி செய்து அலுவலகத்தில் லிண்டா இல்லாத தருணம் பார்த்து, அவளுடைய இருக்கையில் வைத்துவிட்டு வந்தாள் மோனிக்கா.

பெண்டகனைவிட்டு விலகிச் செல்வதற்குமுன்னால் எஞ்சியிருந்த பல அலுவல்களை மோனிக்கா முடிக்கவேண்டியிருந்தது. கிளின்ரனை இறுதியாகச் சந்திக்கும்போது வேர்ணன் ஜோர்டனிடம் தொடர்பு கொள்ளுமாறு கிளின்ரன் மோனிக்காவிடம் கூறியிருந்தார். தனக்கான ஒரு வேலையைத் தேடித் தருவதற்கு ஜனாதிபதி கிளின்ரனால் முடியாததையிட்டு ஏமாற்றமடைந்த அவளுக்கு வேர்ணன் ஜோர்டன் ஒரு வேலை தேடித் தருவதென்பது பழைய வேடிக்கையாகவே தென்பட்டது. இருப்பினும் 'பேஸ் போல்' பந்தாட்டக்காரர்கள் அணியும் தொப்பி ஒன்றை பரிசுப் பொருளாக மோனிக்கா ஜோர்டனுக்கு அனுப்பி வைத்தாள். அத்துடன் தன்னுடைய கல்வித்தராதரம், தொழில் அனுபவம் பற்றிய குறிப்புகளையும் அனுப்பி வைத்திருந்தாள்.

இதனைத் தொடர்ந்து டிசம்பர் 11ம் திகதி தன்னுடன் மதிய உணவு அருந்த வருமாறு ஜோர்டன், மோனிக்காவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பினை ஏற்ற மோனிக்கா ஜோர்டனிடம் சென்றிருந்தாள். நியூயோர்க்கிலுள்ள மூன்று முக்கியமான நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அந் நிறுவனங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மோனிக்காவிடம் ஜோர்டன் கூறினார். அந்த விண்ணப்பங்களின் பிரதிகளை தனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இருவரும் மனம்விட்டு உரையாடிக் கொண்டிருந்தபோது, கிளின்ரனுடன் மோனிக்காவுக்குள்ள உறவு பற்றியும் ஜோர்டன் வினவினார். அவருக்கு மோனிக்கா கிளின்ரனுக்கு சினமூட்டும் வகையில் எழுதியிருந்த கடிதம் பற்றி எல்லாமே தெரிந்திருக்கிறது என்பதை மோனிக்காவால் அறிந்து கொள்ள முடிந்தது.

## துரோகியாக மாறிய சிநேகிதி



"கிளின்ரன் உன்னையும் என்னையும் போல் ஒரு சாதாரண மனிதரல்ல. இவர் உலகத்தலைவர்களில் முதன்மை ஸ்தானத்தில் இருப்பவர். அவருடைய வார்த்தைக்கு உலகமே செவி சாய்க்கும். அவருடன் நீ சிறுபிள்ளைத்தனமாக சண்டை போட்டிருக்கிறாய். அவர் ஈராக் நாட்டின் பிரச்சனை தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயருடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த போது, அவருடைய அடுத்த தொலைபேசியில் நீ தகாத வார்த்தைகளால் அவரைத் திட்ட ஆரம்பித்திருக்கிறாய். கிளின்ரன் உன்னுடைய பேச்சுக்கு காதுகொடுப்பதா, அல்லது பிரிட்டிஷ் பிரதமருடனான உரையாடலைத் தொடர்வதா? உனக்கு யாருடனாவது சண்டை போடவேண்டுமென்று எண்ணமிருந்தால் எந்த நேரமாக இருந்தாலும் எனக்கு தொலைபேசி எடுத்து என்னைத் திட்டு. ஆனால் அந்தப் பெரிய மனிதருடன் அவ்வாறெல்லாம் நடந்து கொள்வது நல்லதல்ல!" என்று வேர்ணன் ஜோர்டன் அறிவுரை கூறினார்.

இதற்குப் பதிலளித்த மோனிக்கா, "நான் அவரை ஒரு ஜனாதிபதியாக- உலகத்திலேயே முதன்மையான தலைவராக என்றுமே கருதியதில்லை. அவரை ஒரு சாதாரண மனிதராகத்தான் நான் கருதி அவருடன் பழகினேன்!" என்றாள்.

உடனடியாகவே ஜோர்டன் "அப்போ உங்கள் இருவருக்குமிடையில் பாலியல் ரீதியான தொடர்பு இருந்திருக்கிறது, அப்படித்தானே?" என்று நேரடியாகவே கேட்டார்.

இந்த வினாவை சற்றும் எதிர்பாராத மோனிக்காவின் முகம் சிவப்பேறியது. தலைகுனிந்து கொண்டாள். தான் எதிர்பார்த்ததைவிட ஜோர்டன் மிக அதிகமாகவே அறிந்து வைத்திருக்கிறார் என்ற எண்ணம் மோனிக்காவுக்கு ஏற்பட்டது.

(வருவாள்)



## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## யாழ்ப்பாணம் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி சி. நவரெத்தினம், 271/3, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



# விதியே வலிமையானது!

ஒருநாள் அக்பர் அரசவையில் தம் மந்திரிமார்கள், அதிகாரிகளைப் பார்த்து 'விதி வலிமையுடையதா? சமயோசித புத்தி வலிமையுடையதா?' என்று கேட்டார்.

பீர்பால் அறிவைத்தான் சொல்வார் என்று நினைத்த அனைவரும் 'சமயோசித புத்தியே வலிமையுடையது' என்றனர். ஆனால், பீர்பால் மட்டும் ஒன்றும் கூறவில்லை. 'பீர்பால்! உன் கருத்து என்ன?' என்றார் அக்பர்.

'அரசே! விதியை எவராலும் மாற்றுவது எளிதல்ல. அது முடியாத காரியம். எனவே விதிதான் வலிமைமிக்கது, என்று கூறினார்.

'அதை நிரூபித்துக்காட்டு பர்ப்போம்?' என்றார் அரசர்.

'சமயம் வரும்போது நிரூபித்துக் காட்டுகிறேன், என்றார் பீர்பால்.

ஒரு நாள், நதியில் உல்லாசமாக படகுப் பயணம் செய்தனர் அக்பரும், பீர்பாலும். அவர்கள் பேச்சு மீண்டும் விதியைப் பற்றித் திரும்பியது. அப்போது அரசர், பீர்பால்! உனக்கு ஏன் இன்னும் வீம்பு. சமயோசித புத்தியே வலிமையுள்ளது என்று ஒத்துக்கொள்,' என்றார்.

அப்போதும் பீர்பால் 'விதிதான் வலிமையுள்ளது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை' என்றார்.

பீர்பாலின் பிடிவாதம் அரசருக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. தன் விரலில் அணிந்திருந்த வைர மோதிரத்தை கழற்றி நதியில் போட்டார் மன்னர். 'இந்த மோதிரத்தை நீ இன்னும் ஒரு மாதத்தில் கொண்டு வந்து என்னிடம் கொடுக்கவில்லை என்றால், உனக்கு மரணதண்டனை நிறைவேற்றப் படும்,' என்றார் அரசர்.

ஒரு மாதம் உருண்டோடியது. பீர்பால், மோதிரத்தைப் பற்றிய சிந்தனை இல்லாமலே இருந்து வந்தார். கடைசி நாளாகிவிட்டது.



## பாப்பா முரசு சிறுகதை

'பீர்பால், நீ நாளைக்கு தூக்கில் தொங்கப் போவதை மறந்து விட்டாயா? இப்போதும் ஒன்றும் ஆகிவிடவில்லை சமயோசித புத்தியே வலிமையுள்ளது என்று ஒப்புக்கொள் என்றார் அரசர்.

'அரசே! எனக்கு மரணதண்டனை தான் கிடைக்க வேண்டும் என்பது என் விதியானால் அதை ஒருவராலும் மாற்ற முடியாது,' என்றார் பீர்பால்.

உடனே அரசருக்கு கோபம் எல்லையை மீறியது. பீர்பாலுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டார். இந்த தீய செய்தி நகர மக்களிடம் காட்டுத் தீ போல் பரவியது.

மறுநாள் தூக்கு மேடையின் முன்பாக பீர்பால் நிற்பதை தம் அரண்மனையின் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தார் அக்பர்.

தூக்கிலிடும் நேரம் வந்தது.

பீர்பால் தைரியமாக நின்று கொண்டிருந்தார். அப்போது அவரது தலைக்கு மேல் இருபறவைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஒன்று காயத்தோடு தப்பி ஓடியது மற்றொன்று தரையில் விழுந்தது. அதன் வாயில் கவ்வியிருந்த அரசரின் வைரமோதிரம் கீழே விழுந்தது.


பீர்பால் அதைக் கண்டதும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். உடனே பீர்பால் ஜன்னலருகில் இருக்கும் அரசரைப் பார்த்து கையசைத்தார். அதைக் கண்ட அரசர் தண்டனையை நிறுத்தும்படி கட்டளையிட்டார்.

பீர்பால், அரசரிடம் ஓடிவந்தார்.

தன்னுடைய பிடிவாதத்தை விட்டு விட்டு பீர்பால் தன்னிடம் மன்னிப்பு கேட்க வருவதாக நினைத்து மகிழ்ந்தார் அரசர். ஆனால், பீர்பாலோ, 'அரசே! என்னை மன்னிக்க வேண்டும். தலைவிதிதான் வலிமையுடையது என்பது என் விஷயத்தில் உண்மையாகி விட்டது.' என்று கூறி வைர மோதிரத்தை அரசரிடம் கொடுத்தார்.


மோதிரத்தைக் கண்ட அரசர் திடுக்கிட்டார். 'இது எப்படி வந்தது?' என்று ஆச்சரியத்தோடு கேட்டார். நடந்த விஷயத்தை கூறிய பீர்பால், 'விதி வலிமையுடையது என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா அரசே' என்றார் பீர்பால்.

'பீர்பால்! உன்னை வெல்ல யாராலும் முடியாது. நீர் ஒரு அதிசயப் பிறவி.' என்று சொல்லி மகிழ்ந்தார் அரசர்.




மூன்று பாதைகளில், எந்தப் பாதையால் சென்றால் ஜிம்மி தனக்குப் பிடித்த எலும்புத்துண்டை எடுத்துக் கொள்ள முடியும்?

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **28.10.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **365**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 363

பரிசுக்குரியவர்:
க.மனோராஜ்,
விபுலானந்த மகா வித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கே.பி.மொஹம்மட் ரமீஸ், வத்தேகெதர,பண்டாரவளை. | எஸ்.செல்வக்குமார், சென். ஜோன்பொஸ்கோ கல்லூரி , ஹட்டன். |
| எஸ்.சத்தியதர்சன், புவாக்ஹெடமுல்ல, பதுளை. | பாத்திமா றுஸ்கா ரியால்டீன், அமீனா தேசிய பாடசாலை, மாத்தளை. |
| கி.கீர்த்திகா, சைவமங்கயர் கழகம், வெள்ளவத்தை. | எஸ்.சுபாஸ், இந்துகலை தமிழ் வித்தியாலயம், நமுனுகுல. |
| ரி.திலிபன். ஹைலண்ட் தேசிய பாடசாலை,ஹட்டன். | க.தயாளன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| பி.பிரவீண் ப்ரகாஷ், திருத்துவக் கல்லூரி, கண்டி. | பாத்திமா ரஸ்னா , கு-அல்-இர்பான் மத்திய மகா வித்தியாலயம், பொல்கஹவெல. |

## தெய்வப் பிராணிகள்





விலங்குகளை வழிபடும் பழக்கம் ஆசிய ஆபிரிக்கா நாடுகளில் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றது. ஐரோப்பிய நாட்டினருக்குப் பூனை என்றாலே பிடிக்காது. ஆனால் ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள எகிப்து நாட்டினர் பூனையைத் தமது தெய்வமாக வழிபடுகின்றனர்.

தூரகிழக்கு நாடுகளில் பாம்புகளைத் துஷ்ட சக்தியாக் கருதுகின்றனர். ஆனால் ஆபிரிக்க ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் பாம்புகளைத் தெய்வமாகக் கருதி வழிபடும் பழக்கம் கொண்டவர்கள். இலங்கை, இந்தியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் பாம்புப் புற்றுகளைக் கோவிலாகக்கருதி வழிபடுகின்றனர்.

பிரேயிங் மந்திஸ் என்பது ஒரு வகைப் பூச்சியினம். இந்தப் பூச்சி தனது கால்களை மடக்கி வணங்குவது போல காட்சியளிக்கும் இதனால் இதைத் தெய்வீகப் பூச்சி என்று பல நாடுகளில் கருதுகின்றனர். இந்தப் பூச்சி கால் மடக்கி நோக்கியிருக்கும் பகுதியில் பலத்த மழை பெய்யும் என்ற ஐதீகமும் உள்ளது.



## செய்து பாருங்கள்

**தேவையானவை :**

ஐஸ்கீறீம் கப், பற்பசை மூடி நான்கு, கறுப்பு மணிகள் இரண்டு, சிறிய கடதாசி அட்டை, பஞ்சு, ஸ்டரோ,கத்தரிக்கோல்.

**செய்முறை :**

ஐஸ்கிறீம் கப்பை நன்றாகக் கழுவி, அதன் அடிப் பாகத்தில் 4 பற்பசை மூடிகளையும் ஒட்டவும்.

மின்னும் கறுப்பு மணிகளை கண்களாக ஒட்டவும். ஸ்ட்ரோவை 6 துண்டுகளாக வெட்டி மீசை போல் ஒட்டவும்.

கடதாசி அட்டையை வெட்டி, படத்தில் உள்ளது போல் பூனைக்கு காது வைக்கவும். இப்போது பஞ்சை எடுத்து கப்பின் பின்புறம்



வால்போல் ஒட்டி விடவும்.

பூனைக் கப் தயார். இதை உங்கள் மேசையில் வைத்து அழிரப்பர், பிளேட் போன்ற பொருட்களைப் போட்டு வைக்கலாம்.



**விறு விறு தொடர்**

சுசீலா சற்று முன் அவனைக் கேட்ட ஒரு கேள்வி அவனை இப்போது மீண்டும் விரட்டியது.

இத்தனை ஏற்பாடுகள் இருக்கும்னு அவன் எதிர்பார்க்க மாட்டானா? கண்டிப்பாக மண்டபத்திற்கு வருவானா?

நல்ல கேள்வி தான்.

இப்போது நான் தான் அந்த ரஞ்சித் என்றால் நான் என்ன செய்வேன்?

போலீஸ் என்னைத்தேடி நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு என்னைப் பிடிக்க வந்து விட்டார்கள். கடைசி நிமிடத்தில் கடுக்காய் கொடுத்து சவால் விடுவது போல கடிதமும் எழுதி வைத்து விட்டு நான் தப்பி விட்டேன்.

இப்போது போலீஸ் கண்டுபிடிக்க முடியாத ஏதோ ஒரு இடத்தில் பதுங்கி விட்டேன், சவால்படி காலையில் கல்யாணம் முடிந்ததும் சாமர்த்தியமாக ஆகாஷைக் கொலை செய்ய வேண்டும். என்ன செய்வேன்?

யோசிப்பேன். என்னை எதிர்பார்த்து வலை விரித்து போலீஸ் கூட்டம் மண்டபத்தில் காத்திருக்கும் என்பது




எனக்கு தெரியும். எந்த மாறு வேடத்தில் போனாலும் போலீசின் பார்வையிலிருந்து தப்புவது கடினம்.

ஆக ஆகாஷை நான் மண்டபத்திற்கே வரமால் கொலை செய்ய ஏதாவது வழி இருக்கிறதா என்று யோசிப்பேன்.

அப்படித்தான் ரஞ்சித்தும் யோசிப்பான்.

ஆகாஷ் திருமணம் முடிந்ததும் நாலு மணிக்குப் புறப்பட்டு ஏர்போர்ட் போகிறான். ஆறு மணி விமானத்தில் ஏறி டெல்லிக்குப் பறக்கிறான்.

ஊருக்குப் புறப்பட ஆகாஷ் நாலு மணிக்கு மண்டபத்தை விட்டு வெளியே வருவானே வந்து காரில் ஏறுவானே...

அது ஒரு வாகான சந்தர்ப்பம் ஆயிற்றே...

மண்டபத்திற்கு வெளியே ஏதாவது ஒரு கட்டடத்தின் மொட்டை மாடியில் பதுங்கியிருந்தால், கையில் துப்பாக்கியும் இருந்தால் அந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டு சுடலாமே...

பரத் உடனே புதிதாக செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி யோசிக்கத் துவங்கினான்.

அதிகாலை நான்கு மணிக்கு திறந்திருந்த அந்தப் பெட்டிக்கடையில் சிகரெட் வாங்கி அங்கேயே நின்று பற்ற வைத்துப் புகைத்த பரத் புதிதாக வேறு ஒரு கோணத்தில் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த நேரம்-

சுரேகா கட்டிலை விட்டு எழுந்தாள்.

கலைந்திருந்த தன் ஆடைகளைச் சரி செய்து கொண்டாள். கட்டிலின் அருகில் லேசாக வாய் பிளந்து உறங்கிக் கொண்டிருந்த ரஞ்சித்தைப் பார்த்தாள்.

அவளோடு சந்தோஷமாக இருந்து விட்டு உறங்குவதற்கு முன்பாக கடைசியாக அவன் சொன்னதை நினைத்துப் பார்த்தாள்.

"என் வாட்ச்சுல ஆறு மணிக்கு அலாரம் செட்பண்ணிட்டேன். ஒரு வேளை அசதில அந்த சத்தத்தில நான் எந்திரிக்காமல் போய்ட்டாலும் நீ என்னை எழுப்பி விட்டுடு. நான் சொன்ன திட்டத்துக்கு ஒத்துழைக்கிறதா தலையாட்டினே. அம்பதாயிரமும் முன் பணத்தையும் கை நீட்டி வாங்கிட்டே. காலைல திட்டத்திலேர்ந்து நீ பின் வாங்கிட மாட்டியே? அப்புறம் நான் திடீர்னு வேற திட்டம் போட அவகாசம் இல்லாமப் போயிடும். என்ன சொல்றே? உறுதியாச் சொல்லு!"

"ஒரு கொலைக்கு உடந்தையா இருக்கப் போறமான்னு நெஞ்சு திக்கு திக்குன்னுதான் அடிச்சுக்குது. ஆனா ஒரு லட்சம் பணம் கண்ணுக்கு முன்னாடி நின்னு விளையாட்டு காட்டுது. மனசைக் கல்லாக்கிக்கிட்டு நீங்க சொன்னபடி செஞ்சுடறேன்."

"வெரிகுட்!"

சுரேகா தலையணைக்கு அடியில் செருகி வைத்திருந்த அவன் தனக்குக் கொடுத்த அந்த ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டை கையில் எடுத்துப் பார்த்தாள்.

மிகவும் பிரமிப்பாக உணர்ந்தாள். 'யம்மாடி! ஐம்பதாயிரம்! இன்னொரு கட்டு இதே போல கிடைக்கப் போகிறது!

அதற்காக நான் செய்யப் போற வேலை என்ன?

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

இவன் சொல்லியிருக்கிற கல்யாண மண்டபத்திற்கு பட்டுப் புடவை கட்டிக் கொண்டு ஆடம்பரமாகப் போக வேண்டும். கல்யாணம் நடந்து முடிந்ததும் அந்த மாப்பிள்ளையிடம் சமயம் பார்த்து நெருங்க வேண்டும். சொல்லிக் கொடுத்தபடி நயமாகப் பேசி அந்த மாப்பிள்ளையை அவனுடைய அறைக்கு அழைத்து வர வேண்டும். அப்புறம் அந்த பல்கனி பகுதிக்கு அழைத்து வர வேண்டும்.

இந்த ரஞ்சித் ஏதோ ஒரு மொட்டை மாடியில் பதுங்கியிருந்தபடி அவனைச் சுடுவான். உடனே நான் நழுவி கல்யாண மண்டபத்தை விட்டு வந்து விடவேண்டும்.

எல்லாம் சரி. ஆனால் அநியாயமாக ஒரு உயிர்போக நான் காரணமாக இருக்கப் போகிறேன்.

அதுவும் அந்த மாப்பிள்ளை இவன் காதலி தீபிகாவுக்கு தாலி கட்டி முடித்த பிறகு இந்தக் கொலை நடக்கப் போகிறது.

அவள் தாலியின் ஈரம் உலர்வதற்குள் விதவை ஆகப் போகிறாள்! என்ன ஒரு கொடுமை! என்ன ஒரு கொடூரமான பழி வாங்கும் வெறி இவனுக்குள்!

இது எவ்வளவு பெரிய பாவம்!

ஏற்கனவே நான் செய்து வரும் பாவம் போதாதா? நான் எந்தப் பிறவியில் என்னென்ன பாவங்கள் செய்தேனோ- அதற்குத் தானே இப்போது உடம்பை விற்றுப் பிழைத்து வருகிறேன்!

சுரேகாவுக்கு யோசிக்க யோசிக்க மனதிற்குள் துக்கம் அதிகரிக்கத் துவங்கியது. குற்ற உணர்ச்சி குறுகுறுக்கத் துவங்கியது.

வேண்டாம்! இந்தப் பாவத்தை நான் செய்ய வேண்டாம்!

ஆனால்... இவன் ஒரு லட்சம் தருவதாகச் சொன்னதும், பாதிப் பணத்தை உடனே எடுத்துக் கையில் கொடுத்ததும்.... நான் தடுமாறிப் போய் ஒப்புக் கொண்டு விட்டேனே... போதை என் புத்தியை மறைத்து விட்டது!

சரி இப்போது ஆறு மணிக்கு இவன் எழுந்ததும் 'என்னை விட்டு விடு, நான் ஒத்துழைக்க மாட்டேன்' என்று சொன்னால் கோபப்படுவானே... பல தடவைக் கேட்டு உறுதி செய்து கொண்டானே.....

இப்போது மறுத்தால் கோபம் வந்து என்னையே சுட்டுக் கொன்று விட்டால்?

செய்ய மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

சரி, என்னைக் கொலை செய்யவில்லை என்றாலும், கொடுத்த இந்தப் பணக்கட்டைத் திருப்பிக் கேட்பான். கொடுத்தாக வேண்டும்!

ச்சே! கைக்குக் கிடைத்த இவ்வளவு பெரிய தொகையை உடனடியா இழப்பதா?

இவனே ஒரு அயோக்கிய ராஸ்கல்! போதை மருந்து கடத்தி அநியாயமான வழியில் பணம் சம்பாதிப்பவன். இந்தப் பணத்தை ரொம்ப நேர்மையாக இவனிடம் திரும்பிக் கொடுத்தேயாக வேண்டுமா?

இந்தப் பணத்தை நானே வைத்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் இந்தக் கொலைக்கு உடந்தையாகவும் இருக்கக் கூடாது.

'எப்படி இதைச் சாதிப்பது?'

கையில் பணக்கட்டை வைத்துக் கொண்டு சீரியஸாக யோசித்துக் கொண்டிருந்தாள் சுரேகா.

இவன் தான் தூங்கிக் கொண்டிருக்கிறானே... என் வீடு இவனுக்குத் தெரியாது. பேசாமல் எழுந்து என் வீட்டுக்குப் போய் விட்டால் என்ன?

இவன் எழுந்து பார்ப்பான். தேடுவான்.

இந்த வீட்டில் உள்ள மற்ற பெண்களிடம் விசாரிப்பான். அவர்களுக்கு என் வீடு தெரியுமே. விசாரித்துக் கொண்டு வந்துத் தொலைத்து விடுவானே....

இப்படிச் செய்தால் என்ன?

இவனை போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறது!

பேசாமல் போலீசை தொடர்பு கொண்டு நீங்கள் தேடும் ஆசாமி இங்கே தான் இருக்கிறான் என்று தகவல் சொல்லி அவர்களை வரவழைத்து பிடித்துக் கொடுத்து விட்டால் என்ன?

எனக்குப் பணம் மிச்சம்! பதுங்கி விடலாம்.

ஒரு கொலை நிகழாமல் தடுத்தும் விடலாம்.

சுரேகாவுக்கு அந்த யோசனை பிடித்திருந்தது.

சரி, போலீசை எப்படித் தொடர்பு கொள்வது?

இந்த வீட்டில் போன் இல்லை. தெரு முனையில் ஒரு பூத் உள்ளது. இது இருபத்திநான்கு மணி நேரமும் திறந்திருக்கும்.

அங்கே போய் யாருக்கு தகவல் சொல்வது?

இவன் என்ன சொன்னான்?

கல்யாண மண்டபத்தில் என்னைப் பிடிக்க போலீஸ் காத்துக் கொண்டிருக்கும் என்று சொன்னானே....

எனக்குத்தான் அந்த கல்யாண மண்டபத்தைத் தெரியுமே!

இந்தப் பணத்தை இதே வீட்டில் ஒரு ரகசியமான இடத்தில் ஒளித்து வைத்து விட்டால் அப்புறம் மெதுவாக எடுத்துக் கொள்ளலாம்.

நேராக இந்த கல்யாண மண்டபத்திற்கு ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு போய் அங்கே உள்ள போலீசிடம் தகவல் சொல்லி அவர்களைக் கையோடு கூட்டி வந்து விடலாமே!

நான் புறப்பட்டுப் போனதும் இவனுக்கு திடீரென்று விழிப்பு ஏற்பட்டு எழுந்து என்னைத் தேடினால்?

சற்றே யோசித்த சுரேகா எழுந்து அங்கிருந்த ஒரு காகிதத் துண்டை எடுத்தாள். பேனா எடுத்தாள். எழுதினாள்.

'சார், நீங்க சொன்னபடி பட்டுப்புடவை, நகை எல்லாம் வாடகைக்கு எடுத்து ரெடியாகி நான் கல்யாண மண்டபத்துக்கு வர்றதுக்கு நிறைய வேலை இருக்கு. அதனால நான் சீக்கிரமே புறப்பட்டுப் போறேன். நீங்க சொன்னபடி செஞ்சிடறேன். நீங்களும் சொன்னபடி அந்த மொட்டைமாடிக்கு வந்து தயாராக இருங்க.

-சுரேகா-

எழுதியதைப் படித்துப் பார்த்தாள். நம்புவான்! சந்தேகம் வராது!

அவன் கழற்றி வைத்திருந்த வாட்ச் அடியில் இந்தக் கடிதத்தை வைத்தாள்.

(தொடர்ந்து வரும்)

# ஒளிப்பதிவு அனுபவங்கள்

**திரைப்படங்களில் நடிக, நடிகையரை வைத்து இயக்குநர் அமைக்கும் காட்சிகளை திரையில் வடிவமைப்பவர் ஒளிப்பதிவாளர். தமிழ்த்திரைப் பட ஒளிப்பதிவாளர்களில் குறிப்பிடத்தக்க சிலரில் ஒளிப்பதிவாளர் வி.ராமமூர்த்தியும் ஒருவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த 23 படங்களை ஒளிப்பதிவு செய்திருக்கிறார் இவர்.**

**தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என 5 மொழிகளில்-1951 முதல் 1991 வரை 40 வருடங்களில் - 96 படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். 76 வயதான ராமமூர்த்தியின் திரையுலக அனுபவங்களைத் தொகுத்துத்தருகிறார் எஸ்.விஜயன்.**

**-எஸ். விஜயன்-**

மாயவரத்திலிருந்து பூம்புகார் செல்லும் வழியில் உள்ள புஞ்சை கிராமம் எனது சொந்த ஊர். மாயவரத்தில் எஸ்.எஸ்.எல்.சி., முடித்த பின் ஏதேனும் வேலை தேடிக் கொள்ள வேண்டுமென்பதற்காக சென்னை வந்தேன்.

அப்போது என் உறவினர் ஒருவர் அன்றைய பிரபல திரைப்பட இயக்குநரான கே.சுப்ரமணியத்திடம் பணிபுரிந்து வந்தார்.

அவர் மூலம் கே.சுப்ரமணியத்தின் அசோசியேட் இயக்குனரான சி.எஸ்.ஐ. ஐயர் உதவியால் நான் ஸ்டில் ஃபோட்டோ



'திருடாதே' படத்தில் எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி

கிராபராக பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. கன்னட 'பிரகலாதா' உட்பட கே.சுப்ரமணியம் இயக்கிய பல படங்களில் வேலை செய்த வகையில் படிப்படியாக தொழில் நுட்ப விஷயங்களை கற்றுக் கொண்டேன்.

அப்போது மாடர்ன் தியேட்டர்சிலிருந்து வந்த ஜெர்மன் நாட்டுக்காரரான ஃபிலிக்ஸ் ஜே.எச்.பேக்ஸ் என்ற கமராமேனின் உதவியாளரானேன். அவரோடு ஆலப்புழையில் இருந்த உதயா ஸ்டூடியோவில் தயாரான மலையாளப் படங்களில் பணிபுரிந்தேன். ஃபிலிக்சிற்கு இங்குள்ள சூழ்நிலை பிடிக்காமல் ஜெர்மனிக்குப் போய்விட்டார்.

அதனால் நான் திருவானந்தபுரம் சென்று, தயாரிப்பாளர் மெரிலாண்ட் சுப்ரமணியத்திடம் சேர்ந்தேன். அங்கு மூன்று வருடங்கள் இருந்தேன். நான் தனி ஒளிப்பதிவாளராகியதும் அங்கு தான். 1951ல் 'சத்ய நேசன்' என்ற மலையாளப் படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக நான் அறிமுகமானேன். மலையாளத்தில் அன்றைய சூப்பர் நடிகராக விளங்கிய சத்யனுக்கு முதல் 'மூவி டெஸ்ட்'(திரைப்படத்திற்கேற்ற முகவெட்டு இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான பரீட்சார்த்தப் படப்பிடிப்பு) எடுத்தது நான் தான். அவரது சமகால நடிகராக விளங்கிய பிரேம் நசீருக்கும் டெஸ்ட் எடுத்தேன். சென்னைக்கு 1952ல் வந்தேன். பி. ஆர்.பந்துலுவின் பத்மினி பிக்சர்ஸ் தயாரித்த படங்களில் பணியாற்றத் தொடங்கினேன். பணிபுரிந்த முதல் படம் சிவாஜி கணேசன், பத்மினி நடித்த 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி.' 'முதல் தேதி' படத்துக்குப் பின், பத்மினி பிக்சர்ஸ் நிறுவனத்தோடு கொஞ்சம் இடைவெளி. ஏ.எல்.சீனிவாசன் தயாரித்த 'அம்பிகாபதி', 'சக்கரவர்த்தி திருமகள்', 'திருடேதே' ஆகிய படங்களில் பணிபுரிந்தேன்.


அந்த வகையில் எம்.ஜி.ஆருக்காக நான் பணிபுரிந்த முதல் படம் 'சக்கரவர்த்தி திருமகள்.' அந்த சமயங்களில் எம்.ஜி. ஆரோடு எனக்கு நட்பு ஏற்பட்டாலும், அது நெருக்கமாகவில்லை. தொழில்நுட்பத்தில் அவருக்குள்ள ஆர்வம் எனக்கு வியப்பாக இருக்கும்.

'சக்கரவர்த்தி திருமகள்' வெளிக்களப் படப்பிடிப்பிற்கான இடங்களைத் தேர்வு செய்வதற்கு எம்.ஜி.ஆரும் வருவார். கையோடு டின் ஒன்றில் கோல்டன் பஃப் பிஸ்கட் (வட்டமாக இருக்கும் இனிப்பு குறைவானது) எடுத்து வருவார். எல்லாருக்கும் கிடைக்கும்.

'திருடாதே'யில் நம்பியாரோடு எம்.ஜி.ஆர்., மோதும் உச்சக்கட்ட சண்டைக் காட்சி இடைவெளியின்றி 30 மணி நேரம் தொடர்ந்தாற்போல் படமாக்கப்பட்டதாகும். முதல் நாள் காலை ஏழுமணிக்கு ஆரம்பித்து மறுநாள் பிற்பகல் ஒரு மணி வரை படப்பிடிப்பு நடத்தி முடித்தோம்.

எம்.ஜி.ஆரும், நம்பியாரும் களைப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடித்ததால் எங்களுக்கும் களைப்பு ஏற்படவில்லை. ஆனால், என் வீட்டிலிருந்து 'ஏன் வீடு திரும்பவில்லை?' என்று தொலைபேசி அழைப்பு வந்துவிட்டது.

இந்தச் சண்டைக் காட்சியில் எரியும் பல்பின் மேல் பகுதியை நம்பியார் சுட்டு உடைத்து விடுவார். அதனால் ஆடிக் கொண்டிருக்கும் பல்பின் ஒளி வட்டம் அறையைச் சுற்றி சுற்றி வரும். அந்த ஒளியில் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு எம்.ஜி.ஆரும், நம்பியாரும் மோதிக் கொள்வர்கள். குறைந்த வெளிச்சத்தில் அந்தக்காட்சி படமாக்கப்பட்டது.



ராமமூர்த்தி

கறுப்பு-வெள்ளை ஃபிலிமில் அப்படி குறைந்த ஒளியில் படமாக்கப்பட்ட முதல் படம் 'திருடாதே' தானென்று நினைக்கிறேன். அப்போது தான் 'ஹை ஸ்பீடு' ஃபிலிம் வந்தது. அதனால் சிறப்பாக படமாக்க முடிந்தது.

மீண்டும் பி. ஆர்.பந்துலுவிடமிருந்து அழைப்பு வந்தது. அவரது தயாரிப்பில் சிவாஜி மூன்று வேடங்களிலும், எம். ஆர்.ராதா இரண்டு வேடங்களிலும் நடித்த படம் 'பலே பாண்டியா'. அதனால் இரட்டை வேட, மூன்று வேடக் காட்சிகள் பலவற்றை மாஸ்கில் படமாக்க வேண்டியிருந்தது, என்றாலும் இந்தப் படத்தை 13 நாட்களில் எடுத்து முடித்தோம்.

தினமும் காலை ஒன்பது மணிக்குத் துவங்கி நள்ளிரவு 2 மணி வரை படப்பிடிப்பு நடைபெறும். கடைசி நாள் இரவில் நடித்து முடித்து விட்டு அமெரிக்கா செல்வதற்காக சிவாஜி நேராக விமான நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றார். 13 நாட்களில் ஒரு படம் முடிந்தது தமிழ்பட உடகில் ஒரு சாதனையே!

[அடுத்தவாரமும் வரும்]

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 25

## கலைவாணர் வந்து சேர்ந்தார்

கலைவாணர் அவர்கள் தன்னுடைய என்.எஸ்.கே. நாடக்குழுவினருடன் இலங்கை வரப் போகிறார் என்ற செய்தி நாடெங்கும் பெரும்பரப்பரப்பை ஏற்படுத்தியது. திரு. அம்பலவாணர் அவர்களே நாடகக் குழுவை இலங்கைக்குத் தருவிக்கிறார். என்று அறிந்த பலர், தங்கள் தங்கள் நகரங்களிலும் நாடக்குழுவினரை அழைத்து நாடகங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டனர். இவர்கள் எல்லாரும் மட்டக்களப்புக்குச் சென்று அம்பல வாணர் அவர்களைக் கண்டார்கள்.

இத்துறையில் எந்தவிதமான முன் அனுபவமுமில்லாத அம்பலவாணர் அவர்கள், திணறிப்போனார். அவரிடம் வந்தவர்கள் எல்லோருக்கும் கலை வாணரின் சென்னை முகவரியைக் கொடுத்து கலைவாணருடனேயே தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறி அனுப்பினார்.

இன்றுள்ளது போன்று தொலைத் தொடர்பு வசதிகள் அன்றில்லை என்பதனால், எந்த அலுவலுக்கும் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சென்றுதான் அந்த அலுவல்களை முடிக்கவேண்டிய நிலை அப்போது இருந்தது. கண்டி மகாத்மா காந்தி நினைவுப்பள்ளி நிதிக்காக என்.எஸ்.கே. நாடகக்குழுவின் ஒரு நாடகத்தையாவது நடத்துவதற்கு உதவுமாறு கோரி அம்பலவாணர் அவர்களிடம் சென்ற திரு.வைத்திலிங்கம், அம்பலவாண ரால் சினமூட்டப்பட்டு உடனடியாகவே சென்னை சென்றார். கலைவாணரையும் கண்டார்.

திரு.வைத்திலிங்கம் கலைவாண ரிடம் சென்று என்ன சொன்னாரோ, எப்படிச் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் நாடகக்குழுவினர் இலங்கைக்கு வருவதற்கான வரவேற்பு ஏற்பாடுகள் அனைத்தையும் வைத்திலிங்கமே ஏற்றுக் கொண்டதாக தகவல் வெளி வந்தது.

நாடகக்குழுவினர் கொழும்புக்கு வந்து தங்குவதற்கான ஏற்பாடுகள், கொழும்பிலும், கண்டி மாநகரங்களிலும் மகாத்மா காந்தி நினைவுப்பள்ளி நிதிக்காக நாடகங்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் வைத்திலிங்கம் அவர்களே செய்திருந்தார்.

கொழும்பு தமிழ யூனியன் விளையாட்டு மைதானமான ஓவல் மைதானத்தில் முதல் காட்சியும், அடுத்த நாள் கண்டியிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை வைத்திலிங்கம் செய்திருந்தார். இதனைத்தொடர்ந்து நாவலப்பிட்டியிலும் ஒரு நாடகத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இறுதியில் விபுலானந்த மணி மண்டபத்துக்காக மட்டக்களப்பில் இரு நாடகங்களை மட்டும் நடத்துவதற்கு திரு. அம்பலவாணர் ஏற்பாடு செய்திருந்தார். எங்கள் கோரிக்கையின் படி மட்டக்களப்பு பகுத்தறிவு இயக்க வளர்ச்சிக்காக நிதி திரட்ட பதுளையில் ஒரு நாடகத்தை நடத்துவதற்கு திரு. அம்பலவாணர் ஊடாக நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம்.

பதுளை சைவமாகாசபையினர் தங்களுக்கும் நிதி திரட்டுவதற்கு பதுளையிலேயே ஒரு நாடகத்தினை அரங்கேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.


பதுளையிலுள்ள இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்தே பதுளையில் நாடகத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தோம். பதுளைப்பிட்டி மைதானத்தில் திறந்த வெளி அரங்கொன்றினை அமைத்து, அதில் நாடகத்தை அரங்கேற்ற முடிவெடுத்து தீவிரமான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தோம். நாங்கள் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் சைவமகா சபையினர் பதுளை மாடர்ன் திரையரங்கில் என்.எஸ்.கே.யின் 'பணம்' நாடகத்தை அரங் கேற்றப்போவதாக விளம்பரம் செய்யத் தொடங்கினர்.


மட்டக்களப்பு பகுத்தறிவு இயக்கமும் பதுளை திராவிட முன்னேற்றக்கழகமும் இணைந்து 'மணமகள்' என்ற நாடகத்தை மேடையேற்றப்போவதாக விளம்பரம் செய்யத் தொடங்கினோம். இதனால் பதுளை வாழ் மக்கள் மட்டுமல்லாமல் எங்களுக்கிடையேயும் பெரும் குழப்பம் ஏற்பட்டது. மட்டக்களப்பிலுள்ள திரு.அம்பல வாணரிடம் வந்து, இந்தக் குழப்ப நிலை ஏற்படக் காரணம் என்ன என்று வினவினேன். அவர் திட்டவட்டமாக ஒன்றைக் கூறினார்: "பதுளையில் என்.எஸ்.கே. நாடகம் நடத்தும் உரிமை உங்களுக்குத் தான் தரப்பட்டுள்ளது. இதற்கான உரிமையை நான் தருகிறேன். என்.எஸ்.கே. நாடகசபாவின் உத்தியோகப்பூர்வமான கடிதமும் உங்களிடம்தான் உள்ளது. ஆகவே நீங்கள் பொலிசில் முறையிட்டு சைவமகாசபையினர் மீது சட்டநடவடிக்கை எடுக்கலாம்," என்றார்.

பதுளை நகரிலும் சுற்று வட்டாரங்களிலும் இருதரப்பினருடைய விளம்பரங்களும் போட்டி போட்டுக் கொண்டு நடைபெற்றன. அனுமதிச் சீட்டுகளும் ஆங்காங்கே விற்பனைக்கு விடப்பட்டன. ஒலி பெருக்கிகள் பூட்டப்பட்ட வண்டிகளில் தோட்டங்கள் எங்கும் விளம்பரங்கள் செய்யப்பட்டன. இருதரப்பினரும் தாங்கள் கூறுவதுதான் உண்மை என்றும் மற்றையவர்கள் கூறுவது பொய் என்றும் பிரசாரம் செய்து வந்தனர்.

என்.எஸ்.கே.யைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு பகுத்தறிவு இயக்கத்துக்கான நாடகம் மட்டக்களப்பை அடுத்துள்ள பதுளை என்ற ஊரிலே நடக்கவிருப்பதாகவும், சைவமகாசபையினருக்கான நாடகம் பதுல்லா (Baddula) என்ற இடத்தில் நடக்கப் போவதாகவும் கருதப்பட்டிருந்தது. பதுளை என்பதும் 'படுல்லா' என்பதும் இரு வேறு இடங்கள் என்றுதான் கலைவாணர் அவர்கள் கருதி விட்டார். இதனால் ஏற்பட்டதுதான் இந்தக் குழப்பம்.

கொழும்பு பதுளை சைவமகா சபையினர் கலைவாணருடன் தொடர்பு கொள்ளும் போதெல்லாம், ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட கடிதத்தலைப்பிலேயே கடிதம் எழுதுவார்கள். அதில் BADDULA என்றுதான் ஊர்ப்பெயர் இருந்தது. இதுவும் ஊர்ப் பெயர்க் குழப்பத்துக்கு மற்றுமொரு காரணமாக அமைந்துவிட்டது. சுதந்திரனிலிருந்த எஸ்.டி.எஸ். அவர்களிடம் தொலைபேசி மூலம், அப்போது பதுளையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை விளக்கிக் கூறி கலைவாணருடன் தொடர்பு கொண்டு விளக்கம் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். கலைவாணர், திரு.அம்பல வாணர் அவர்களிடம் கொடுத்திருந்த பொறுப்பினை ஏற்று நடத்த முடியாத நிலைமையிலிருந்தமையினால் கண்டியிலிருந்து வந்த திரு.வைத்திலிங்கத்திடம் நாடக ஏற்பாடுகள் பொறுப்புகளை ஒப்படைத்திருப்பதாகவும் அவருடன் தொடர்பு கொண்டு பிரச்சனையைத் தீர்த்து வைக்குமாறும் தெரிவித்திருந்தார். இத்தகவலை என்னிடம் கூறிய எஸ்.டி.எஸ். அவர்கள் மற்றுமொரு குண்டையும் தூக்கிப் போட்டார். நான் அதிர்ச்சியடைந்தேன்.





இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் 1949ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அதுவரை காலமும் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகவிருந்த 8 உறுப்பினர்கள் பதவியை இழந்தனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இந்திய வம்சாவளி பிரதிநிதியொருவரை அரசாங்கம் நியமித்தது. அவருடைய பெயர் எஸ்.வைத்திலிங்கம். அரசாங்க நியமன பிரதிநிதி வைத்திலிங்கம் தானேதான் என்று அக்காலகட்டத்தில் இந்தியா சென்றிருந்த-நாம் ஏற்கனவே குறிப்பிட்ட கண்டி நகரைச் சேர்ந்த வைத்திலிங்கம் இந்தியத் தலைவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அப்போது சென்னை ஆளுநராகவிருந்த ராஜாஜி அவர்களையும் இவர் ஏமாற்றியிருக்கிறார்.

வைத்திலிங்கத்தின் குட்டு வெளிப்பட அதிககாலம் எடுக்கவில்லை. இந்தியத் தலைவர்களிடம் பொய்சொல்லி ஏமாற்றியதற்காக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, சில ஆண்டுகள் வெலிக்கடையில் சிறைவாசம் இருந்தார். 'இத்தகைய ஏமாற்றுக்காரர் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களையும் குழுவினரையும் இலங்கைக்குக் கொண்டு வந்து நாடகங்களை ஏற்பாடு செய்வதா?' என்று எண்ணிப் பார்க்கவே என்னால் முடியவில்லை. இதற்கிடையில் 1954ம் ஆண்டு மே மாத இறுதியில் கலைவாணர் குழுவினர் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கி விட்டனர். அப்போது பெருமழை பொழிந்து கொண்டிருந்தது. அப்படியிருந்தும் பல்லாயிரக் கணக்கான இரசிகப் பெருமக்கள் விமான நிலையத்தில் திரண்டு நின்றனர்.

விமானம் வந்திறங்கியதும் விமானத்தின் அருகில் கொண்டுபோய் நிறுத்தப் பட்ட பஸ்ஸில் நாடக் குழுவினர் அனைவரும் ஏற்றப்பட்டு விமானத்தளத்தின் முன்புறமாகக் கொண்டு வந்து சேர்க்கப் பட்டனர்.

கலைவாணர் எம்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், வீ.கே.ராமசாமி, சி.எஸ். பாண்டியன், காகா ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.காந்தா போன்ற நடிகர்களும் காட்சியமைப்பு, ஒலி-ஒளி அமைப்பு ஆகியவற்றை ஏற்பாடு செய்யும் தொழினுட்பவியலாளர்களும், ஏறத்தாழ 35 பேர் கொண்ட குழுவினர் விமானமூலம் வந்து சேர்ந்தனர்.

நாடகக் குழுவினரை வரவேற்பதற்காக ஒரு சில பிரமுகர்களையும், பத்திரிகையாளர்களையும் திரு.வைத்திலிங்கம் விமான நிலையத்திற்கு அழைத்து வந்திருந்தார். அம்பலவாணர் அவர்களும் நானும் ஒரு புறமாக ஒதுங்கி நின்றோம். வைத்திலிங்கம் எங்களை பொருட்படுத்தவேயில்லை.

பஸ்ஸிலிருந்து இறங்கிய கலைவாணர் தங்களை வரவேற்க திரண்டு வந்திருந்த இரசிகப் பெருமக்களை நோட்டமிட்டு இரு கை கூப்பி வணக்கம் தெரிவித்தார். ஓர் ஒதுக்குப் புறமாக நின்ற திரு.அம்பலவாணரை கண்டு அருகில் வருமாறு கலைவாணர் அழைத்தார். திரு.அம்பலவார் என்னையும் தன் னுடன் அழைத்துக் கொண்டு சென்று கலைவாணருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடித் திரிந்த வைத்திலிங்கம் நாங்கள் இருவரும் கலைவாணருடன் நின்று உரையாடியதை விரும்பவில்லை.

குடிவரவுத் திணைக்களம் மற்றும் சுங்கப் பகுதி விவகாரங்கள் இருப்பதனால் நாடகக் குழுவினர் அனைவரும் விமான நிலைய அலுவலகத்துக்கு செல்லவேண்டியிருந்தது. இதை காரணம் காட்டி கலைவாணரை எங்கள் இருவரிடமிருந்தும் வைத்திலிங்கம் பிரித்துச் சென்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் திரு.அம்பலவாணரை விட வைத்திலிங்கம் என்னை ஒதுக்கித் தள்ளுவதை கலைவாணர் அவதானித்து விட்டார்.

நாடகக் குழுவில் வந்திருந்த காகா ராதா கிருஷ்ணன் சற்றுக் குள்ளமானவர். பஸ் வண்டியிலிருந்து அவர் இறங்கியதும் கூட்டத்தில் நின்ற ஒருவர் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கையாண்ட ஒரு முறை காகா ராதாகிருஷ்ணனுக்கு வேதனை தருவதாக இருந்தது. அவர் ஓடிச் சென்று, "டேய்!.... காகாடா" என்று உற்சாகமாகக் கத்திக் கொண்டு காகாவின் முதுகில் ஓங்கி அடித்து விட்டார். காகா ராதாகிருஷ்ணன், திடீரென்று தன் முதுகில் விழுந்த பலமான அடியினால் வேதனை தாங்காமல் நெளிந்த காட்சி என்றும் என் கண் முன்னே நிழலாடுகிறது.

கொழும்பு கோட்டையிலுள்ள-தற்போது இலங்கை மத்தியவங்கிக் கட்டடம் அமைந்திருக்கும் இடத்தில் குளோப் ஹொட்டல் இருந்தது. அதில்தான் கலைவாணர் குழுவினர் தங்குவதற்கான ஏற்பாடுகளை வைத்திலிங்கம் செய்திருந்தார். திரு.அம்பலவாணருடன் அவருடைய வண்டியில் நான் ஏறிக்கொண்டேன். இருவரும் முன்னதாகவே சென்று குளோப் ஹொட்டல் முன்புறமாக நின்று கொண்டிருந்தோம். **(இன்னும் வரும்)**

**இரா.பத்மநாதன்**

# கலை உலகில் கருணாநிதி 05

'சாதாரணமான சிறு வீடு. மறைந்த நண்பர் எம்.ஜி.சக்கரபாணி இருப்பார். அவருக்கே உரித்தான சிரிப்பை உதிர்ப்பார். வெளுத்த கதராடை, கழுத்தில் துளசி மணி மாலை, பின் கழுத்தில் ஒரு கர்சீப் இவை சகிதம் எம்.ஜி.ஆர்., எங்களோடு கிளம்பி விடுவார்.

'அப்போது கலைஞர் பட்டம் பெறாத கருணாநிதி அவர்களுக்கும், புரட்சி நடிகர் பட்டம் பெறாத எம்.ஜி.ஆருக்கும் வீதிகளில் சூழ்வாரின்றி வரக்கூடிய வாய்ப்பிருந்த காலம்.

மூவரும் திரைப்படங்கள்-குத்துச் சண்டை (மறைந்த சின்ன அண்ணா மலை அவர்களால் தாராசிங்-கிங்காங் போன்றவர்களின் மல்யுத்தங்கள் வியாபாரரீதியில் நடக்கும்) என்று டிராம் காரில் ஏறிச் சென்று பார்த்த அந்த நாட்கள், கண்களைத் துளிர்க்க வைக்கின்றன... அடிக்கடி திருவாரூருக்கு போய்விட்டு சென்னை வர வேண்டிய சூழ்நிலை 'மருதநாட்டு இளவரசி'யின் காரணமாக கருணாநிதிக்கு ஏற்பட்டது.'

எம்.ஜி.ஆரின் சகோதரர் எம்.ஜி.சக்கரபாணி கூறுகிறார்: 'எம்.ஜி.ஆர்., கோவையில் 'மர்மயோகி' படத்திலே நடித்துக் கொண்டு இருக்கும்போது, 'காளிதாசி' படத்தின் முதலாளி முத்துசாமி என்பவர் எம்.ஜி.ஆரிடம் வந்தார். 'ஏற்கனவே ஒண்ணரை இலட்சம் ரூபாய் செலவாகி விட்டது. எப்படியாவது அந்தப் பட்த்தை முடித்துவிட வேண்டும்... முடிக்காவிட்டால் ஊரிலே தலைகாட்ட முடியாது. ஏற்கனவே கெட்ட பெயர் வந்து விட்டது. ஆனால், டைரக்டராக மட்டும் 'அவரைப்' போட முடியாது,' என்று கூறினார்.

'சரியென்று டைரக்டராக நண்பர் ஏ.காசிலிங்கம் அவர்களை ஏற்பாடு செய்தோம். நாங்கள் சென்னைக்கு வந்தவுடன், முத்துசாமியும் சென்னைக்கு வந்து ரூ.350ஐ கையில் கொடுத்து விட்டு, 'நீங்கள் நடிகர்களுக்கு அதாவது அட்வான்ஸ் கொடுக்க வேண்டி இருந்தால் ஐம்பதோ, நூறோ கொடுங்கள். அடுத்த முறை பணத்தோடு வருகிறேன்,' என்று கூறிவிட்டு ஊருக்குச் சென்று விட்டார்.

'நான்-காசிலிங்கம்-எம்.ஜி.ஆர்., மூவரும், நகைச்சுவை நடிகர் ஆக யாரைப் போடலாம் என்று யோசித்து, கடைசியில் புளி மூட்டை ராமசாமியை போடத் தீர்மானித்தோம். ராயப்பேட்டையில் இருந்த அவர் வீட்டுக்குப் போய் அவருக்கு ரூ.101 முன்பணம் கொடுத்து விட்டு, திரும்ப டாக்சியில் வந்து கொண்டு இருக்கும் போது, 'காசிலிங்கம் சார்! எல்லாருக்கும் அட்வான்ஸ் கொடுத்து கிட்டே இருக்கோம். கதை வசனத்தை யார் எழுதறது?' என்று எம்.ஜி.ஆர்., கேட்டார்.

'நாஞ்சில் ராஜப்பா என்று ஒருவர் இருக்கிறார். 'இதயகீதம்' படத்துக்கு அவர்தான் எழுதியிருக்கிறார். அவரைப் போடலாமே!' என்றார் காசிலிங்கம்.

'டைரக்டர் ஏ.எஸ்.ஏ.சாமிகிட்டே அசிஸ்டன்ட்டா ஒருத்தர் இருக்காரே. அவர் கூட நல்லா எழுதுவதா சொன்னீங்களே, அவரைப் போட்டா என்ன?' என்று எம்.ஜி.ஆர்., கேட்டார். காசிலிங்கமும் 'சரி, போட்டாப் போச்சு,' என்று பதில் சொன்னார். உடனே திருவாரூரில் இருந்த அவருக்கு 'தயாரிப்பாளர் காத்திருக்கிறார் உடனே வரவும்-எம்.ஜி.ராமச்சந்திரன்' என்று தந்தி கொடுத்தோம். மறுநாள், 'நாளை வருகிறேன்,' என்று கருணாநிதி பதில் தந்திக் கொடுத்தார். காசிலிங்கம் அவர்களும், நானும் எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு காலையில் போனோம். ரயிலில் இருந்து இறங்கிய அந்த இளைஞரை வரவேற்று அழைத்துச் சொன்றோம். நாடார் ஒட்டலிலே அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

'அவர்தான்-முன்னாள் முதல்வர், எங்கள் நண்பர் மு.கருணாநிதி!'

'மறுநாள் முதல், நாங்கள் எல்லாரும் உட்கார்ந்து, கதையை உருவாக்கினோம். அந்தப் படத்திற்கு முன்பிருந்த பெயர் 'காளிதாசி.' இப்போது நாங்கள் 'மருதநாட்டு இளவரசி' என்று பெயர் வைத்தோம்.

'அந்தப் படம்தான் முதலாவதாக கருணாநிதி தனியாக கதை-வசனம் எழுதிய படம்.

'படம் வெளியாகி, நன்றாக ஓடியது. கருணாநிதி படத்தைப் பார்த்து விட்டு, எம்.ஜி. ஆரின் நடிப்பையும், கத்திச் சண்டையையும் புகழ்ந்து எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் எழுதிய ஒன்றிரண்டு



வார்த்தைகள் இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது. 'மருதநாட்டு இளவரசி'யின் புகழ் கொடிகட்டிப் பறக்கிறது. அதோடு விஜய குமாரியின் மானமும் சேர்ந்து பறக்கிறது,' என்று எழுதியிருந்தார். (விஜயகுமாரி என்று அவர் குறிப்பிட்டு இருப்பது, அந் நேரத்தில் ஜூப்பிட்டர் பிக்சர்சார் தயாரித்து வெளியிட்ட படத்தின் பெயர்.)

'மருதநாட்டு இளவரசி'யும், 'விஜய குமாரி'யும் ஒரே சமயத்தில் வெளிவந்தன.'

சக்கரபாணியின் இந்த வாக்குமூலத்திலிருந்து, 'மருதநாட்டு இளவரசி' படம் வெளிவந்தபோது கருணாநிதி சென்னையில் இல்லை என்பதும், தன் பெயரை டைட்டிலில் போடாத ஜூபிட்டர் பிக்சர்சார் மீது கோபத்தில் இருந்திருக்கிறார் என்பதும் தெரிகிறது.

'மருதநாட்டு இளவரசி' படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான ஸ்ரீவில்லிப்புத்தூர் முத்துசாமி சொல்கிறார்: "ஏற்கனவே எடுத்த 'காளிதாசி' படத்தை அப்படியே நிறுத்திவிட்டு, புதிதாக நாங்கள் எடுத்த படம்தான் 'மருதநாட்டு இளவரசி.' அதற்கு கதை வசனகர்த்தாவாக பொறுப்பேற்றிருந்த டி.வி.சாரி என்பவர்தான் எம்.ஜி.ஆரை அழைத்து வந்து அவரை கதாநாயகனாக போடும் படி சிபார்சு செய்தார். அதன்படியே எம்.ஜி.ஆரை ஒப்பந்தம் செய்தோம். ஆனால், டீ.வி.சாரி எங்களுக்கு ஒழுங்காக கதை வசனம் எழுதித் தரவில்லை. எப்போது கேட்டாலும், விஷயம் என் மண்டைக்குள் இருக்கிறது. பிறகு எழுதித் தருகிறேன்,' என்பார். இதனால் அவரைப் படத்திலிருந்து நீக்கி விட்டோம். வேறு யாரைப் போடலாம் என்று யோசித்த போது எம்.ஜி.ஆர்., தான் 'திருவாரூரில் கருணாநிதி என்று ஒருவர் இருக்கிறார்.

**ஆர்.சி.சம்பத்**

ஜூபிடரில் இருந்த போது எனக்குப் பழக்கம். நன்றாக எழுதுவார். அவரையே போடலாம்,' என்றார்.

அதே போல், டைரக்டராக ஏ.காசிலிங்கத்தையும் எம்.ஜி.ஆர்., தான் சிபாரிசு செய்தார். நாங்களும் தந்தி கொடுத்து கருணாநிதியை வரவழைத்தோம். வந்து, ஒரே வாரத்தில் முழுக்கதை வசனத்தையும் எழுதிக் கொடுத்து விட்டார்.'

*(வருவார்)*

# ஒரே பாதை

பிள்ளையார் கோயிற் சுப்பர பாதத்தில் என் உறக்கம் கலைந்தது. யன்னல் கிறாதியினூடு பரவிய பிஞ்சுச் சூரியனின் மெல்லிய ஒளியில் என் மனைவி கலா உறங்கிக் கொண்டிருந்தாள். நித்திரையில் தான் அவள் நிம்மதியாக இருக்கிறாள்.

பதினெட்டு வயதில் காதல். இருபது வயதில் திருமணம் என்று வாழ்க்கையை தொடங்கியவன் நான். மூன்று பெண் பிள்ளைகளுக்குத் தந்தையாகியும் ஒரு நிரந்தர தொழில் இல்லாத என்னைப் புலம்புவதிலே கலாவின் பகல்கள் தேய்கின்றன. இன்றும் என் மகள் சுற்றுலாப்பயணத்திற்குப் பணம் கேட்டிருந்தாள். இல்லை என்று சொன்னால் "அதுக்கெல்லாம் உழைக்கிறவனுக்குப் பொறக்கணும்; ஊர் சுத்துறவனுக்குப் பொறந்தா ஆசப்படக்கூடாது!" என்று மூக்கைச் சிந்துவாள்.

அவள் அழுவதிலும் நியாயம் இருக்கிறது. உடுப்புகள் தைத்து வரும் வருமானத்தில் தன்னுடைய தேவைகளையே நிறைவு செய்யமுடியாமல் தவிக்கும்போது சலித்துக் கொள்வாள். அவள் உழைப்பில் வாழ்வது சங்கடமாக இருந்தாலும் கூலி வேலைக்குப் போவதற்கு என் மனம் இடந்தரமாட்டேனென்கிறது. என்னைச் சூழ்ந்துள்ள போலிக் கௌரவத்தை களைய முடியவில்லை.

நேற்றுப் பற்றவைத்து மீதம் வைத்த சிகரட்டுக்குத் தீ, மூட்டுகிறேன். புகை உள்ளே இறங்கியதும் மூளை இயங்கத் தொடங்கியது. அவசரமா கயிற்றுக்கொடியில் தொங்கிய சேட்டை எடுத்து அணிந்து கொண்ட போது கலா படுக்கையிலிருந்து எழுந்து முடியை வாரிக் கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். "நந்தன்ட வீட்ட பொயிற்று வாறன்!" என்றவாறே நடக்கிறேன்.

வேலிக்கிடுகுகள் சிதைந்து கட்டைகள் துருத்திக்கிடந்தன. தகரக் கதவைத் தள்ளித் திறக்கிறேன். வாசலில் படுத்திருந்த நாயை நான் பயத்தோடு பார்க்க, நாயும் என்னைப் பயத்தோடு பார்த்தபடி வாலைச் சுருட்டிக் கொண்டது. என் வரவையே எதிர்பார்த்துக் காத்திருந்தவன் போல நந்தன் உடனே ஆயத்தமானான்.

நந்தன் எனக்கு அறிமுகமான நாளை நினைத்துப் பார்க்கிறேன். ஒரு வீட்டில், அடைத்துக் கிடந்த மலசலக்கூடக் குழியை துப்பரவு செய்து கொடுத்துவிட்டு, கூலியை வாங்கிக் கொண்டு அலங்கோலமாய் நின்றான். அன்றுதான் நான் இவனை முதன் முதலில் சந்தித்தேன். வாழ்க்கையின் உண்மைத் தன்மைக்கும் மனதின் எண்ணங்களுக்கும் இடைவெளி




தூரமாய் இருக்கின்றன. பதினாறு வயதுப் பருவத்தில் இவன் இருந்தான். ஆனால் இவனது எண்ணங்கள் முப்பதுகளைத் தாண்டியிருந்தன. என்னிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மனோநிலையில் இருந்தான். நேர்மையான எந்தத் தொழிலிலும் ஈனம் இல்லை என்பதில் மிகவும் உறுதியாக இருந்தான். ஆனால் வறுமை இவனைத் துரத்திக் கொண்டேயிருக்கிறது.

அவனை அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் செல்கிறேன். அங்கே எனது நண்பனின் மனைவிக்குச் சத்திரசிகிச்சை நடக்கவிருக்கிறது. குருதி கொடுப்பதற்கு ஒருவரை ஒழுங்கு செய்து தரும்படி என்னைக் கேட்டிருந்தான். அங்கே நந்தனிடமிருந்து குருதியைப் பெற்றுக்கொண்டார்கள். நான் என் நண்பனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டேன். இரண்டு ஐநூறு ரூபாய்த் தாள்கள். ஒன்றை நந்தனிடம் கொடுத்துவிட்டு விடை பெற்றேன்.

தையலுக்கு நூல் கட்டைகள் சமையலுக்கு கோழி என, சிலவற்றை வாங்கிக் கொண்டு கலாவிடம் கொடுத்தேன். அவள் தேநீர் தம்ளரோடு ஒரு புன்னகையுந் தந்தாள். எனது மகள் சுற்றுலா செல்வதற்குப் பணம் கட்டுவதற்காக பாடசாலைக்குச் சென்றேன். அங்கே அதிபதிரின் அலுவலகத்தின் அருகில் கூடிநின்ற கூட்டம் "உயர்தர அனுமதிக்காக பணம் செலுத்த வந்தவன் மயங்கி விழுந்து விட்டான்!" சலசலத்தது. "காத்து வரட்டும், விலகுங்க!" என்ற குரலுக்கு வழிவிட்ட கூட்டத்தினூடு பார்த்தேன். நந்தன்..... கண்கள் மூடிக்கிடந்தான். எனக்குச் 'சுரீர்' என்றது.

படிப்பதற்கே தன் குருதியை விற்றுப் பணம் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறான். நந்தனுக்காகப் பரிதாபப்பட்டேன். அந்தப் பணத்தில் பங்கெடுத்து விட்ட எனக்காக நானே வெட்கப்பட்டேன். என் செயலுக்காக முதன்முறையாகக் கூனிக் குறுகிப்போனேன்.

இனியாவது உடலை வருத்தி உழைத்துச் சம்பாதிக்க வேண்டுமென அவசரமான தீர்மானம் எனக்குள்ளே பிறந்தது. நந்தனைப் பற்றிய வேதனை என்னுள் பரவத்தொடங்குகிறது. பாடசாலையை விட்டு வெளியேறி ஐந்து நிமிட நடைக்குப் பின், என்னை அழைத்தவாறே ஓட்டமும் நடை யுமாக வந்து நின்றான் நடேசன்.

"அண்ணை, ரி.வி. ஒண்டு விக்க இருக்கு. பாத்து விலயக் குறைச்சி வாங்கித் தாங்கண்ண. உங்களுக்கும் என்னவுந் தாறன்....." என்றான். அந்த வார்தைகளில் எனக்குள் பிறந்திருந்த தீர்மானம் மெதுவாய் தளரத் தொடங்குகிறது. நந்தனின் முகத்தை ஒரு குதிரை மறைக்கிறது. என்னோடு பேசிய மனச்சாட்சி வாயை மூடிக்கொள்கிறது. நடேசனின் பின்னால் நடக்கிறேன்.

# இரவல்

'அண்டை அயல் என்று ஒற்றுமையாக இருக்கவும் வேணும். எங்களுடைய 'ஸ்ரேற்றசை' காப்பாற்றிக் கொள்ளவும் வேணும்..... இவருக்கென்ன தெரியும்..... பொருள் பெரிதா மனிதர் பெரிதா?'

ஆஞ்சனா தனது மனதிற்குள் தன் நிலைப்பாட்டை அவ்வண்ணம் நியாயப் படுத்திக் கொண்டாள்.

ஊர் உலகில் நடக்காத விடயமா?.... ரஞ்சன் அப்படித்தான். எல்லோருடனும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்கின்றமாதிரி! தனக்கு பிழை என்று பட்டால் யாருடைய முகத்தையும் பட்டென்று முறித்துவிடும் சுபாவம்.

ஆனால் ஆஞ்சனா அப்படியல்ல. தனக்கு சம்மதம் இல்லாத விடயங்களிலும் மற்றவர்களுடைய முகத்தை முறிக்கக் கூடாது என்பதற்காக எதையும் பெரிது படுத்தாமல் விட்டுக் கொடுத்து நடப்பாள்.

ஆஞ்சனாவும் ரஞ்சனும் விவாகமாகி தனிக்குடித்தனம் வந்து இந்த இரண்டு மாத காலத்தில் இருவருக்கும் இடையே உள்ள பிரதான கருத்து வேறுபாடு இதுதான்.

இதுவரை நாளும் ஆஞ்சனா தனது நிலைப்பாட்டில் சலனப்பட்டதில்லை. ஆனால் நேற்றையதினம் அயல் வாசியான யோகா 'ரீச்சர்' அவளிடம் சிறிய தங்க அட்டியல் ஒன்றை இரவல் கேட்டபோது சாட்டுப் போக்கு சொல்லி தட்டிவிடாமலும் கணவனது சம்மதம் பெறாமலும் அதனைக் கொடுத்து விட்டது தனது தவறோ என்று இன்று அவளது மனம் சஞ்சலப்படத் தொடங்கியிருந்தது.

'பத்து மணிக்கு தாலி கட்டு முடிந்து, மதிய விருந்துக்கு நின்று திரும்பியிருந்தாலும் கூட உறுதியளித்தபடி மாலையில் நகையைத் திருப்பிக் கொடுத்திருக்கலாம்....' என்று நினைத்து வருந்தியபடியே ஆஞ்சனா அடிக்கடி வாயிற் கதவுப் பக்கம் காதைக் கொடுப்பதும் பார்வையைத் திருப்புவதுமாக வேலைகளில் புலனை செலுத்தாமலும் நடையையே பிரதான கருமமாக நினைத்தது போலவும் மண்டபத்திற்கு குறுக்கும் நெடுக்குமாக நடந்து திரிந்ததிலேயே மதியம் சரிந்து விட்டது.

மாலையில் ரஞ்சன் அலுவலகம் முடிந்து வீடு திரும்பியும் ஆயிற்று.... அட்டியல் வரவில்லை!

சின்ன ஒரு படபடப்பு இருந்தாலும் புதுமணப்பெண்ணான ஆஞ்சனா தனது கவர்ச்சியால் அவனை திசை திருப்பிக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம் பார்த்து பக்கத்து வீட்டு சிறுமி வீட்டு உள் மண்டபம் வரை ஓடி வந்து 'அன்ரியை' தேடினாள். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

"என்ன மீனா....? என்ன வேணும்?" ஆஞ்சனா துருவினாள்.

மீனா தாயுடன் கோவில் போகப் போகும் ஆர்வ மேலீட்டால் கைகளை உதறிய படியும் கால்களை நிலத்தில் உதைத்தபடியும் அவசரம் காட்டினாள். "அன்ரி.... அம்மா



சந்திரக்காந்தி-திருமலை

கோவிலுக்குப் போறாவாம். சங்கிலி வாங்கி வரட்டாம்."

ஆஞ்சனாவுக்கு தர்மசங்கடமான நிலைமை. 'ஏற்கனவே கொடுத்த பொருள் வரவில்லை. வழக்கம் போல கோவில் போறவை, கொடுக்காவிட்டால் ரஞ்சன் யோசிப்பார். பிறகு அவர் என்னென்னவோ கேட்க நான் எப்படி எப்படியோ சமாளிக்க கதை சொல்லப் போய் வலிந்து பொல்லுக் கொடுத்தது போலவும் ஆகிவிடும்.'

'நாசமாய் போங்கோ....' என்று மனதில் திட்டி சங்கிலியை சிறுமியின் கழுத்தில் அணிந்து விட்டபடி.... "மீனா அச்சாப் பிள்ளை.... கோயிலாலை வந்த உடனே அன்ரிக்கு திருநீறு சந்தனம் கொண்டு வர வேணும்!" என்று கூறி ஆஞ்சனா சிறுமியை செல்லமாக தட்டி அனுப்பினாலும்.... சங்கிலி விரைவில் திரும்ப வந்து சேர்ந்துவிட வேண்டும் என்ற ஆதங்கம்தான் அந்த பேச்சிலும் செய்கையிலும் மேலிட்டிருந்தது.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சனுக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது.... "ஒரு நாளைக்கு அந்தப் பிள்ளை உன்னிடம் ஓடி வந்து தனது கழுத்தை தொட்டுக் காட்டி கையை விரித்துக் காட்டும் போதுதான் உனக்குப் புத்தி வரும்!" என்று எச்சரித்தான்.

ஆஞ்சனாவுக்கு எப்ப விடியும் என்று இருந்தது. ரஞ்சனுக்கான கடமைகளை துரிதப்படுத்தி... அவனை நேரகாலத்துடன் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து விட்டு யோகா 'ரீச்சர்' வீட்டுக்கு செல்லப் புறப்பட்ட அவள் கொஞ்சமேனும் எதிர்பாராத விதத்தில் 'ரீச்சரே' அவள் வீட்டு வாசல் வரை வந்து விட்டிருந்தாள்.

"பிள்ளை ஆஞ்சனா.... என்னைக் குறை நினைக்காதை..... ஒரு பிரச்சனையாய்ப் போச்சுது....."

ஆஞ்சனாவுக்கு தலையுடன் உடம்பு சுற்றாத குறை!

"என்ன ரீச்சர்?" வினவினாள்.

"நீ பயப்படாதை பிள்ளை.... உன்ரை அட்டியலுக்கு அட்டியல்! என்ரை கவனயீனம் என்று நினைக்காதை.... உன்னுடைய அட்டியல் தொலைந்து போய் விட்டது. என்னுடைய மனுசனைப் பிடிச்ச பிடியிலை நேற்று 'ரவுணுக்குப்' போய் அதே மாதிரி பொருளைத் தேடி வாங்கி வர இருண்டு போய் விட்டது. அதுதான் இப்ப காலையிலை ஓடிவந்தனான்."

ஆஞ்சனாவுக்கு சித்திர புத்திரனாரை நேரில் வரக் கண்டும்... 'அது நீங்களில்லை.... பக்கத்து வீடு' என்று அவர் சொல்லிவிட்டுப் போனதான சந்தோஷம்!

பொருளும் இது கனதியும் பார்வையும் கூடத்தான் இருக்கும்! ரஞ்சன் இன்னும் மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள் என்ற எல்லைக்குள்ளேயே இருப்பதை புரிந்து வைத்திருந்த ஆஞ்சனா, தனது அதிஸ்டத்தையும் திறமையையும் மனதிற்குள் அடக்க முடியாத குதூகலத்தில் விஷயத்தை அவனுக்குப் புட்டு வைத்தாள்.

ரஞ்சனுக்கு இதெல்லாம் எந்த வகையிலும் சரியாகப் படவில்லை!

அடுத்தடுத்து வந்த கலியாணவீடு, சாமத்திய வீடு, பிறந்த நாள் விழா என்ற கொண் டாட்ட வகைகளில் ஒன்றில் ரஞ்சன் குடும் பமும் யோகா 'ரீச்சரும்' சேர்ந்து சமூகமளிக்க வேண்டியிருந்தது.

ரஞ்சனும் ஆஞ்சனாவும் அமர்ந்திருந்த ஆசனங்களுக்கு சிறிது அப்பால் எதிரே யோகா 'ரீச்சர்' தனது சக ஆசிரியை ஒருவருக்கு ஆஞ்சனாவின் கழுத்தைச் சுட்டிக் காட்டி.....

"அதுதான் நான் அவாவுக்கு வாங்கி கொடுத்த தங்க அட்டியல்!" என்று கூறியது இருவருக்குமே அடித்தால் போல் கேட்டது.

ரஞ்சன் ஆஞ்சனாவின் முகத்தைப் பார்த்தான்....

ஆஞ்சனாவின் முகத்தில் எண்ணெய் பிய்த்துக் கொண்டு வழிந்தது!

# காதலுக்கு ஊனமில்லை!

அநாதையென்ற உணர்வுகளையெல்லாம் மறந்து அவனை இன்று வரை வாழவைத்துக் கொண்டிருப்பது பல்கலைக்கழகம் என்ற பெரிய வீடும், அதிலுள்ள மாணவர்கள் எனும் உறவினர்களுமாகும். சிறிய வயதில் தாய், தந்தையை இழப்பதற்கு யுத்தம் அவனுக்கு தூண்டுதலானது. கத்தோலிக்கப் பாதிரியாரின் பொறுப்பில் வளர்ந்த அவன் இன்று நண்பர்களின் அன்புச் சிறைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறான். கவிதை எழுதுவதில் வல்லவன். அவனது கவிதைகளில் தன் சொந்தக் கதை நிறைந்திருக்கும்.

அன்று திங்கட்கிழமை. இரு நாள் ஓய்வின் பின்னர் விரிவுரைகளுக்கு மாணவர்கள் சுறுசுறுப்பாகப் போய்க் கொண்டிருந்தார் கள். ஒரு சிலர் நேரத்துடனேயே வந்து வீதியோர பெஞ்சுகளில் உட்கார்ந்து கொண்டு வரும் பெண்களைக் கிண்டலடித்துக் கொண்டிருந்தனர். சில பெண்கள் அவர்கள் கிண்டலுக்குப் பதிலடி கொடுத்துச் சென்றனர். சிலர் கண்டும் காணாமலும் சென்றனர். இவைகள் அன்று மட்டும் ஒன்றும் புதியதல்ல. வழமையாக நடக்கும் விடயங்கள் தான்.

அந்த பெஞ்சுகளில் ஒன்றில் உட்கார்ந்து கொண்டிருந்தான் மேனன். அவன் கிண்டலடிப்பதற்காக அங்கு இருப்பதில்லை. கவிதை எழுதும் போது அடிக்கடி இவ்விடத்தில் இருப்பான். அத்துடன் தனக்கு மன ஆறுதல் வேண்டி அந்த மர நிழலில் இருப்பது வழக்கம்.

"மேனன் குட் மோனிங்.... ஏண்டா மறைக்கிறா? புதுக்கவிதையோ காட்டேன்டா!" சுரேஷ் எட்டிப் பறித்தான்.

"அது கவி தையல்லடா-லெட்டர்!" சுரேஷிடமிருந்து அதனை மீட்டெடுக்க முனைவந்தான். அவனைத் தள்ளி விட்டு, சுரேஷ் கடிதத்தை உரக்க வாசித்தான்.



அ.கோகுலதீபன்-கல்முனை.

"அன்புள்ள தேவிக் காவுக்கு!' .... ம்.... யார்ரா அந்தப் பிஃகரு? நம்ம வகுப்புகளில அப்படி யாருமில்லையே?" மேனனைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டான்.

"மட்டக்களப்புல இருக்கா.... ஆனா நேர்ல சந்திச்சதில்ல... பேனா நட்பால கிடைச்ச சொந்தம்... டேய் சுரேஷ் நான் அவள விரும்புறண்டா.....சொந்தமே இல்லாத எனக்கு அவளோட சொந்தம் கிடைச்ச பிறகு நான் இந்த உலகத்துல பிறந்ததப்பற்றி அதிகமாகச் சந்தோசப்படுறன் தெரியுமா? அவனது பேச்சில் புண்பட்ட நெஞ்சம் அன்புக்கு ஏங்குவது தெரிந்தது. அவனது உணர்வுகளின் ஆழம் வெளிப்பட்டது.

"அது சரி ஆனா எனக்கிட்டியே மறச்சிட்ட பார்த்தாயா?" சுரேஷ் மேனனின் காதருகே சொன்னான். "சொரிடா..... உன்னிட்ட சொல்லுறத்துக்காகத் தான் இருந்தன்..... அது ஒரு சேப்பிறைசாக இருக்கட்டுமெண்டு நாளைக்கு மட்டும் வெயிட் பண்ணினன் பிழைச்சிருச்சு!" என்றான். "என்னடா சொல்ற?" மேனனின் பேச்சை அவனால் புரிய முடியவில்லை.

"நாளைக்கு அவளோட பேர்த்டே.... அதால நாளைக்கு அவ வீட்ட போறம்!" என்றான் சந்தோஷமா, "ஓ.கே!" என்றபடி சுரேஸ் எழுந்து மேனனின் வயிற்றில் கிள்ளிவிட்டு விரிவுரைக்காகச் சென்றான். அவனுக்கு அப்பொழுது பாடம் எதுவுமில்லை. எழுந்து ஹஸ்டலுக்குப் போவதற்காகச் சைக்கிளைத் தள்ளினான்.

அன்றையப் பொழுது விரைவாகக் கரைந்தோடியது. அதிகாலை ஐந்து மணிக்குரிய எலாம் அடித்து ஓய்ந்தது. மேனன் போர்வையை விலக்கியபடி சுரேஷையும் தட்டி எழுப்பினான். "ஹப்பி பேர்த் டே மச்சான்!" சுரேஷ் மேனனைப் பார்த்துச் சொல்ல, "ஜோக்கடிக்கிறதுக்கு நேரமில்ல எழும்பி வெளிக்கிடு!" என்றபடி பாத்ரூமுக்குள் புகுந்தான் மேனன். இருவரும் அவசர அவசரமாக வெளிக்கிட்டபடி இரவு வாங்கி வைத்திருந்த பாண்துண்டைக் கடித்தபடி புறப்பட்டனர்.

நீண்ட நேரப் பயணத்தின் பின்னர் டவுனை அடைந்தனர். இருவருக்கும் அவ்விடம் புதிதாகையால் விலாசத்தை வைத்து வீதியால் வந்தவர்கள் போனவர்களென்று பலரிடம் கேட்டு வீட்டை அடையாளம் கண்டனர்.

"கோல்ட் கலர் பெயின்டடிச்ச வீடு.... பிளாக் கலர் கேட்.... இதேதான்.... மச்சான் பெரிய இடம் போல கிடக்குடா.... நீ லக்கிடா புடிச்சதும் புளியங்கொம்பாத்தான் புடிச்சிருக்கிற!" சுரேஷ் மேனனின் முதுகில் தட்டினான்.

உள்ளே நுழைந்தார்கள். வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது. மேனன் கோலிங் பெல்லை அழுத்தினான். ஒரு வினாடி கழித்து கதவு திறந்தது. அது அவளின் தாய் என்பதை அந்தப் பெண்ணின் தோற்றத்தின் மூலம் மேனன் அறிந்து கொண்டான்.

"அம்மா.... நான் மேனன்..... தேவிகா சொல்லியிருக்குமே? எப்படிச் சுகமாயிருக்கீங்களா?" சிரித்த முகத்துடன் மேனன் கேட்க, "நல்ல சுகம் தம்பி.... வாங்க.... உங்களைப் பத்தி புள்ள அடிக்கடி சொல்லும்!" இருவரும் உள்ளே நுழைந்ததும் ஹோலில் கேக் அடித்துக் கொண்டிருந்த தேவிகா தென்பட்டாள்.

"ஆ... மேனன் இருங்க.... இன்றைக்காவது வரவேண்டுமெண்டு எண்ணம் வந்திச்சே.... அதிசயம் தான்!" என்றபடி சிரித்தாள். அவள் சிரிப்பின் அழகையும், பேச்சின் இனிமையையும் கண்டு பூரிப்படைந்தான் மேனன். ஒரு கணம் இரசித்திருந்தான். "சே.... என்னமா வியர்க்குது!" என்றபடி சுரேஷ் கைக்குட்டையை எடுத்துத் துடைத்தான். "இருங்க ஃபேனைப் போடுறன்!" என்றபடி அயலில் சாத்தியிருந்த இரண்டு ஊன்றுகோல்களையும் எடுத்த பின்னர் தான் அவர்களையே தூக்கிவாரிப்போட்டது, தேவிகா கால் ஊனமானவள் என்ற செய்தி.

"டேய்... இவள் ஊனமெண்டு நீ எனக்குச் சொல்லல்லியே.... என்னடா நீ இப்படிச் செய்திட்ட!" சுரேஷ் மேனனின் காதருகே கேட்டான்.

'எனக்கே இன்றைக்குத் தானே தெரியும்!' மனதுக்குள் எண்ணிக் கொண்டான். பேசவில்லை. அவனால் இனிமேலும் சொந்தங்களைப் பறிகொடுப்பதற்கு முடியாது.

"டேய்.... அவ மனசுதாண்டா எனக்குப் புடிச்சிருந்தது... இதப் பாரு காதலெண்டா வேறெதையும் எதிர்பார்க்கிறதா இருக்கக் கூடாது என்றதும் தான் என்ட பொலிசி!" மேனனின் பேச்சில் வெளிவந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் நிதானமாகவே இருக்கிறான் என்பதை வெளிக்காட்டியது. அத்துடன் காதலின் முக்கியமான பரிமாணத்தையும் புரியவைத்தது.

# இலக்கிய நயம்



## இணைய முடியாதவர்கள்.... இணைந்தனர்!

### தருவது முழடில்யன்

கடற்கரையோரமாகக் கிடந்த அந்த இரு உடல்களும் கரங்களை இறுகக் கோர்த்தபடி கிடந்தன. அங்கே ஊரே திரண்டிருந்தது. போலீசார் ... அந்த உடல்களை வண்டியில் ஏற்றுவதிலும் இறந்தவர்கள் யார் என்பதை அறியும் விசாரணையிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

மக்கள் பிரிந்து பிரிந்து நின்று குழுக்குழுவாகத் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். எல்லோர் முகங்களிலும் கவலை தெரிந்தது.

"இது முட்டாள்தனமான முடிவு!" என்று வெறுப்போடு அந்த உடல்களைப் பார்த்துச் சொன்னான் ரமேஷ்.

"உனக்கு அவர்களைத் தெரியாது. அபாண்டமாகப் பேசாதே!" என்று சொல்லியபடியே சனங்களில்லாத இடமாகப் பார்த்து நடக்கத் தொடங்கினான் சுதர்சன்.

இருவரும் நிழல் இருந்த இடத்தில் மணல்மீது அமர்ந்து கொண்டனர்.

"சாவிலே ஒன்றுசேரலாம் என்று நம்புவது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான எண்ணம். எதுவாக இருந்தாலும் வாழ்ந்து போராடுவதில்தான் அர்த்தமிருக்குமே தவிர, இப்படி உயிரை முடித்துக் கொள்வதில் என்ன இருக்கிறது?"

"ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டுவிட்ட அவர்களைச் சேர்ந்து வாழ விடவில்லை இந்தச் சமூகம் என்னதான் செய்ய முடியும் அவர்களால்?"

"அதற்காக? இந்தக் கோழைத்தனத்தை அங்கீகரிப்பதா? காதலில் இணைய முடியாதவர்கள் எல்லாம் தற்கொலை செய்துகொள்வதானால் என்னவாகும் இந்த உலகம்?"

"சரி, இந்த உலகமும் புரிந்துகொள்ள வேண்டாமா? 'காதல் அடைதல் உயிரியற்கை. அது கட்டுக்குள் அடங்கும் தன்மையதோ' என்று பாரதிதாசன் கேட்கிறாரே அதுபோல அந்த உயிரியற்கையை மறுப்பது பாவம் என்று பாவ-புண்ணியத்தில் நம்பிக்கை கொண்ட இந்த மக்கள் உணர வேண்டாமோ?"

"அதற்காக? சாவதையா வரவேற்கிறாய் நீ?"

"இல்லை. காதல் கொள்ளுதலும், ஒருவரையொருவர் பிரிந்தால் வாழமுடியாது என்று தோன்றுவதும் உயிர்களின் இயற்கை என்றிருக்கும்போது, அதை எதிர்த்து இயல்பான வாழ்வுக்கு மாறாக நடந்துகொள்ளும் இந்த உலகம்தான் திருந்தவேண்டும் என்று சொல்கிறேன்."

"காதலர்கள் செத்தால் உலகம் திருந்திவிடும் என்கிறாயா?"

"காதலர்களைச் சாகவிடாமல் உலகம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிறேன்."

"உலகைத் திருத்துகிற வேலையையும் காதலர்கள் உயிரோடு இருந்துதானே செய்ய வேண்டும். இப்படி அவசரப்பட்டுத் தற்கொலை செய்துகொள்வது... மீண்டும் சொல்கிறேன்... சுத்தபைத்தியக்காரத்தனம் இல்லையா?"

"நீ சொல்வதில் இருக்கிற 'பைத்தியம்' என்ற மனநிலையே இழிவானதுதானா என்பது வேறு கேள்வி. இப்படி பல முடிவுகள் நிகழ்ந்தும் இந்த சமூகம் இன்னுமின்னும் காதலர்களை இத்தகைய முடிவுக்குத்தானே தள்ளிக் கொண்டிருக்கிறது? இதுவும் நாமெல்லோரும் வெட்கப்பட வேண்டியதுதான். அவர்கள் வாழ்வதற்கான நம்பிக்கையைக் கொடுப்பதற்கென்றேனும் ஏதும் அமைப்பு வைத்திருக்கிறோமா? அவர்கள் எத்தகைய சூழ்நிலையில் அந்த விரும்பத்தகாத முடிவுக்குத் தள்ளப்படுகிறார்கள் என்று நாம் பார்க்க வேண்டாமா?"

★★

ஒரு காலை நீட்டியும் மறுகாலை மடக்கியும் அவன் மரத்தின் அடிப்பகுதியில் சாய்ந்து அமர்ந்திருந்தான். அவன் கால்களுக்கிடையே ஏறத்தாழ படுத்த நிலையிலும் முகத்தை அவன் மார்பில் சாய்த்தும் கைகளால் முதுகை இறுகப் பற்றியபடியும், யாராவது இழுத்துவிலக்கி விடுவார்களோ என்ற அச்சத்தில் அவனைப் பற்றியிருப்பது போன்ற ஆவேசத்துடன் ஒட்டியிருந்தாள் அவள்.

"எங்காவது வேறு ஊருக்குப் போய்விடலாமா அன்பே?"

"எங்கே போவது? எம்மை யார் வரவேற்கப் போகிறார்கள்? எங்கும் நம்மை இருக்க விடமாட்டார்கள்....."

"உன் பெற்றோரும் உறவினர்களும் எதிர்பார்க்கும் அந்தஸ்துள்ளவனாக நான் ஒரே நாளில் மாறிவிட முடியுமென்றால் எவ்வளவு நல்லது!"

"உஷ்... அசட்டுத்தனமாக எல்லாம் பேசாதே! நம் நிலையைப் புரிந்துகொள்ளாதவர்கள் மத்தியில் வாழ்வதற்கு அவர்களது முகமுடிகளையா நாமும் அணிந்துகொள்ள வேண்டும்? நாம் துன்பத்தால் துடிக்கும் போது ஆறுதல் சொல்ல அருகில் யாருமில்லாத உலகத்தில் எதற்கு வாழ வேண்டும்?"

"என்ன... என்ன சொல்கிறாய் நீ?"

"காதலர்களை உலகமெல்லாம் காதலிக்கும், என்று ஒரு கவிஞன் சொன்னான். கதைகளில் காவியங்களில் வரும் காதலர்களைத்தான் உலகம் கவனிக்கும். நம்போன்ற காதலர்கள் படும் துன்பங்களைப் பார்க்காது உலகம். இது பெற்றோருக்கும் உறவினர்களுக்குமே உரிய விடயமாகவும் அவர்கள் தங்கள் வறட்டுப் பிடிவாதங்களுக்காக வலுக்கட்டாயமாகப் பிரித்துவிடச் செய்யும் சூழ்ச்சியை, கொடுமையை எல்லாம் 'குடும்பப் பிரச்சனைக்குள் தலையிடக் கூடாது' என்று சொல்லி விலகிப் போய்விடும் உலகம் நம் வலியை, துயரைக் கண்டு கொள்ளாத உலகத்தில் எந்த நம்பிக்கையில் வாழ முடிவெடுப்பது, சொல்?"

"சில நாட்களுக்குப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே..."

"உன்னைப் பிரிந்திருந்த சில நாட்கள் நான் பட்ட துன்பம் போதும். என்னை... என் துயரைப் புரிந்து கொள்ள யாருமில்லை. தூக்கமின்றித் துடித்திருக்கும் என்னை 'ஏன் உறங்காமல் அவஸ்தைப்படுகிறாய்?' என்று கேட்க ஒருவருமிருக்கவில்லை. எல்லோருக்கும் அவரவர் பாட்டுக்கு நிம்மதியாகத் தூங்குவார்கள். உன்னோடு சேர்ந்து வாழப் போகிறேன் என்று சொன்னால் மட்டும் எல்லோர் தூக்கத்தையும் விரட்டிவிட்டு இரவுபகலாக என்னை இம்சிப்பார்கள்... வானத்துக்கும் பூமிக்குமாகவே 'இது நடக்க விட மாட்டோம்' என்று குதிப்பார்கள். அவர்கள் என்னை நரகத்தில் தள்ளுவதற்கான முடிவை எடுத்துவிட்டார்கள். உன்னுடன் சேர்ந்து பயணிக்க எனக்கு வேறு வழியில்லை. இது உனக்குப் பயமாக இருக்கிறதா, சொல்லு...?

"பயமா? போ... உன்னோடு வருகையில் நான் இந்த மனிதப் பிறவியாகவே இருக்கப் போவதில்லை. தேவனாகவும் தேவதையாகவும் மாறி வானில் மிதக்க எனக்கு விருப்பமில்லாமல் போகுமா? இந்த நரகக்குழி வேண்டாம். நம்மை அந்த வானுலகில் உள்ளவர்கள்தான் புன்னகையோடு வரவேற்பார்கள்...."

"அன்பே என்னை இறுகத் தழுவு... உனக்குள் நான் புகுந்து விட இந்த உடல் கூடுதானே தடையாக இருக்கிறது. எவ்வளவு இறுக இறுக அணைத்தாலும் நம்மை ஒன்றுகலக்க விடாது இந்த பௌதீக உலகு. நாம் வாழ்வதற்குத் தகுதியற்றது இந்த ஊர். மேலே மேலே போவோம் வா...!"

**உறை பதி அன்று இத்துறை கெழு**
**-சிறுகுடி;**

**கானல் அம் சேர்ப்பன் கொடுமை எற்றி,**

**ஆனாத் துயரமொடு வருந்திப்,**
**-பானாள்**

**துஞ்சாது உறைநரொடு உசாவாத்**

**துயில் கண்மாக்களொடு நெட்டு**
**-இராவுடைத்தே.**

*(குறுந்தொகை: 145)*

# ஸ்போர்ட்ஸ்

## ... இடம் பெறுகிறார்



... வரலாற்றில் ...த்தியிருக்கும் ...பந்து வீச் ... இம்முறை ... போட்டி ...தெரிகிறது. ...இதுவரை 483 ...றி முதலிடத்தில் இருக்கிறார். அண்மையில் இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடரில் 3-1 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் தோல்வியைத் தழுவியிருந்தது. இதனையடுத்து ஒதுங்கியிருந்தார் வோல்ஷ்.

இம்முறை அவுஸ்திரேலியா செல்லும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் தான் இடம் பெற சம்மதம் தெரிவித்துள்ளார். இத்தகவலை மேற்கிந்தியத் தீவுகளின் தேர்வுக்குழு ஆணையாளர் மைக் ஃபிண்ட்லே தெரிவித்துள்ளார்.

இவரது பந்து வீச்சுப் பார்ட்னரான கேர்ட்லி அம்புரோஸ், இங்கிலாந்துப் பயணத்துடன் தனது ஓய்வை அறிவித்தார், அவருடன் வோல்ஷும் ஓய்வு பெறுவது போன்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

அந்த முடிவிலிருந்து விலகி, மறுபடி, அணியில் இடம் பெற வோல்ஷ் எடுத்திருக்கும் முடிவு மகிழ்ச்சியளித்திருப்பதாக, மைக் ஃபிண்ட்லே கூறியிருக்கிறார்.

## ஒரு போட்டியில் ஆடத்தடை

... அணியில் வேகப் ... ரெலிமாக்கஸ், ... விளையாடத் தடை ... நடந்த மினி ... அரையிறு ... எதிர்த்து தென்னாபிரிக்கா விளையாடியது.

அப்போது ரெலிமாக்கஸ் இந்திய துடுப்பாட்ட வீரர் ராகுல் ட்ராவிட்டை இடித்துச் சென்றார். இதன் காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபை ரெலிமாக்கஸிற்கு இத்தண்டனையை வழங்கியிருக்கிறது.

## இடம் பெறவில்லை



... அணி 13 ... டவையாக ... பயணம் செய் ... நாட்கள் தங் ... ஒரு தினம் ... விளையாடுகிறது.

இந்தப் போட்டித் தொடர்களில் ... வேகப்பந்துவீச்சாளரும் ... என அழைக்... அக்தர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

... ஏற்பட்ட ...இல்லை. இன் ...வது அக்தர் ...தால் அணி ... பாகிஸ்தானில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாவிட்டாலும், அடுத்த வருடம் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்யும் பாகிஸ்தான் அணியில் அக்தர் இடம் பெறுவார்.

# சிந்தியா பதில்கள்

**✪ எங்கு பார்த்தாலும் பிரச்சனைகளும் சச்சரவு சண்டையுமாகத்தானே இருக்கிறது. பிரச்சனைகள் தீர வழி என்ன?**

ஆர்.கனகரூபன், மன்னார்.

*பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தைதான் மனித நாகரிகம் உருவாகக் காரணம். மனிதனுடைய மிகப் பெரிய கண்டுபிடிப்பும் அதுதான். ஆனால்... பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்கள் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டுமானால், பிரச்சனையை முடிக்க அவர்கள் விரும்பியிருக்கவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அதற்குரிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு... வேண்டாம் கனகரூபன்! வேறு ஏதேனும் கேள்வி இருந்தால் எழுதி அனுப்புங்கள்.*

**✪ ஒவ்வொரு தேர்தல் முடிவிலும் முறைகேடுகள் நிகழ்ந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டதாகக் குற்றச்சாட்டு வருகிறதே. நீதியான முறையில் எங்களுக்குப் பிரதிநிதிகள் கிடைக்காதா?**

சி.தவமணிதேவி, கொழும்பு-06.

*ஜனநாயகத்தில் இவ்வளவுதான் முடியும். தேர்தலுக்கு என்று வருகிற எல்லாருமே ஏதோ ஓர் அளவில் முறையற்ற வேலைகளில் ஈடுபட்டே ஆகவேண்டும் என்பதாக இருக்கிறது இந்தச் சூழல். நமக்கு வேறு வழியில்லை. வென்று வருகிறவர்கள் நல்லது செய்கிறார்களா என்று பார்க்க வேண்டியதுதான். இன்று பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிக்க நினைக்கிற எல்லோருமே அவரவருக்கு முடிந்த அளவில் மோசடிகள் செய்யத் தயார்.*

*"நடந்து முடிந்த தேர்தல் ஒரு மோசடி!" தோல்வியுற்ற யாரைக் கேட்டாலும் இதைச் சொல்வார்கள்.*

**✪ வேகமாக வளர்ந்து வந்த 'பிரியாத வரம் வேண்டும்' படம் என்னாச்சு?**

ம.ஃறூப், மீராவோடை-04.

*பிரியாத வரத்தை ஷாலினியிடம் வாங்கி வைத்திருப்பதால், "கொடுத்த கால்ஷீட் முடிந்துவிட்டது. இனி அவளை நடிக்க விட முடியாது" என்கிறார் அஜீத்.*

**✪ சிந்தியா! நமது விருந்தோம்பல் கலாசாரம் இப்போது எப்படியிருக்கிது?**

ப.சங்கீதா, ஏறாவூர்-04.

*விருந்தை வரவேற்க நாங்கள் எங்கே பழகினோம்; விரட்டுவதற்குத்தான் பழகிவைத்திருக்கிறோம். "வாங்க", "வெல்கம்" என்று சொல்லவா நம் குழந்தைகளுக்குப் பழக்கியிருக்கிறோம்; "டாட்டா!" காண்பிக்கச் சொல்லித்தானே பார்த்து மகிழ்கிறோம்!*

**✪ எம்.ஆர்.ஆர்.வாசு, ராதாரவி, ராதிகா, நிரோஷா எல்லோரும் எம்.ஆர்.ராதாவின் பிள்ளைகள் என்பது உண்மையா?**

ரீ.சிவக்குமார், பொன்னாவரசன்குளம்.

*ஆமாம். இதைவிட வெளியே தெரியாமல் இன்னும் பலர் உண்டு என்று கேள்வி. எம்.ஆர்.ராதா பிரபலமான நாடகக் குழுவை வைத்திருந்தார். தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று நாடகங்கள் போட்டிருக்கிறார். ஒரு காலத்தில் அவரது நாடகங்கள் மிகப் பெரும் வசூலைக் குவித்தவை. அந்தந்த மாவட்டத்தில் கிடைக்கும் வசூலை அந்தந்த மாவட்டத்திலுள்ள தன் மனைவியரிடம் கொடுத்து விட்டு வந்து விடுவார் ராதா என்று எங்கேயோ படித்திருக்கிறேன்.*

**✪ தனியார் வானொலி சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளேன். நீங்கள் அறிவிப்பாளராக வருவீர்களா?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-02.

*'ஹலோ ஹலோ, வணக்கம்' என்று மிரட்டல், 'கெக்கெக்கே, என்ற கனைப்பு அல்லது சிரிப்பு,' 'ரம்பாவிடம் பெரிதாக உள்ளது எது?' என்று கேட்டு அதற்கு விடை, 'நேயர்களே! இது நீங்கள் எங்கள் வானொலியையும் அறிவிப்பாளர்களையும் பாராட்டுகின்ற நேரம்... எங்கே ஆரம்பியுங்கள்' என்ற வேண்டுகோள், 'உங்க குரல் ஸ்வீற்றாயிருக்கு' என்பவரிடம் 'ஹி ஹி அப்படியா? என்ன பாட்டுக் கேக்கப் போறீங்க, தொடர்ந்தும் எங்களோட பேசி உங்க அபிப்பிராயங்களை அடிக்கடி தெரிவிச்சுக் கொண்டிருங்க.....' என்பது போன்ற உரையாடல்களுக்கு உங்களது 'சேவை'யிலும் இடமளிப்பீர்கள் என்றால் அறிவிப்பாளராக என் பெயரையும் போட்டு வையுங்கள்!*



**✪ 'காதல் மன்னன்' தொடக்கம் 'பார்த்தேன் ரசித்தேன்' வரை பரத்வாஜ் அவர்களின் இசையமைப்பு அற்புதமாக இருக்கிறது. ஆயினும் அவருக்கு வாய்ப்புகள் குறைவாகவே இருப்பதாகத் தோன்றுகிறது. ஏன் சிந்தியா?**

நிர்மலன், இரத்மலானை.

*'ஒரு பூ எழுதும் கவிதை', 'பார்த்தேன் ரசித்தேன்', 'எனக்கெனவே பிறந்தவள் இவளோ'..... போன்ற பாடல்களிலெல்லாம் மெலோடி சாம்ராஜ்யம் அமைக்கும் பரத்வாஜை எனக்கும் பிடித்திருக்கிறது. படங்கள் குறைவாக இருந்தால் என்ன, பாடல்கள் முத்தாக இருந்தால் போதாதா?*

**✪ சிந்தியா! மலர்க் காம்புகளின் பாரம் தாங்காமல் இடை ஒடிந்து விடும் என்பதும், அனிச்ச மலர் பட்டு பாதங்கள் நோகும் என்பதும், வண்டு சிறகடிப்பதால் வரும் காற்றுக்கு மேனி துவண்டுவிடும் என்பதுமாக... அரசன் போடும் சோற்றைச் சாப்பிட்டுவிட்டு அதிகபட்ச பொய்யர்களாயிருந்த தமிழ்ப் புலவர்கள் பற்றி என்ன சொல்வீர்கள்?**

ஆர்.வதனி, வவுனியா.

*புலவர்கள் என்றுவந்துவிட்டால் தமிழ் என்ன லத்தீன் என்ன, உருது என்ன தெலுங்கு என்ன எல்லோரும் ஒரே கு.ஊ.ம.தான். 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹிந்திக் கவிஞரான பிஹாரி என்பவரின் ஒரு கவிதையைப் பாருங்கள்!*

"தோழி!
எத்தனை முறை உன்னிடம் கூறியிருக்கிறேன்?
படுக்கையில்
காதலரிடம் கோபித்துக் கொண்டு
முகத்தைத் திருப்பிக்கொள்ளாதே என்று
தலையணை அருகே
தூவியிருந்த ரோஜா இதழ்கள்
வழவழப்பான உனது கன்னத்தை
கீறி விட்டதே!"

**✪ சிந்தியா! போரில் வென்றவர்கள் பக்கம்தானா நியாயம் இருக்கும்?**

கு.பிரதீபன், யாழ்ப்பாணம்.

*வென்றவன் சொல்லே வேதம் என்றானதும் எல்லாம் பழைய கதை. போரில் வெற்றியும் தோல்வியும் இல்லை; அழிவு மட்டும்தான்!*

**✪ வடக்கு கிழக்கு பொதுத்தேர்தல் முடிவுகள் பற்றி என்ன சொல்வீர்கள்?**

ஜவாத், புத்தளம்.

*'பரபரப்பான வீராவேசம் இளைஞர்களுக்கு; பாராளுமன்றக் கதிரைகள் எங்களுக்கு!' என்று மக்களை இருட்டில் வைத்துக் கொண்டு, வாயால் பதவியைக் காப்பாற்றி வந்த கூட்டணியினரின் செல்வாக்கு சரிந்து வருவதை தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன. தமிழ் மக்களுக்கு இனி விடிவு பிறக்க வழிதிறக்கலாம்.*

**✪ ஒரு மனைவி தன் கணவனிடம் இருந்து எதிர்பார்ப்பது என்ன?**

ம.கிறேசன், நாவற்காடு.

*கணவன் தன் மனைவியிடம் இருந்து எதிர்பார்ப்பதை!*

**✪ பல தப்புக்களைத் தங்களிடம் வைத்துக் கொண்டு மற்றவர்களின் தப்புக்களை பெரிதாகச் சொல்லிச் சொல்லி அலசுபவர்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?**

வி.யுவராஜினி, திருக்கோயில்.

*அப்படியானவர்கள் உங்களிடம் வந்து தப்புகளை விலாவாரியாகச் சொல்ல ஆரம்பித்தால், நீங்கள் எப்போதும் மிகச் சரியாகவே இருக்கிறீர்கள் என்று சொல்ல வேண்டாம். அவர் ஒருகணம் நிறுத்தி உங்களைக் குழப்பத்தோடு பார்ப்பார். அப்போது இன்னும் நிதானமாக "சரியாக இருக்கும் என்னையே தப்பு என்று நீங்கள் சொல்லும் போது, தப்புத் தப்பாகப் பேசும் உங்களை சரியாகப் பேசுகிறீர்கள் என்று நான் சொல்லக் கூடாதா?" என்று கேட்டுவிடுங்கள்.*


# மன்னாதி மன்னன் 28

மன்னாதி மன்னனாகிய விக்கிரமாதித்தன் கதைகளில் பல கிளைக் கதைகள் உள்ளன. விக்கிரமாதித்தன் ஆட்சிபுரிந்த காலத்தில் அவன் அமர்ந்து, நீதி தவறாமல் சிறப்பாக ஆட்சி செலுத்திய, இந்திரனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட சிம்மாசனம் போஜமகாராஜனின் கைக்குக் கிட்டியது. இருப்பினும் போஜ மன்னன் எவ்வளவோ முயன்றும் அந்தச் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து ஆட்சி செலுத்த முடியாமல் போய்விட்டது.

அந்தச் சிம்மாசனத்தில் முப்பத்திரண்டு படிகள் இருந்தன. அப்படிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதுமை எழுந்து நின்று மன்னனை மேற்கொண்டு சிம்மாசனத்தில் ஏறவொட்டாமல் தடுத்தன. விக்கிரமாதித்தனின் வீரதீர பராக்கிரமச் செயல்களை விளக்குமுகமாக, போஜராஜனுக்கு பதுமைகள் ஒவ்வொன்றும் அறிவுரை கூற ஆரம்பித்தன.

முதலிரண்டு படிகளிலுமுள்ள விநோத ரஞ்சிதப்பதுமையும் மதனாபிஷேக வல்லி பதுமையும் விக்கிரமாதித்தன் பற்றிய கதைகளைக் கூறின. இரண்டாவது படியில் இருந்த பதுமை வேதாளம் சொன்ன கதைகளாக மொத்தம் இருபத்து நான்கு புதிர்க்கதைகளைக் கூறியது. அதனைத் தொடர்ந்து வேதாளம் தன்னுடைய சொந்தக் கதையையும் கூறியதாக அப்பதுமை கூறிமுடித்தது.

போஜமன்னன் மூன்றாவது நாளன்று மூன்றாவது படியில் ஏறியதும், அப்படியில் இருந்த கோமளவல்லிப் பதுமை, மீனின்



வயிற்றில் சிக்கிய சிறுவனை விக்கிர மாதித்தன் எவ்வாறு மீட்டு வெளியில் கொண்டு வந்தான் என்ற கதையைக் கூறத் தொடங்கியது. இந்தக் கதையிலும் பல கிளைக்கதைகள் உள்ளன.

## இரத்தினவியாபாரி

மீனின் வயிற்றிலிருந்து சிறுவனை மீட்டெடுக்கவிக்கிரமாதித்தன் தன்னிடமிருந்த பறக்கும் கம்பளத்தின் உதவியுடன் புட்கரத் தீவை அடைகிறான். அந்த நாட்டரசன் சம்புநாதன், தன்னுடைய அரண்மனையை சம்புநாதபுரம் என்ற நகரில் அமைத்து ஆட்சி புரிந்து வந்தான். அவனுடைய மகள் ஏலக்கரம்பைக்கு சுயம்வரம் நடத்துவதற்காக பல நாட்டு அரசர்களுக்கும் மன்னன் சம்புநாதன் ஓலைகளை அனுப்பிவைத்திருந்தான் ஐம்பத்தாறு தேசங்களிலிருந்தும் மன்னர்களும் இளவரசர்களும் சுயம்வரத்தில் கலந்து கொள்வதற்காக சம்புநாத புரத்துக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

சம்புநாதபுரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்தக்காலத்தில்தான் மன்னன் விக்கிரமாதித்தனும் அந் நகரத்தை வந்தடைந்திருந்தான்.

சம்புநாத மன்னனின் மகள் ஏலக்கரம்பைக்கு சுயம்வரவிழா நடைபெற விருப்பதை விக்கிரமாதித்தனும் அறிந்து கொண்டான். வேதாளத்தின் உதவியுடன் விலை உயர்ந்த இரத்தினக் கற்களைத்தருவித்து, தானும் ஓர் இரத்தின வியாபாரிபோல் வேடம் புனைந்து கொண்டு அந்நகரின் பிரதான வீதியில் சனநடமாட்டமுள்ள ஒரு பகுதியில் கம்பளத்தை விரித்து இரத்தினங்களை அதன் மீது பரப்பி வைத்துக் கொண்டிருந்தான்.

சுயம்வரத்துக்காக அந்நகருக்கு வந்திருந்த பல தேசத்து மன்னர்களும் இரத்தின வியாபாரியாக வேடம் புனைந்திருந்த விக்கிரமாதித்தனை வளைத்து நின்று இரத்தினக் கற்களை வாங்கிக் கொண்டிருந்தனர். அந்த மன்னர்கள் அனைவரும் விக்கிரமாதித்தனுடைய வார்த்தை ஜாலங்களை இரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

சுயம்வரத்துக்கு வந்திருந்த மன்னர்களைக் காணாமல் சம்புநாத மன்னன் தவித்தான். மன்னர்கள் எல்லோரும்இரத்தின வியாபாரியின் அருகில் தான் சூழ்ந்து நிற்கின்றனர் என்பதை அறிந்து அங்கு சென்றான்.

## சுயம்வரத்தில் இரத்தின வியாபாரி

இரத்தின வியாபாரியிடம்இருந்த இரத்தினங்களைக் கண்டதும் சம்புநாத மன்னன் அந்தக் கற்களின் அழகைக் கண்டு இரத்தின வியாபாரியிடம் பேரம் பேசத் தொடங்கினான்.

சுயம்வரத்துக்கு வந்திருந்த மன்னர்களைத் தேடிச் சென்ற சம்புநாத மன்னனையும் காணாத அமைச்சர்கள், அவர்கள் அனைவரையும்பிரதான வீதியிலிருந்த இரத்தின வியாபாரியிடம் கண்டனர். இளவரசியின் சுயம்வரத்துக்கான சுபநேரம் நெருங்கி விட்டதை மன்னர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். சம்புநாத மன்னனும் அப்பொழுதுதான் தன்னிலை உணர்ந்து மன்னர்களுடன் இரத்தினவியாபாரியையும் அரண்மனைக்கு வருமாறு அழைத்துக் கொண்டு சென்றான்.

அரண்மனையில் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் சுயம்வர விழா தொடங்கியது. அழகுப் பதுமைபோல் சிறப்பான அலங்காரங்களுடன் கைகளில் மலர் மாலை ஏந்திய வண்ணம் இளவரசி ஏலக்கரம்பை வந்து சேர்ந்தாள். அரசர்களும் தங்களுக்குத்தான் இளவரசி மாலை சூடுவாள் என்று கனவு கண்டு கொண்டிருந்தனர். அரசர்கள் ஒவ்வொருவரையும் தோழிகள் அறிமுகம் செய்து வைக்க, அவர்கள் ஒவ்வொருவரையும்பார்த்து விட்டு இளவரசி நடந்து சென்றாள்.

இரத்தின வியாபாரி போல் தன் உருவை மாற்றிக் கொண்டிருந்த விக்கிரமாதித்த மன்னன் முன்வந்து நின்றதும் இளவரசி அந்த மன்னனுடைய அழகில் மயங்கி விட்டாள். தன்னுடைய கைகளிலிருந்த மாலையை விக்கிரமாதித்தனின் கழுத்தில் சூடினாள்.

அரசர்களாகிய தங்களில் ஒருவரைத் தன் மணாளனாக இளவரசி ஏலக்கரம்பை ஏற்பாள் என்று கருதிய மன்னர்கள் அனைவரும் ஏமாற்றமடைந்தனர். அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாலை சூடாமல், சாதாரண இரத்தின வியாபாரிக்கு இளவரசி மாலை சூடியதனால் அரசர்கள் கடும் கோபமுற்றனர். சம்புநாத மன்னனிடம் சென்று தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தனர். தங்களை அழைத்து அவமதித்து விட்டதாகக் குற்றம் கூறினர். தனது மகளின் செயல் தனக்கே பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டதாக ஆத்திரமடைந்த மன்னன் சம்புநாதன் நேராக அந்தப்புரம் சென்று மகள் ஏலக்கரம்பையைத் திட்டினார்.

ஏலக்கரம்பை தனது தந்தையிடம், "அப்பா, நான் வரித்துக் கொண்ட மணவாளன் நீங்கள் நினைப்பதுபோல் சாதாரண வியாபாரி யல்ல; அவர் ஒரு மகாபுருஷர் என்பதை அறிந்து கொண்டே அவரை என் மணாளனாகத் தேர்ந்தெடுத்தேன். இன்னும் சில நாட்களில் அவருடைய பெருமையை உங்களுக்கு நான் உணர்த்துவேன். அதுவரை சற்றுப் பொறுமையாக இருங்கள்,"என்று கூறினாள்.

சம்புநாத மன்னன் வேறு வழியின்றி இரத்தின வியாபாரியை தன் மருமகனாக ஏற்றுக் கொள்ள முன்வந்தார். தனது மருமகனை அரண்மனைக்கு அழைத்து வந்து உரிய மரியாதைகளைச் செய்து மணமேடையில் அமர்த்தினார். அம்மணமேடைக்கு அப்பால் ஒரு பெரிய திரைச் சீலை கட்டப்பட்டிருந்தது. திரைச்சீலைக்கு அப்பால் இளவரசி ஏலக்கரம்பை அமர்ந்திருந்தாள். அந்த மண்டபத்துள் வேறு யாரும் இருக்கவில்லை. வெகு நேரம்வரை இருவரும் எதுவித வார்த்தையும் பேசாமல் அமர்ந்திருந்தனர்.

விக்கிரமாதித்தன் வேதாளத்தை அழைத்து திரைச்சீலைக்குள் செல்லுமாறு ஏவினான். ஏலக்கரம்பையின் கண்களுக்குத் தெரியாமல் திரைச்சீலையோடு இணைந்து கொண்ட வேதாளத்திடம் விக்கிரமாதித்தன். "திரைச்சீலையே. உனக்குப்பின்னால் மறைந்திருக்கும் இளவரசி என் கழுத்தில் மாலை சூட்டினாள். ஆகவே அவள் என் மனைவி. ஆனால் என் மனைவி என்னுடன் ஒரு வார்த்தையும் பேசாது இருக்கிறாள். இதற்கான காரணமும் தெரியவில்லை. ஆகவே நீயாவது ஒரு கதை கூறமாட்டாயா?" என்று கேட்டான். அதற்கு திரைச்சீலையே பதில் கூறுவதுபோல வேதாளம், "என்னை நாலு புறமும் இறுக்கமாகக் கட்டி வைத்திருக்கிறார்கள். நான் மூச்சுவிடவே முடியாமல் தவிக்கிறேன். இவ் வாறிருக்கையில், என்னால் எவ்வாறு கதை கூறமுடியும்?" என்று கேட்டது.

இவ்வாறு திரைச்சீலை கூறியதும் ஏலக்கரம்பை வியப்படைந்தாள். எழுந்து திரைச்சீலையில் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்து விட்டாள். திரைச்சீலை தரையில் விழுந்தது.

தரையில் கிடந்த திரைச்சீலையைப் பார்த்து இரத்தின வியாபாரி வேடம் புனைந்த மன்னன் விக்கிரமாதித்தன், திரைச்சிலையே, நீ பட்ட துயரத்தைக் கண்டு இளவரசி மனமிரங்கி உனக்கு விடுதலையளித்துள்ளாள். ஆகவே இப்போது நீ நல்ல கதையொன்று கூறலாமல்லவா என்று சொன்னான்.

திரைச்சீலை கதை கூறத் தொடங்கியது.

## திரைச்சீலை சொன்ன கதை

சந்திரபுரி என்ற நாட்டை கந்தநாதன் என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான் நீண்டகாலம் இம் மன்னனுக்குக் குழந்தை பிறக்கவில்லை. எனவே இவன் ஒருவர் பின் ஒருவராக பல பெண்களை மணமுடித்தான். எவருக்கும் குழந்தை பிறக்காதமையினால் நூற்று இருபது பெண்களைத் திருமணம் செய்தான். எவருக்குமே குழந்தை பிறக்கவில்லை. தனக்குப் பின் நாட்டை ஆழ்வதற்கு தனக்கு ஒரு வாரிசு இல்லையே என்ற வேதனை அதிகரித்தது.

அந்த நாட்டுக்கு வந்திருந்த ஒரு முனிவர் கூறிய அறிவுரையைக் கேட்டு மன்னன்

## இராஜகுமாரன்

கந்தநாதன் தவமியற்றினான். இதன் பயனாக அவனுடைய மூத்த மனைவிக்கு மட்டும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக் குழந்தைக்கு காந்தரூபன் என்ற பெயர் சூட்டினான்.

காந்தரூபன் தனது பதினாறு வயது வரை கல்வி கற்றதுடன் பலகலைகளையும் கற்றுத் தேறினான். அழகும் அறிவும் பொருந்திய வாலிபனாகத் நிகழ்ந்த காந்தரூபனுக்கு தகுந்த ஒரு இளவரசியைத் தேடி மணம் முடித்து வைக்க மன்னன் கந்தநாதன் விரும்பினான். ஆனால் எங்கு தேடியும் அவனுக்கேற்ற ஒரு மணப்பெண்ணைத் தேடி எடுப்பது கடினமாகவே இருந்தது. நாட்டிலுள்ள சிறந்த ஓவியரைக் கொண்டு காந்தரூபனின் படத்தை வரைந்து மன்னன் கந்தநாதன் தன்னுடைய அமைச்சர் ஒருவரை வெளி நாடுகளில் தன் மகனுக்கேற்ற ஓர் இளவரசியை தேர்ந்தெடுத்து வருமாறு அனுப்பி வைத்தான்.

*(மன்னன் வருவான்...)*

# சிரிக்க... சிந்திக்க...

### சபாஷ்



இத்தாலியன் ஒருவன் அமெரிக்காவின் குடியுரிமை கேட்டு விண்ணப்பித்தான். நீதிபதி அவனைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"அமெரிக்காவில் எத்தனை மாகாணங்கள் இருக்கின்றன?" என்று கேட்டார்.

இத்தாலியன், "தெரியாது. நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?" என்றான்

நீதிபதி வியப்புடன், "என்ன கேட்கப் போகிறாய்?" என்றார்.

"ஒரு தோடம்பழத்தில் எத்தனை சுளைகள் இருக்கின்றன?" என்று கேட்டான் இத்தாலியன்.

நீதிபதி, "தெரியாது" என்று பதில் சொன்னார்.

உடனே இத்தாலியன், பழம் விற்பது என் தொழில் அதைப்பற்றிக் கேட்டால் உங்களுக்குத் தெரியாது. அது போலத்தான் நீங்கள் கேட்ட கேள்வியும்," என்றான்.

அசந்துபோன நீதிபதி அவனுக்குக் குடியுரிமை வழங்கினார்.

### சோகம்



ஒருவன் மற்றவனைப் பார்த்துக் கேட்டான், "உனக்கு ஏழைச் சொந்தக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று.

மற்றவன் அதற்கு,

"எனக்குத் தெரிந்து அப்படியாரும் இல்லை, "என்றான்.

முதலாமவன் திரும்பவும், "உனக்குப் பணக்கார சொந்தக்காரர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"ப்ச், என்னைத் தெரிந்தவர்கள் அப்படியாரும் இல்லை" என்றான் அவன்.

### கடவுளுக்கே.....



வட்டிக்கடைக்காரனிடம் சென்ற, ஒருவன் வட்டிக்குப் பணம் கேட்டான்.

வட்டிக் கடைக்காரனோ, 9 சதவீதம் வட்டி என்று ஒரு பலகையில் எழுதிக் காட்டினான்.

உடனே வந்தவன் அதிர்ந்து போய், "9 சதவீத வட்டியா? இது சட்டப்படி குற்றம். இது கடவுளுக்கே பொறுக்காது" என்று புலம்பினான்.

"நீ பயப்படாதே சட்டத்திற்குக் கண் தெரியாது. நான் 9 என்று எழுதியிருப்பது மேலேயிருந்து பார்த்தால் கடவுளுக்கு 6 என்றுதான் தெரியும். அதனால் கடவுளைப் பற்றியும் கவலையில்லை" என்றான் வட்டிக்கடைக்காரன்.

### அடப்பாவமே!



கணவன் - மனைவி இருவரும் விவாகரத்துச் செய்து கொண்டார்கள். குழந்தை அம்மாவிடம் வளர வேண்டும் என்றும், குழந்தைக்கு 16 வயது வரும்வரை கணவன் மாதா மாதம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பானது.

16 வயதானபோது மகன் தகப்பனிடம் பணம் வாங்கிக் கொள்ளச் சென்றான். அவனிடம் தந்தை.

"இன்றிலிருந்து உனக்கு வயது 16. அதனால் நான் இனி மாதா மாதம் பணம் தரமாட்டேன். இன்றிலிருந்து நான் உன் அப்பா இல்லை. புரிகிறதா?" என்று கடுப்புடன் சொன்னார்.

"நீங்கள் என்னுடைய அப்பா இல்லை என்ற விஷயத்தை பத்து வருடங்களுக்கு முன்பே அம்மா என்னிடம் சொல்லி விட்டார்" என்றான் சிறுவன் அலட்சியமாக.



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)




பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிடப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapik.com/arul
436631

# பாட(லழ)கி

→**மே**ற்கத்திய பொப் இசைப் பாடகிகளில் தற்போது கலக்கோ கலக்கென்று கலக்கி வரும் பாடகிதான் இந்த அழகி. பெயர் பிரிட்னி ஸ்பியர்ஸ்.

பிரார்த்தனைக்குழுவில் பாட ஆரம்பித்து, தொலைக்காட்சித் தொடர்களில் குட்டிப் பெண்ணாக நடிக்கத் தொடங்கி, 'பேபி... பேபி...' பாடல் மூலம் பிரபலமானவர்தான் இந்தப் பாடகி.



வயது பதினெட்டுத்தான் எனினும் அவரது புகழ் எட்டுத்திக்கும் பரவி, முதலிடத்தில் இருக்கின்றார். பிப்பி என்ற செல்லப்பெயரைக் கொண்ட பிரிட்னி ஸ்பியர்ஸைச் செல்லப் பெயரைச் சொல்லி அழைப்பது பிடிக்காதாம்.

பிரபலமானால் கிசுகிசுக்களில் சிக்கிக் கொள்வது கட்டாயம் போலும். இவரும் பல கிசுகிசுக்களில் சிக்கியுள்ளார். அதிலும் பெரிய இடத்துப் பிள்ளை ஒருவருடன் பலமாகக் கிசுகிசுக்கப்படுகிறார்.

அவர் வேறு யாருமல்ல, இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் புதல்வர் இளவரசர் வில்லியம் தான்.




SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# அழிவு



↑ **ஆ**பிரிக்காவிலுள்ள கொங்கோ, கெமரூன் போன்ற நாடுகளிலுள்ள காடுகளில் மட்டும் கூட்டம் கூட்டமாக அலைந்து திரியும் ஒருவகைக் குரங்கு 'மண்ட்றில்' எனப்படுவது. இதனுடைய உடல் நீளமாகவும் முகம் சிகப்பாகவும் காணப்படும். இலைகுழைகள், காய்கறிகள் ஆகியவற்றைத் தேடி பகலில் அலைந்துதிரியும். இக்குரங்குகள் இன்று எண்ணிக்கையில் மிகவும் அருகி விட்டன. இவை 10 முதல் 15 வரையிலான எண்ணிக்கையில்தான் காணப்படும். ஆண்குரங்குகள் 95 செ.மீற்றர் வரையும் பெண் குரங்குள் 60 செ.மீட்டர் வரையும் வளர்ச்சியடையும். ஆண் குரங்குகள் 30 கிலோவும் பெண் குரங்குகள் 15 கிலோவும் எடை கொண்டதாக இருக்கும்.

மண்ட்றில் இனக்குரங்குகள் பெரும்பாலும் உயிரியல் காட்சிச்சாலைகளில் காணப்படுகின்றன. அழிந்து கொண்டு போகும் இக்குரங்கினத்தைக் காப்பாற்ற பல நிறுவனங்கள் முயற்சி எடுத்து வருகின்றன.

# அலை ஆடை



↑ **வ**கைவகையான ஆடை அணிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் போட்டி போட்டுக்கொண்டு பல நிறுவனங்கள் முன்வருகின்றன. சாதாரணமாக ஒரு மனிதனுக்கு அன்றாடப் பாவனைக்கு கிட்டத்தட்ட ஒரே பாணியிலான உடைகளே தேவைப்படுகின்றன. இருப்பினும் கோடைகாலம், குளிர்காலம் ஆகியவற்றுக்கென தனித்தனி ஆடைகள் சில நாடுகளில் அத்தியாவசியமாகின்றன. இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஆடைஅணி அலங்காரக்காட்சிகளை அவ்வப்போது வைத்து விளம்பரப்படுத்தி வருகின்றன.

மேலை நாடுகளில் இடம்பெறும் விளையாட்டுகளில் பங்குபற்றுவோர் அணியும் ஆடைகளையும் சாதாரண பொதுமக்கள் வாங்கிப் பயன்படுத்து வதுண்டு.


'சேர்ஃப்' என்பது அலைசெறிந்த கடலின் மீதோ நீர்நிலைகளின் மீதோ சேர்ஃப் என்ற தோணிபோன்ற நட்டையான பாதணியை அணிந்து வேகமாகச் சறுக்கி ஓடுவதான ஒரு விளையாட்டு. இதில் பங்குபற்றுபவர்கள் அணியும் ஆடைக்கு 'சேர்ஃப் வெயார்' என்று கூறுவார்கள். இந்த விளையாட்டில் பங்குபற்றாதவர்களும் கூட இதற்கான பிரத்தியேக ஆடையை அணிவதில் நாட்டம் கொள்ளுகின்றனர். இதன்காரணமாக 'குவிக்சில்வர்' என்ற சேர்ஃப் வெயார் நிறுவனம் ஆடைகளை மிக அதிகமாக உற்பத்தி செய்து சந்தையில் விற்பனைக்கு விட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. 1998ம் ஆண்டு மட்டும் 31 கோடி 60 இலட்சம் டொலர் பெறுமதியான சேர்ஃப் வெயார் ஆடைகளை உற்பத்தி செய்து சாதனையை நிலைநாட்டியுள்ளது.



# சிலை மனிதர்கள்

↓ **ஆ**டவர் சிலைகளுக்கு மத்தியில் ஒய்யாரமாக வருகிறார். பேரிளம் பெண்ணொருத்தி என்று எண்ணத் தோன்றும். அதுதான் இல்லை. வண்ணப் பூச்சுகளுடன் சிலைகளாக நிற்பவர்கள் ஆண் மொடல்கள்.

நியூயோர்க் நகரில் நடந்த 'ஃபாஷன் ஷோ' ஒன்றுதான் இது. அழகி வரும் வலத்தைப் பார்த்து சிலையாகி விட்டார்களோ?



# வாய் வீச்சு

↑ **சி**லர் மற்றவர்களைக் குறைகூறி பழி சுமத்துவதில் அசகாயசூரர்களாக விளங்குவார்கள். நல்ல நிலையில் உள்ளவர்களைக் குறைகூறி, அவர்கள் மீது வேண்டாத குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மானபங்கப்படுத்துவார்கள்.

கடந்த ஒரு வருடகாலத்துக்குள் கிரிக்கெட் உலகில் பயங்கரச் சூறாவளி சுழன்றடித்தது. இச்சூறாவளி சிறப்பானதோர் இடத்தைப் பெற்றிருந்த இந்தியக்கிரிக்கெட் அணியையும் மிகக் கடுமையாகத் தாக்கியது. அஸாருதீன், அஜய் ஜடேஜா, நிக்கில் சோப்ரா போன்ற முன்னணி ஆட்டக்காரர்களையும், பல சாதனைகளை நிலைநாட்டிய கபில் தேவையும் இந்தியக்கிரிக்கெட் அணியிலிருந்து அந்தச் சூறாவளி பிடுங்கி எறிந்தது.

கிரிக்கெட் ஆட்டத்திலிருந்து விலகி பயிற்சியாளராக இயங்கிய கபில்தேவ் அப்பதவியையும் விட்டு வெளியேறநேர்ந்தது.

இந்தத் துயரமான சூழ்நிலையை உருவாக்கியவர் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மனோஜ் பிரபாகர் இங்கு தன் மனைவி சந்தியாவுடன் காணப்படுகிறார். 1994ம் ஆண்டு இடம்பெற்ற, பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணிக்குச் சாதகமாக ஆடும் படியும் அதற்காக 25 இலட்சம் ரூபாய் இலஞ்சமாகத் தரலாம் என கபில்தேவ் தன்னிடம் பேரம் பேசியதாக மனோஜ் பிரபாகர் குற்றம் சாட்டியிருந்தார். தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளில் இந்த குற்றச்சாட்டில் உண்மை எதுவுமில்லை என்று இப்பொழுது முடிவாகியிருக்கிறது. இருப்பினும் பயிற்சியாளர் பதவியிலிருந்து, இந்தக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து வெளியேறிய கபில் தேவ் மீண்டும் அப்பதவியில் இணைந்து கொள்ளவில்லை. விரக்தியடைந்த நிலையில் இன்னும் அவர் இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



ஆனைக்கோட்டையை சேர்ந்த ராசா-சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வன் றிசி தனது முதலாவது பிறந்தநாளை (19.10.2000) வியாழக்கிழமை (Paris) உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா (France) மாமா, அத்தை, மச்சான்மார், கிருஷ்ணா, வேணி, அபிலா, லங்கன் அத்தான், தீபிகா அக்கா, சொருபன் அங்கிள், சர்வேஸ் அங்கிள் (France), சதி அன்ரா குடும்பம் (France), பெரியப்பா ஜெகன்-பெரியம்மா மஞ்சுளா, கீர்த்திகன் அண்ணா, (Holland) சிவா மாமா (London) மயில் அண்ணா, லிங்கன் அண்ணா, (Burkina Faso) பெரியப்பா, பெரியம்மா, பாலுஜன் அண்ணா, (Colombo) அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சின்ன ஐயா, சின்ன அம்மா ஆனைக் ஐயா, ஆனைக் அம்மா, கீதா அக்கா, தாஸ், குகன் அண்ணா (Jaffna), அம்மம்மா, ராசன் மாமா, பெரியமாமா, பாபு மாமி, மச்சான்மார், மதுரா, சரண்யா, மச்சான்மார் நிமல்கபில், கிருஷ்ணா அக்கா, சுகந்தி சித்தி (Ecuba) கெங்கா சித்தி (Switzerland) மற்றும் உற்றார் உறவினர்,நண்பர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் துணையுடன் பக்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

செல்வன் றிசி 19.10.2000